உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
பக்கங்கள் - 40
விலை - 40ரூபா
சுடர் 34 கதிர் 318 புரட்டாதி 26ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை 13 ஒக்ரோபர் 2019 வள்ளுவர் ஆண்டு 2050

# அனைத்து மக்களின் ஆதரவு பெற்றே ஆட்சி

## புதிய ஜனநாயக முன்னணியின் வேட்பாளர் சஜித் தெரிவிப்பு

**கொழும்பு, ஒக்ரோபர் 13**
**இந்த நாட்டை ஆட்சி செய்ய வேண்டுமானால் சிங்கள மக்களை ஆதரிப்பதைப் போன்றே தமிழ், முஸ்லிம் மக்களையும் அரவணைக்க வேண்டும். ஒரு இனத்துக்கு மாத்திரம் முன்னுரிமை கொடுத்து ஏனைய இனங்களை நிராகரித்தால் நாடு தீப்பிடித்து எரியும்.**
**இவ்வாறு புதிய ஜனநாயக முன்னணியின் அரச தலைவர் வேட்பாளர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.**
37

## வாக்குச் சீட்டு அச்சிடும் பணிகள் மும்முரம்

கொழும்பு, ஒக்.13
அரச தலைவர் தேர்தலுக்கான வாக்காளர் சீட்டுக்களை எதிர்வரும் ஆறாம் திகதிக்கு முன்னர் அச்சிட்டு தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் ஒப்படைப்பதற்கு எதிர்பார்த்துள்ளதாக அரச அச்சகக் கூட்டுத் தாபனம் தெரிவித்துள்ளது.
தற்போது வாக்களர் சீட்டுக்களை அச்சிடும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்றும், சுமார் 1 கோடியே 70 லட்சம் வாக்குச் சீட்டுக்கள் அச்சிடப்படுகின்றன என்றும் அரச அச்சகர் கங்கானி கல்பனா லியனகே தெரிவித்தார்.
வாக்குச் சீட்டு 35

## தபால் மூல வாக்களிப்புக்கு 7 லட்சம் பேர் விண்ணப்பம்

கொழும்பு, ஒக்.13
அரச தலைவர் தேர்தலில் தபால் மூலம் வாக்குகளைப் பதிவு செய்ய 7 லட்சம் பேர் விண்ணப்பித்துள்ளனர் என்று தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.
கடந்த 4ஆம் திகதியுடன் தபால் மூல வாக்களிப்புக்கான விண்ண ப்பங்களை ஏற்கும் நடவடிக்கைகள் நிறைவடைந்துள்ளன. தற்போது கிடைத்துள்ள சுமார் 7 லட்சம் விண்ணப்பங்களில் இருந்து தகுதியானவர்களைத் தெரிவு செய்யும் பரிசீலனை நட 37

## தேர்தல் முறைகேடு இதுவரை 375 முறைப்பாடு

கொழும்பு, ஒக்.13
அரச தலைவர் தேர்தலுடன் தொடர்புடைய 375 முறைப்பாடுகள் இதுவரை பதிவு செய்யப்பட்டுள்ள என்று தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.
கடந்த 8 ஆம் திகதி தொடக்கம் நேற்றுமுன்தினம்வரை ர்தல் வன்முறைகள் தொடர்பான முறைப்பாடுகள் கிடைத்துள்ள நிலையில், தேர்தல் விதி மீறல்கள் தொடர்பாக 360 முறைப்பாடுகளும், வன்முறை சம்பவங்கள் தொடர்பாக 9 முறைப்பாடுகளும் வேறு 6 முறைப்பாடுகளும் 37

## கந்தளாயில் கைதானவரின் கிளி. வீட்டில் ஆயுதங்கள் மீட்பு

### விசாரணை தொடர்கின்றது என்கின்றது பொலிஸ்

கிளிநொச்சி, ஒக். 13
கிளிநொச்சியில் நேற்று ஒரு தொகை ஆயுதங்கள் மீட்கப்பட்டுள்ளன என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. இது தொடர்பில் 3 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
நேற்றுமுன்தினம் திருகோணமலை, கந்தளாயில் ரி56 ரகத் துப்பாக்கி வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட ஒருவரின் தகவலுக்கமைய கிளிநொச்சியில் உள்ள அவரது வீட்டில் இந்த ஆயுதங்கள் மீட்கப்ப 37

## குறிசுட்டான் சந்தி விபத்தில் புளியங்குளவாசி உயிரிழப்பு

வவுனியா, ஒக்.13
வவுனியா, கனகராயன்குளத்தில் நேற்று மாலை நடந்த விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார். விபத்தை ஏற்படுத்திய வாகனம் தப்பிச் சென்றுள்ளது.
புளியங்குளம், முத்துமாரி நகரைச் சேர்ந்த க.சத்தியநாதன் என்பவரே உயிரிழந்துள்ளார். 37

## புத்தளத்தில் இயங்கிய மன். பாடசாலைகள் வட மேல் மாகாணத்திடம் கையளிப்பு

யாழ்ப்பாணம், ஒக்.13
வடக்கு மாகாண சபையின் கீழ் புத்தளத்தில் இயங்கிய 6 பாடசாலைகள் நேற்று வடமேல் மாகாணத்திடம் ஒப்படைக்கப்பட்டன. வடக்கு மாகாண ஆளுநர் சுரேன் ராகவன் இந்தப் பாடசாலைகளை வட மேல் மாகாண ஆளுநர் பேசல ஜயரத்ன பண்டாரவிடம் கையளித்தார். இந்த நிகழ்வு வடக்கு ஆளுநர் அலுவலகத்தில் நடைபெற்றது.
வடக்கு மாகாணத்தின் மன்னார் கல்வி வலயதுக்குட்பட 6 பாடசாலைகள் போரால் இடம்பெயர்ந்து புத்தளம் மாவட்டத்தில் இயங்கின. அந்தப் பாடசாலைகள் தொடர்ந்தும் புத்தளத்தில் இயங்கியபோதும் அவற்றுக்கான கொடுப்பன 37

## கட்டுப்பாட்டை இழந்த உந்துருளி மதிலுடன் மோதி இளைஞர் சாவு

யாழ்ப்பாணம், ஒக்.13
யாழ்ப்பாணம், அச்சுவேலி தோப்பூரில் நேற்றிரவு நடந்த விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.
வேகக் கட்டுப்பாட்டை இழந்த உந்துருளி மதிலுடன் மோதி விபத்துக்குள்ளானது என்றும் 35



## யாழ்ப்பாணம் போதனாவில் ‘சிரி ஸ்கானர்’ சிகிச்சைகள்

யாழ்ப்பாணம், ஒக்.13
யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் நேற்றுப் புதிய கணினி வழி உடல் ஊடுகதிர்ப்படக் கருவி (சிரி ஸ்கானர்) சிகிச்சைப் பிரிவு ஆரம்பித்து வைக்கப்பட்டது.
புலம்பெயர் நாடுகளில் உள்ள நன்கொடையாளர்களின் உதவியுடன் இந்த சிகிச்சைப் பிரிவு ஆரம்பிக்கப்பட்டது. புலம்பெயர் நன்கொடையாளர்களும் நேற்றைய நிகழ்வில் மதிப்பளிக்கப்பட்டனர்.
புதிய உடல் ஊடுகதிர்ப்படக் கருவி (160 சிரி ஸ்கானர்) சுமார் 112 கோடி ரூபா நிதிச் செலவில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் பொருத்தப்பட்டுள்ளது. அந்த சிகிச்சைப் பிரிவின் ஆரம்ப நிகழ்வு யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி தலைமையில் நேற்று நடைபெற்றது.
சிகிச்சைப் பிரிவை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் பணிப்பாளர், நாடாளு 33

## மன்னார் வாக்காளர் பட்டியலில் முஸ்லிம்களது பெயர்கள் நீக்கம்

### முன்னாள் எம்.பி. ஹீனைஸ் பாறூக் குற்றச்சாட்டு உண்மையில்லை என்கிறார் உதவி ஆணையாளர்

யாழ்ப்பாணம், ஒக். 13
மன்னார் மாவட்டத்தில் 6 ஆயிரத்து 500 முஸ்லிம் வாக்காளர்களின் பெயர்கள் வாக்காளர் பட்டியலிலிருந்து நீக்கப்பட் டுள்ளன என்றும், அது முஸ்லிம் மக்கள் மத்தியில் சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது என்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி ஹீனைஸ் பாறூக் தெரிவித்திருந்த கருத்தில் எதுவித உண்மையும் கிடையாது என்று மன்னார் மாவட்ட தேர்தல் உதவி ஆணையாளர் ஜேசுதாசன் ஜெனிற்றன் தெரிவித்தார்.
மன்னார் மாவட்ட தேர்தல் பட்டி 37

## அளவெட்டியில் குடும்பஸ்தர் கிணற்றில் சடலமாக மீட்பு

யாழ்ப்பாணம், ஒக்.13
யாழ்ப்பாணம், அளவெட்டிப் பகுதியில் பாழடைந்த கிணறு ஒன்றுக்குள் இருந்து நேற்றுச் சடலம் ஒன்று மீட்கப்பட்டுள்ளது.
சடலமாக மீட்கப்பட்டவர் மல்லாகம், குளமங்காலைச் சேர்ந்த நடராசா ஜெயாகரன் (வயது-40) என்று அடையாளம் காணப்பட்டுள்ளார்.
இந்தச் சம்பவம் தொடர்பாகத் தெல்லிப்பழைப் பொலிஸார் 3 பேரைத் தடுப்பில் வைத்திருந்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.
அந்தச் சந்தர்ப்பத்தில் உயிரிழந்தவருடன் உடனிருந்தனர் என்ற சந்தேகத்தின் அடிப்படையிலேயே அவர்களிடம் விசாரணைகள் மேற்கொள்ளப்படு 37

## துப்பாக்கி வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவர் கைது

யாழ்ப்பாணம், ஒக்.13
மல்லாவி, பொன்னகரில் 3 கட்டுத்துப்பாக்கிகளை வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.
மல்லாவிப் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படை 33

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

100% Money back Guarantee
# தீபாவழியை
முன்னிட்டு சிறப்பு 60% சலுகை!

## EASY WAY SPOKEN ENGLISH
கொழும்பிலே பிரபலமான Dr.K.Dinesh இன் வகுப்புக்கள் இப்பொழுது யாழ்ப்பாணத்தில் மட்டும்

இலங்கையிலே கட்டண மீள் செலுத்தும் உத்தரவாதத்துடன் மிகக் குறுகிய காலத்தில் ஆங்கிலத்தில் பேசக் கற்பிக்கும் ஒரே ஆசிரியர்

உங்களை வெற்றிகரமான, நிரூபிக்கப்பட்ட, தனிச்சிறப்பான கற்பித்தல் முறை மூலம் ஆங்கிலத்தில் தடையின்றி பேச வைப்பதுடன், பிழையின்றி எழுதவும் ஒருவர் ஆங்கிலத்தில் பேசும் போது இலகுவாக விளங்கிக்கொள்ளச் செய்யவும் முடியும்.

உங்களால் ஆங்கிலத்தில் பேசமுடியாமல் இருப்பதற்கான தடைகள் முதல் வகுப்பிலேயே உடைக்கப்படும். உங்களாலும் ஆங்கிலத்தில் பேசமுடியும் என்பதை முதல் வகுப்பிலேயே உணர்ந்து கொள்வீர்கள்.

பாடநெறி முடிவில் உங்களை ஆங்கிலத்தில் பேசச்செய்ய முடியாவிடின் முழுப் பாடநெறிக்கட்டணம் திருப்பித்தரப்படும்.

COURSE Diploma in English - 25,000/= 10,000/=

DTPE CAMPUS PVT LTD
NO: 925, KKS ROAD, JAFFNA. (சந்திக்கு அருகில்) Next to Multi Farm.

24 YEARS of Teaching Experience

Dr. K. B. Dinesh (GDA - Acu- New Zealand)
0766998906, 0766428906

## உடனடி வேலைவாய்ப்பு
எமது நிறுவனத்திற்கு நீர் சுத்திகரிப்பு இயந்திரம் தொடர்பான விடயங்களை வாடிக்கையாளருடன் அணுக கூடிய Marketing Dealers தேவை.
- பொருள்களை கொண்டு சென்று விற்பனை செய்வதும் அல்ல
- ஏனைய நிறுவனங்களை விட மாறுபட்ட வேலைவாய்ப்பினை கொண்டது.
- கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.
- ஒப்பந்த அடிப்படையிலான வேலைவாய்ப்பு
- இது தொடர்பான அனுபவம் இல்லாதவர்களும் விண்ணப்பிக்கலாம்.

வடமாகாணத்தின் தலைசிறந்த நிறுவனங்களில் ஒன்றான Yarl Smart Water Solution ( Pvt)Ltd இல் இளைஞர்கள் வேலை செய்வதற்கான அரிய சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள்.
14.10.2019 காலை 9.00 மணிக்கு நேரில் சமுகமளிக்கவும்.
தொடர்பு : 341, K.K.S Road, Jaffna.
077 057 3684/ 076 666 5267

## Apartment வீடு விற்பனைக்கு
Colombo கல்கிஸ்சை (Mount Lavinia) 3 Bedroom, 2 Bathroom மிகவும் அமைதியான சூழல். 3ம் மாடி, 1000 சதுர அடி. 300m Galle Road, Parking வசதி, சகல உறுதி. Condominium approval உண்டு. உடனடி பண தேவைக்காக விற்கப்படுகிறது. சகல தளபாடங்களுடன் 12 million. பார்வையிட்ட பின்னர் விலை பேசி தீர்மானிக்கலாம். S'Thomas College நடை தூரத்தில். சிறந்த சூரிய ஒளி காற்றோட்டம் உள்ள வீடு.
தொடர்புகளுக்கு:0777 421 732



தொழில் வாய்ப்புடன் கூடிய புதிய ஊடக வகுப்பு
ஆரம்பம்...
விண்ணப்ப இறுதித்திகதி 18.10.2019
FME MEDIA COLLEGE
No.149, Goods Shed Road. Vavuniya.
Call 0760089900 0772809990

## பணிநிலை வேண்டுகை
கணினி பக்க வடிவமைப்பாளர் (ஆண்/பெண்)
Graphics Designer
கணினி தட்டெழுத்தாளர் (ஆண்/பெண்)
Computer Typist
14.10.2019 - 17.10.2019 வரை
காலை 10.00 - 2.00 மணி வரை நேர்முகத்தேர்வு நடைபெறும்.
விண்ணப்பிக்க விரும்புவோர் நேரில் வரவும்
கரிகணன்
வடக்கின் அச்சகத்தரர்
இல. 672B, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
T.P : +94 21 222 2717/ 8

அனுமதி இலவசம்
## Study in Europ
(SWEDEN/ CYPRUS/ FRANCE)
- ஆக குறைந்த தகைமை O/L மட்டும்.
- வயது எல்லை கிடையாது.
- IELTS தேவையில்லை.
- குறைந்த கட்டணத்துடன் விண்ணப்பிக்க முடியும்.
- டிசம்பர் 2019 க்கான பதிவுகள்.

FREE Admission
Part Time Job 100% — PR பெறுவதற்கான வாய்ப்பு — 480,000/- மட்டும்
NEW WAY SKYLINE International College (Pvt) Ltd
077 33 47 332
22 Srimahabodhi Road, Dehiwala

## உடல் எடை குறைய வேண்டுமா?
- எடை கூடுகிறதா?
- வயிறு, மார்பு குறைய வேண்டுமா?
- உடல் எடை குறைகிறதேயில்லை என்கின்ற கவலையா?

பால்மா குளிசை
15 நாள்களில் அற்புத மாற்றத்தை உணர்வீர்கள்.

## தலைமுடி நீளமாக வளர வேண்டுமா?
தலைமுடி வளரவேண்டுமா? பேன், பொடுகு தொல்லையா? ➤முடிகொட்டுகிறதா? ➤இளநரையா? ➤தலைமிடியா? முடி அடர்த்தி இல்லையா? ➤புதிதாக முடி முளைக்க வேண்டுமா? ➤பொன்னாங்காணி? கரிசலாங்காணி. இலாமிச்சை வேர், கருவேப்பிலை, வல்லாரை, நெல்லி சேர்த்துக்காய்ச்சிய எண்ணைய் குளிசை
இந்த எண்ணையைப்பாவித்து பயனடைய
077 210 6155 221. நாவலர் றோட். யாழ்ப்பாணம்.

## நல்லூரான் திருமண சேவை
யாழ் இந்து கௌரவ 1984 பூராடம் உயரம் 5' 7" லண்டன் PR கொம்பனியில் பணிபுரியும் மணமகனுக்கு அழகிய மணமகளை இலங்கை மற்றும் வெளிநாட்டில் தேடுகின்றோம்.
(சீதனம் எதிர்பார்க்கப்படமாட்டாது)
தொடர்புகளுக்கு :
076 415 6365/ 0044 740 453 4517
(Viber/ Whatsapp Available)

## விற்பனைக்கு
BAJAJ WIND 125
மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு உண்டு.
077 614 6434

## வீடு வாடகைக்கு உண்டு
பலாலி வீதி இரண்டாம் ஒழுங்கையில் வீடு வாடகைக்கு உண்டு.
077 236 5351/076 832 6622

## பணிப்பெண் தேவை
உரும்பிராயில் உள்ள சிறிய குடும்பத்துக்கு தங்கி நின்று வேலை செய்வதற்கு பணிப்பெண் தேவை.
தொடர்பு:-077 609 5604

## வீடு விற்பனைக்கு
இல.221, பலாலி வீதி, கந்தர்மடம் என்னும் முகவரியிலுள்ள 1½ பரப்புக் காணியும் மாடிவீடும் விற்பனைக்குண்டு.
தரகர்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டார்கள்.
077 836 3098

## விற்பனைக்கு
நல்ல இன தென்னங்கன்று, செவிளநீர் தென்னங்கன்று (மலேசியன்) சவுக்கு, தேக்கு, பாலை, முதிரை, மலை வேம்பு, நாவல், கொண்டல், சித்திரவேம்பு, வேம்பு, நாகமரம், இலுப்பை, கொன்றை, வாகை, வில்வம், மருது, புங்கை, கயூ, சமண்டலை, அசோகாகன்று, கருங்காலி, கத்தாழை, மாங்கன்று, தேசி, தோடை, பலா, கொய்யா, கமுகு, இந்தியன்நெல்லி, ஊர்நெல்லி, அரைநெல்லி, பெரியவிலும்பி, சிறிய விலும்பி, ஒட்டு பலா, விதை பலா, பசன் புருட், லாவுல், சீதாபழம், கறுவா, கராம்பு, ஈரப்பலா, அன்னமுன்னா, பட்டபுருட், கோப்பி, முருங்கை, றெட்லேடி, பப்பாகன்று, குறோட்டன் வகை, செவ்வரத்தை வகை, மங்குஸ்தான், றம்புட்டான், வெற்றிலை, மிளகு, மேலும் பல இன பூங்கன்றுகளும், பூஞ்சாடிகளும் விற்பனைக்கு (தொகையாகவும் பெற்றுக் கொள்ளலாம்)

நியூ லங்கா பாம்
பலாலி வீதி, சுன்னாகம் மேற்கு,
(கணேசா பாடசாலைக்கு அருகில்)
077 612 9343

கிளை - நியூ லங்கா பாம்
கே.கே.எஸ். வீதி,
இணுவில்.

## வீடு வாடகைக்குத் தேவை
யாழ்.நகருக்குள் அல்லது 10km சுற்றுவட்டாரத்துக்குள் அலுவலக உத்தியோகத்தர்கள் தங்குவதற்கு ஏற்ப 5 அறைகள், 3 குளியலறைகள் வசதிகளைக் கொண்ட வீடு வாடகைக்குத் தேவை.
077 233 4393

## வாகன சாரதி தேவை
எமது நிறுவனத்துக்கு வாகன சாரதி தேவை. வெளி மாவட்டத்தவருக்கு தங்குமிடம் வசதி உண்டு.
ஆர்க் தளபாட நிலையம்
1169, K.K.S. றோட், யாழ்ப்பாணம்.
077 300 1763

## தேவை
திறம்பட இயங்கிக் கொண்டிருக்கும் "Family Restaurant" ஒன்றுக்கு கடினமாக உழைக்க கூடிய தொழிலாளர்கள் உடனடியாகத் தேவை.
கவர்ச்சிகரமான சம்பளம் + Service Charge ஏனைய சலுகைகள்.
077 652 5251

## காணி விற்பனைக்கு
யாழ்ப்பாணம் மானிப்பாய், நவாலி வலிகாமம் West காடு கல்லுண்டாய் வைரவர் கோயில் எல்லையில் 44 7.5 பரப்புக்காணி, 2 கிணறும். ஒரு உடைந்த கடையுடன் விற்பனைக்கு உள்ளது. வட்டுக்கோட்டை யாழ்ப்பாணம் பிரதான வீதியில் அமைந்தது.
071 856 1927

## தேவை
யாழ்ப்பாணம், கந்தர்மடச் சந்திக்கு அருகில் புதிதாக ஆரம்பிக்கப்பட உள்ள விசேட தனியார் வைத்திய சாலைக்கு
(Speciality Hospital) Pharmacist மற்றும் MLT தேவை.
071 847 5531/0774132012
laliths2001@yahoo.com

## யாழ். விவசாயிகளின் பிள்ளைகளுக்கு கார்கில்ஸ் ஊக்குவிப்பு பரிசில்கள்




கார்கில்ஸ் நிறுவனத்தின் கீழ் பயணிக்கும் விவசாயிகளின் பிள்ளைகளுக்கு கார்கில்ஸ் பூட்சிற்றியினால், புலமைப்பரிசில் பரீட்சை மற்றும் உயர்தர பரீட்சைகளில் உயர் பெறுபேறுகளைப் பெற்ற 88 மாணவர்களுக்கு புலமைப்பரிசில்கள் வழங்கப்பட்டுள்ளன.

கார்கில்ஸ் நிறுவனத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் கார்கில்ஸ் பூட்சிற்றியில் கடந்த நான்காம் திகதி காலை 8.30 மணியளவில் நடைபெற்ற வைபவத்தில் இப்பரிசில்கள் வழங்கப்பட்டன.

கார்கில்ஸ் சருபிம உழவர் சமூக நன்மை மற்றும் உதவித் தொகை" வழங்கல் திட்டத்தின் கீழ் வடமாகாணத்தில் உள்ள விவசாய குடும்பங்களில் உள்ள பாடசாலை மாணவர்களுக்கு இந்த உதவித்திட்டம் வழங்கப்படுகின்றது.

கார்கில்ஸ் பூட்சிற்றியின் "வளம்பிக்க" எனும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கார்கில்ஸ் பூட்சிற்றியின் முகாமையாளர் ரஞ்சித் பேஜ் தலைமையில் இந்த நிகழ்வுகள் இடம்பெற்றன.





கடந்த 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில், புலமைப்பரிசில் மற்றும் உயர்தரப் பரீட்சைகளில் சிறந்த சித்தி எய்தி, பல்கலைக் கழகத்திற்கு தெரிவான மாணவர்களுக்கும் பாடசாலை உபகரணங்களுடன் கல்வி ஊக்குவிப்புத் தொகை, மடிக்கணனிகள் என்பன வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில், பிரதம விருந்தினராக வடமாகாண ஆளுநர் சுரேன் ராகவன், வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ. இளங்கோவனுடன் கார்கில்ஸ் பூட்சிற்றியின் உயர் அதிகாரிகள் மற்றும் யாழ். தலைமைப் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பிரசாத் பெர்னாண்டோ மற்றும் பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர் எனப் பலரும் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தேவை**

**Grocery Store** ஒன்றுக்கு கடினமாக உழைக்கக் கூடிய உதவியாளர்கள் உடனடியாகத் தேவை. உணவு. தங்குமிடம் இலவசம். கவர்ச்சிகரமான சம்பளம். ஏனைய சலுகைகள்.

**077 652 5251**

**விற்பனைக்கு**

நல்ல நிலையிலுள்ள **ஸ்கூட்டி மோட்டார் சைக்கிள்** விற்பனைக்குண்டு.

**077 978 9752**

**வீடு விற்பனைக்கு**

அச்சுக்கூட ஒழுங்கை. கொக்குவில் கிழக்கில் அமைந்துள்ள பரப்பு 2.குழி.4.50 காணியுடனான வீடு உடன் விற்பனைக்கு உண்டு. தரகர் தேவையில்லை.

**077 157 4707, 021 221 2277**
**077 190 9253**

**வாகனம் விற்பனைக்கு**

தனிப்பட்ட பாவனையிலுள்ள **TATA YENON NP DAB XXXX** இலக்கமுடைய வாகனம் விற்பனைக்குண்டு.

**077 047 6129**

# சிங்கப்பூரில் உயர்கல்வி



சிங்கப்பூரில் பதிவு செய்யப்பட்ட இலங்கையின் ஒரே நிறுவனம்

- Hotel Management
- Diploma in Tourism and Hospital Management
- Advance Diploma in Tourism Hospital Management
- Information Technologies (Graphic Design / Auto Cad /Software)
- Business Administrations
- Logistic and Supplier Chain Management
- Business Management
- Marketing & Finance
- Engineering

குறைந்த தகைமை G.C.E O/L

* பகுதிநேர வேலைவாய்ப்பு
* உயர்கல்விக்காக ஐரோப்பிய விசா பெற வாய்ப்பு

Piccaso

**தொடர்பு: 070 441 2890 / 070 441 2891**

Sri Lanka Agent Mr. Francis Petersay
இல.03. கொழும்பு-நீர்கொழும்பு வீதி. நாகொடை. இலங்கை அலுவலகம்.

HEMAS GLOBAL SERVICE PTE LTD
1 Brook Road, #B1-20 Katong Plaza, Singapore, 429929 Singapore

# சேவை தொடர மனதார பாராட்டி வாழ்த்துகின்றோம்



அகில இலங்கை சமாதான நீதவானாக சத்தியப்பிரமாணம்
**கலாநிதி லயன்**
**பெருமாள்தேவன்**
**திருச்செல்வன் (செல்வா)**
**B.A (Geo) Civil Engi M.A.F**
அவர்கள் யாழ்ப்பாண மேல் நீதிவான் நீதிமன்றில் நீதியதி **கௌரவ அ.பிரேம்சங்கர்** முன்னிலையில்

அகில இலங்கை சமாதான நீதவானாக 25.09.2019 சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார். இவர் தீயணைப்பு தொழில் சங்கத்தின் வடமாகாண அமைப்பாளரும், யாழ் பொலிஸ் நிலைய சிவில் பாதுகாப்பு குழு உறுப்பினரும், யாழ்ப்பாண மாநகரசபை தீயணைப்புபடை உறுப்பினரும், வட இலங்கை சமாதான சங்கத்தின் யாழ் மாவட்ட அமைப்பாளரும், யாழ் மாவட்ட நிர்வாக சபைத் தலைவரும் ஆவார்.

இவர் **தேசமான்னிய, தேசசக்தி, சேதோதய சமூக தீபம், தேசாபிமானி, சமாதான தூதுவர் போன்ற விருதுகளைப்** பெற்றவர்.

*மக்களுக்கு மேலும்பல சேவைகளை ஆற்றி நீடூழிகாலம் இறை ஆசியுடன் வாழ வாழ்த்துகின்றோம்.*

Congratulations

வாழ்த்துவோர் : **Healthy Choice Medicals**
No.262D, Hospital Road, Jaffna.
**Vanikaa Medicals**
No.203, Hospital Road, Jaffna.

இப்பொழுது
**75%**
**4G போனஸ்**

ரூ.49 ~~500MB~~ **825MB**
ரூ. 99 ~~1200MB~~ **1650MB**

DATAMART
Google play | App Store
ஊடாக டவுண்லோட் செய்யுங்கள் அல்லது பிரவேசியுங்கள் www.datamart.lk
மேலதிக விபரங்களுக்கும், டேட்டா பொதிகளுக்கும் அழையுங்கள்: 1717
நிபந்தனைகளுக்கு உட்பட்டது.
TRC/M/SEA/19/01
SPEEDTEST AWARDS 2019
4G
Sri Lanka Telecom Mobitel

emami

# இளம் பருவத்தின் மிருதுவான சருமத்திற்காகவே
## தயாரிக்கப்பட்ட விசேடமான பெயானர்ச் கிரீம்




emami FAIR AND TEENS

- 4 WEEKS 04 வாரங்களில் உங்கள் மிருதுவான சருமத்திற்கு பொழிவினை பெற்றுத்தரும்.
- UV பாதிப்பினை ஏற்படுத்தும் சூரிய கதிர்களிலிருந்து சருமத்தினை பாதுகாக்கும்.
- சருமத்தின் எண்ணெய்த்தன்மையை கட்டுப்படுத்துவதன் மூலம் முகப்பருக்கள் ஏற்படுவதை குறைக்கும்.
- கற்றாளை, சந்தனம் மற்றும் குங்குமம், உட்பட இயற்கை மூலிகைகளின் குணநலன்கள் சருமத்திற்கு மென்மையையும், பிரகாசத்தினையும் பெற்றுத்தரும்.
- சருமத்தின் இயற்கையான ஈரலிப்பினை பாதுகாத்து சருமத்திற்கு போஷணையளிக்கும்.

12-21 வயது வரையான இளம் பெண்களுக்கு மிகவும் பொருத்தமானது. அனைத்து வகையான சருமங்களுக்கு பொருந்தும்

25ml - Rs. 165/-

Marketed By: Emami Indo Lanka (Pvt) Ltd.
Grandpass Road, Colombo 14, Sri Lanka.
011 2 432 675

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Fast Track Degrees

குறுகிய, காலத்தில்
நீங்களும் ஒரு பட்டதாரியாகலாம்.

**BA, BBA, BCOM, BSC , MA, MSC,MBA, PHD**

உங்களின் கடந்தகால தகைமைகளையும், அனுபவங்களையும் வைத்து RPL எனப்படும் சர்வதேச முறையினால் பட்டங்கள் பெற்றுத்தரப்படும்.

Can be Used for :

- Government / Private Jobs
- Migrations
- Promotions
- Higher Studies, etc

UGC APPROVED

**Amazon College**
294, 2nd Floor, Galle Road,
Peoples Bank Building, Bambalapitiya,
directdegree2014@gmail.com
www.amazoncollege.lk

Hotline : 0710188730

(in 13525) (13.17)

## கடைகள் வாடகைக்கு

வவுனியா இலுப்பையடியில் அமைந்துள்ள கோவில்குளம் கமநல சேவைகள் நிலையத்தில் 3 கடைகள் (மேற்தளம்) வாடகைக்கு வழங்கப்பட இருப்பதனால் அதற்கான விண்ணப்பப் படிவங்களை இலுப்பையடியில் அமைந்துள்ள கோவில்குளம் கமநல சேவைகள் நிலையத்தில் பெற்றுக் கொள்ளலாம். (கடைகளுக்கான இலக்கங்களை நேரில் பார்வையிட்டுத் தெரிவு செய்யலாம்) விண்ணப்பப் படிவம் ஏற்றுக்கொள்ளும்போது மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 500.00 மற்றும் மீளளிக்கப்படும் கட்டணமாக 5000.00 என்பவற்றைச் செலுத்திப் பற்றுச்சீட்டுகளைப் பெற்றுக்கொள்ளவும்.

**விண்ணப்ப முடிவு திகதி:- 16.10.2019**

**நிறைவேற்றுச் செயலாளர்**
**கோவில்குளம் கமநல சேவைகள் நிலையம், வவுனியா.**
**024 222 1053**

## வீடு வாடகைக்கு உண்டு

பெரியவிளான் பிரதான வீதியில் நிறுவனங்கள் இயக்கக்கூடிய பெரிய வீடு வாகனத் தரிப்பிட வசதிகளுடன் வாடகைக்கு உண்டு. சிறிய குடும்பங்களும் தொடர்பு கொள்ளலாம். (CS 28613)

**077 716 1842 /076 032 0633**

## தேவை

**Kandy Homes Contraction**

அலுவலகத்துக்கு வரவேற்பாளர் (பெண்) ஒருவர் தேவை.

**கல்வித் தகைமை :- GCE O/L**
**மாத சம்பளம் :- 14,000 + Commission**

**077 746 2889**

## மணமகன் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 1983 ஆம் ஆண்டு பிறந்த மணமகளுக்குப் படித்த மணமகன் தேவை.

**தொடர்பு:- 076 060 0267**



ashok STEEL
நீடித்த வலிமை

## அசோக் TMT

**அதிகூடிய பலம் வாய்ந்த கம்பிகள்**

யானையின் எடையைப் போல் பன்மடங்கு எடையைத் தாங்கக்கூடிய பலம் கொண்டதோடு, பல நூற்றாண்டுகள் நிலைத்து நிற்கக்கூடிய கட்டிடங்களுக்கும், வீடுகளுக்கும், ஸசந்தையில் உங்களுக்கு மிக அருகாம்மயில் இலகுவாக கிடைக்கக்கூடிய அதிகூடிய பலம் வாய்ந்த அசோக் TMT கம்பிகளை பயன்படுத்தி முறுக்குக் கம்பி பெறுமதியிலும் பார்க்க 15 சதவீத சேமிப்பை அனுபவித்திடுங்கள்.

ஒரு மெட்ரிக் தொன் தலா ரூ.108,000 + VAT

SLS 375

வட கிழக்கு மாகாணம் - 077 3781397/ 076 6084369, மத்திய மாகாணம் - 077 3825832, வட மேல் மாகாணம் - 077 3455128, தென் மாகாணம் - 076 6773659, உடனடி அழைப்புகளுக்கு - 011 7388940-3

emami

## ஆரோக்கியமான நீண்ட கூந்தலுக்கு போஷாக்குமிகு அம்லா பராமரிப்பு






நெல்லி
கேசத்தின் வேர்களை நன்றாக பலப்படுத்தும்.

கற்றாலை
முடியின் ஈரத்தன்மையை பேணுகிறது. இளநரையைகட்டுப்படுத்தும்

வாதுமை
Vitamin E பளபளப்பான தோற்றத்தை தருகிறது.

செல்வரத்தை
முடி வளர்ச்சியை விரைவாக்கும்.

**வலிமையான பளபளப்பான கூந்தலுக்கு சரியான தேர்வு**

Marketed By: Emami Indo Lanka (Pvt) Ltd. No.200, Lukmanjee Square, Grandpass Road, Colombo 14, Sri Lanka.

011 2 432 675

50ml - Rs. 105/-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீழ்ந்தாலும் திரும்பவும் எழும்பும் தேசத்தைக் கட்டியெழுப்பவேண்டும்

*தொழிற்பயிற்சி அதிகார சபையின் சான்றிதழ் வழங்கும் நிகழ்வில் ஆளுநர் அறிவுரை*

*கொடிகாமம், ஒக். 13*

*போரில் நடக்கக் கூடாத விடயங்கள் நடந்தன. ஆனால் ஒரு நாளும் வீழ்ந்து போகாத ஒரு தேசத்தைவிட வீழ்ந்தாலும் திரும்ப எழும்பி நிற்கும் தேசத்தைக் கட்டியெழுப்பவேண்டும். எப்போதாவது நான் வீழ்வேனென்றாலும் திரும்பவும் எழுந்து நிற்பேன் என்பது தான் ஆன்மிக சக்தியாகவும் அரசியல் பலமாகவும் சமுதாய நலமாகவும் இருக்கிறது.*

இவ்வாறுவடக்குமாகாணஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் தெரிவித்தார்.

இலங்கைத் தொழிற்பயிற்சி அதிகாரசபையின்சான்றிதழ்வழங்கும் நிகழ்வு தென்மராட்சிக் கைதடியில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

இலங்கைத் தொழிற்பயிற்சி அதிகாரசபையின்உதவிப்பணிப்பாளர் கு.நிரஞ்சன் தலைமையில் நடைபெற்றநிகழ்வில், முதன்மைவிருந்தினராக வடக்கு மாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன், சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாண மேலதிக மாவட்டச் செயலர் க.கனகேஸ்வரன், மதிப்புறு விருந்தினராக யாழ்ப்பாணப் பிரதேச செயலர் சா.சுதர்சன் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

நிகழ்வில் 228 பேருக்கு தொழிற்பயிற்சி சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

இந்தநிகழ்வில்முதன்மைவிருந்தினர்உரையாற்றுகையில்ஆளுநர் மேலும் தெரிவித்ததாவது:

வீழ்ந்து போகும் தேசத்தைக் கட்டியெழுப்பும் பெரும் பொறுப்பை இறைவனும் காலமும் என் மேல் சுமத்தியுள்ளது.ஆகையால்வடக்கு மாகாணத்தின் எதிர்காலத்தைக் கட்டியெழுப்பும்அநேகபணிகளுள்ளன. அதிலே ஒரு பணியாக தொழில் நுட்பம், தொழில் வாய்ப்பு அல்லது தேசிய அளவிலே பன்னாட்டளவிலே ஏற்றுக் கொள்ளக் கூடிய சான்றிதழ்களை, பரீட்சைகளை எடுத்துக் கொள்வது. அந்த வகையில் இன்று சித்தியடைந்து மூன்றாவது அல்லது நான்காம் தரச்சான்றிதழைப்பெற்றுக்கொள்கிறீர்கள் மகிழ்ச்சியாக இருக்கிறது.



போர் எங்களைத் தாக்கியது மட்டுமல்ல எங்கள் சமுதாயத்தில் அத்திபாரத்தின்முக்கிய இடங்களைபோர் கழற்றி விட்டது. ஆகையால் அந்த அத்திபாரத்தைத் திரும்பவும் நாங்கள் செம்மைப்படுத்தவேண்டும். அந்த இடத்திலிருந்துதான் அந்த அத்திபாரத்தின் சம்பவங்களின் மேலாகத்தான் தேசம் கட்டியெழுப்பப்படும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

தேசிய தொழிற்பயிற்சி அதிகார சபையின் வழிநடத்தலுடன் அவர்களின் தலைமை தாங்குதலுடன் இதனைச்செய்து முடிப்பது சந்தோஷமாக இருக்கிறது. போர் முடிந்து 10 வருடங்கள் ஆயிற்று. இன்னும் அடிப்படையான அனேக விடயங்கள் செய்யவேண்டியுள்ளன. அந்தப்பணியிலேஎனக்குகிடைத்தசிறு பொறுப்புகளைக்குறுகியகாலத்துக்குள்ளே நான் செய்து முடித்திருக்கின்றேன்.

இந்தச் சபையின் சான்றிதழ்களைப்பெற்றவர்கள் இனிமேல் இதனுடன்நின்றுவிடாதுஐந்தாம் ஆறாம், ஏழாம் தரமான சான்றிதழ்களை எடுப்பதற்கும் அதற்கான பயிற்சிகளுக்கும் முன்வர வேண்டும். நீங்கள் முயற்சிக்க வேண்டும். வடக்கு மாகாணத்தில் செய்யக்கூடிய உதவிகளைச் செய்ய நாங்கள் தயாராக இருக்கிறோம். உங்கள் தேசத்தையும் அந்த தேசத்துக்குச் சொந்தமான நாகரிகத்தையும் வளர்ப்பதற்கு முன்வந்திருக்கிறீர்கள் என்பது தான் உண்மை. அந்தத் தரிசனத்தையும் தொலை நோக்கையும் நீங்கள் இருதயத்தில் தாங்கிக் கொள்ள வேண்டும்.

**வெளிநாடுகளுக்குப்போனாலும் தாய்த் தேசத்தை மறக்காதீர்**

சிலர்இந்தசான்றிதழ்களால்வெளிநாடு போகலாம். போனால் தேசத்தை மறக்காதீர்கள். இது நீங்கள் பிறந்த இடம், நீங்கள் வளர்ந்த இடம்.

எல்லாவற்றுக்கும் அப்பால் உயிரினும் மேலான அன்பு கூறுகின்ற இல்லம் இது. தேசத்தை மறக்காமல் மண்ணின் பண்பாட்டை மறக்காமல் எதிர்காலத்தை மறக்காமல் உங்கள் எதிர்காலம் சிறக்க வேண்டும்- என்றார். (து-159)



## வாணி விழா

கொடிகாமம், ஒக். 13

சாவகச்சேரி பிரதேச சபையின் வாணி விழா கடந்த செவ்வாய்க்கிழமை சபை மாநாட்டு மண்டபத்தில் உபதவிசாளர்செ.மயூரன்தலைமையில்நடைபெற்றது . நிகழ்வில் பிரதேச சபை உறுப்பினர்கள், அலுவலர்கள் கலந்து கொண்டனர்

நடனமும், விடத்தற்பளையூர் காசிநாதன் வில்லிசைக் குழுவினரின் வில்லுப்பாட்டு நிகழ்வும் இடம் பெற்றன.

2018 ஆம் ஆண்டு பிரதேச சபையில் பணியாற்றி குறைவானவிடுமுறைஎடுத்தஅலுவலகர்கந்தசாமி கருணதாசனின் பணியைப் பாராட்டி பரிசு வழங்கி மதிப்பளிக்கப்பட்டது. (ஜ-159)

## சாவகச்சேரியில் தினமும் மழை தாழ்வான பகுதிகளில் வெள்ளம்

சாவகச்சேரி, ஒக். 13

சாவகச்சேரியில் தினமும் பெய்து வரும் மழையால் தாழ்வான பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. பொதுமக்கள்போக்குவரத்துச்செய்வதில்சிரமங்களை எதிர்நோக்குகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.

மீசாலை கிழக்கில் நீண்ட தூரத்துக்கு வெள்ளம் தேங்கியுள்ளது. பாடசாலைமாணவர்கள் உட்படபொதுமக்கள் அந்த வீதியூடாகச் செல்வதில் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

"வீதி அபிவிருத்தித் திணைக்களத்துக்குச் சொந்தமானதே இந்த வீதி. வீதியைச் சீரமைக்கும்போது வடிகால் வசதி ஏற்படுத்திக் கொடுக்காததால் வெள்ளம் தேங்கி நிற்கிறது. வடிகால்வசதி ஏற்படுத்தி கொடுக்கவேண்டிய பணி திணைக்களத்துக்குரியது.

இருப்பினும், சபை எல்லைக்குள் வீதி உள்ளதால் மக்கள் சபையில் சாலையைச்சீரமைக்குமாறு கோருகின்றனர். இது தொடர்பாக வீதி அபிவிருத்தித் திணைக்களத்துக்கு அறிவித்துள்ளோம்." என்று சாவகச்சேரி நகரசபையினர் தெரிவித்தனர். (து-9)



## பரந்தன் அ.த.க. பாடசாலைக்கு உதவி

யாழ்ப்பாணம்,ஒக்.13

இளவாலைவருத்தபடாதவாலிபர்சங்கத்தின் 'உயர்த்தும் கரங்கள்' செயற்றிட்டத்தின் கீழ் கிளிநொச்சிபரந்தன்அ.த.கபாடசாலைக்கு உதவிப் பொருள்கள் வழங்கப்பட்டன.

அதிபர் விடுத்த வேண்டுகோ ளுக்கிணங்க வகுப்பறை களுக்கான 5 அலமாரிகள் மற்றும்கற்றல்கற்பித்தல்சாதனங்கள்சங்க உறுப்பினர்களால் நேற்றுமுன்தினம் கையளிக்கப்பட்டன.

வன்னிநேயம் நியூசிலா ந்தின் நிதிபங்களிப்பில்உதவிப்பொருள்கள்வழங்கப்பட்டன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

## சரசாலை நூலகத்தினரின் நடமாடும் விழிப்புணர்வு

சாவகச்சேரி, ஒக். 13

தேசிய வாசிப்பு மாதத்தையொட்டி முன்பள்ளிச் சிறார்களுக்கு நூல்களின் பயன்பாடு தொடர்பான நடமாடும் நூலக சேவை மற்றும் விழிப்புணர்வுக் கருத்தமர்வை சாவகச்சேரிப் பிரதேச சபையின் சரசாலை பொது நூலகத்தினர் நடத்திவருகின்றனர். சரசாலை வடக்கு முன்பள்ளி, மட்டுவில் ஞானதீபம் முன்பள்ளி ஆகியவற்றில் இவை நடைபெற்றன என்று தெரிவிக்கப்பட்டது. (து-9)



## அரசியல் நடவடிக்கைகளுக்கு சிறுவர்களை ஈடுபடுத்தாதீர்கள்

*சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை கோரிக்கை*

கொழும்பு, ஒக். 13

அரசியல் நடவடிக்கைகளில் சிறுவர்களை ஈடுபடுத்த வேண்டாம்எனதேசியசிறுவர்பாதுகாப்புஅதிகாரசபை கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பில் அந்தத் திணைக்களம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:

அரசியல் நடவடிக்கைகளுக்காக சிறுவர்களை பயன்படுத்த வேண்டாம் என அனைத்து அரசியல் கட்சிகள், சுயேட்சை குழுக்கள் உள்ளிட்ட தரப்பினர்களிடம் கேட்டுக்கொள்கின்றோம்.

அரச தலைவர் தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் சிறுவர்கள் பல்வேறு செயற்பாடுகளின் ஊடாக அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்படுவதாகப் பொதுமக்கள் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைக்கு தகவல் வழங்கியுள்ளனர். இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறுமாயின் அது தொடர்பாக 1929 என்ற சிறுவர் உதவி தொலைபேசி இலக்கத்துக்கு அழைத்தோ அல்லது எழுத்து மூலமோ முறைப்பாடுகளை வழங்கமுடியும் -என்றுள்ளது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## போராட்டம் கைவிடப்பட்டது

யாழ்ப்பாணம், ஒக். 13
யாழ்ப்பாணப் பல்கலைக் கழக கல்விசாரா ஊழியர்களின் பல்கலைக்கழகதொழிற்சங்க கூட்டமைப்பினரின் போராட்டம் நேற்றுமுன்தினம் கைவிடப்பட்டது என்று அந்தச் சங்கம் தெரிவித்துள்ளது.
சகல அரச பல்கலைக் கழகங்களிலிலும்கடந்த மாதம்10ஆம்திகதியிலிருந்து முன்னெடுக்கப்பட்டு வந்த தொடர் தொழிற்சங்கப் போராட்டமே கைவிடப்பட்டது.
கோரிக்கையைத் தீர்ப்பது தொடர்பில் உயர் கல்வி அமைச்சின் செயலர் மற்றும் பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆகியோரின் கூட்டுக் கையொப்பத்துடன் எழுத்து மூலமான கடிதம் பெற்றுக் கொள்ளப்பட்டது அதனால் போராட்டம் கைவிடப்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டது.
நாளை திங்கட்கிழமை அந்தந்தப் பல்கலைக்கழகங்களில்நடைபெறும் விளக்கப்பொதுக்கூட்டத்தில் இதுதெளிவுபடுத்தப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (கு)

## தண்ணீர் வடிகட்டிகள் கையளிப்பு

தென்மராட்சி, ஒக்.13
தென்மராட்சி பிரதேசத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட மூன்று கிராம அலுவலர்பிரிவுகளைச் சேர்ந்த300குடும்பங்களுக்கு நேற்றுமுன்தினம் தண்ணீர் வடிகட்டிகள்(பில்டர்) வேள்ட்விஷன் லங்கா நிறுவனத்தால் வழங்கப்பட்டன.
தென்மராட்சிப் பிரதேச இடர் முகாமைத்துவ அலகால் வறட்சியினால் பாதிக்கப்பட்ட தனன்களப்பு,மறவன்புலவு, வரணி வடக்கு ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில் தெரிவு செய்யப்பட்ட300குடும்பங்களுக்கு அந்தந்தக் கிராம அலுவலர் பிரிவுகளில் வைத்து அதிகாரிகளால் தண்ணீர் வடிகட்டிகள் கையளிக்கப்பட்டன. (ஐ-9)

### கோண்டாவில் வர்த்தகர் கொலைக்குற்றச்சாட்டு:


# முதலில் கைதானவர் விடுதலை மற்றொருவர் கைதாகி மறியலில்

யாழ்ப்பாணம், ஒக். 13

**கோ**ண்டாவில், உப்புமடச் சந்தி இரும்பக உரிமையாளரின் கொலைக் குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு 48 மணி நேரம் பொலிஸ் தடுப்புக் காவலில் வைத்து விசாரிக்கப்பட்ட இளைஞன் வழக்கிலிருந்து விடுக்கப்பட்டார்.

அவர் கொக்குவில் தொடருந்து நிலைய அதிபரைத் தாக்கினார் என்று குற்றச்சாட்டு முன்வைத்து மற்றொரு வழக்கை யாழ்ப்பாணப் பொலிஸார் தாக்கல் செய்துள்ளனர்.
அத்துடன், இரும்பக உரிமையாளரின் கொலைக் குற்றச்சாட்டில் மற்றொரு இளைஞன் கைது செய்யப்பட்டார். அவரை வரும் 24ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க யாழ்ப்பாண நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டது.
கோண்டாவில் உப்புமடச் சந்தியில் அமைந்துள்ள லக்சுமி இரும்பக உரிமையாளர்கந்தையாகேதீஸ்வரன் (வயது-47) கடந்தசெப்ரெம்பர் 6ஆம்திகதிமாலை4மணியளவில் வன்முறைக்கும்பலின்தாக்குதலில் படுகாயமடைந்து சிகிச்சை பயனளிக்காது 24 நாள்களின் பின்னர் உயிரிழந்தார்.
தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடையவர்களின் ஒளிப்படங்கள் மற்றும் மறைகாணிப் பதிவுகள் பொலிஸாரால் வெளியிடப்பட்டிருந்த நிலையில்,தாக்குதல்மேற்கொண்ட இருவரும் தலைமறைவாகியிருந்தனர்.
பொலிஸாரின் தீவிர தேடுதலின் போது, தலைமறைவாகியிருந்த இருவரில் ஒருவர் கிளிநொச்சியில் வைத்து கடந்த செவ்வாய்க்கிழமை கைது செய்யப்பட்டார்.
கொக்குவிலைச் சேர்ந்த அவர் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் விசாரணைகளின் பின்னர் கடந்த புதன்கிமை பிற்பகல் யாழ்ப்பாண நீதிமன்ற நீதிவான் ஏ.பீற்றர் போல் முன்னிலையில்முற்படுத்தப்பட்டார்.
கொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய மேலும் சிலர் கைது செய்யப்படவேண்டும். இந்தக்கொலையின் பின்னணி தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்படுவதால் சந்தேகநபர் பொலிஸ் தடுப்புக் காவலில் வைத்து விசாரிக்க அனுமதிக்கவேண்டும் என்று பொலிஸார் விண்ணப்பம் செய்திருந்தனர்.
அதற்கு நீதிமன்று 48 மணித்தியாலங்கள் தடுப்புக் காவலில் வைத்து விசாரிக்கஅனுமதியளித்திருந்தது.
வழக்கு விசாரணை கடந்த வெள்ளிக்கிழமை வரை ஒத்திவைக்கப்பட்டது.
இந்த வழக்கு யாழ்ப்பாணம் நீதிமன்ற மேலதிக நீதிவான் காயத்திரி சைலவன் முன்னிலையில்நேற்றுமுன்தினம்விசாரணைக்குவந்தது.
தடுப்புக்காவல் இளைஞனையும் மற்றொருவரையும் பொலிஸார் நீதிமன்றில் முற்படுத்தினர். பாதிக்கப்பட்டோர் நலன் சார்பில் சட்டத்தரணி சிவலிங்கம் ரிஷிகேசன் முன்னிலையானார்.
"முதலாவதாகப் பெயர் குறிப்பிடப்பட்டதடுப்புக்காவல்உத்தரவுபெற்று விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட சந்தேகநபர் இந்தக் கொலைச் சம்பவத்தில்தொடர்புபட்டுள்ளார்என்பதற்குபோதியசாட்சியங்கள் சான்றுகள் இல்லை.
ஆனால் இவர் கொக்குவில் தொடருந்து நிலைய அதிபரைத் தாக்கிய சம்பவத்துடன் தொடர்புடையவர் என்பது யாழ்ப்பாணம் தலைமையகப் பொலிஸாரின் விசாரணைகளின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. எனவே இந்தக் கொலை வழக்கிலிருந்துமுதலாவதுசந்தேகநபரை விடுவிக்கவேண்டும்.
இந்தக் கொலைச் சம்பவத்துடன் தொடர்புடையவர் என்று இரண்டவதாக சந்தேகநபர் ஒருவர் யாழ்ப்பாணம் பெரும் குற்றத்தடுப்புப் பொலிஸ் பிரிவால் கைது செய்யப்பட்டுள்ளார்.
அவரிடம்விசாரணைகளைத்தொடரஏதுவாகசந்தேகநபரைவிளக்கமறியலில் வைக்க உத்தரவிடவேண்டும்" என்று கோப்பாய் பொலிஸார் விண்ணப்பம்செய்தனர். பொலிஸாரின் விண்ணப்பத்தை ஆராய்ந்த நீதிவான்முதலாவதுசந்தேகநபரை கொலைக் குற்றச்சாட்டு வழக்கிலிருந்து விடுதலை செய்தார். இரண்டாவது சந்தேகநபரை வரும் 24ஆம் திகதிவரை விளக்கமறியலில்வைக்கஉத்தரவிட்டார். (த-37)






பன்னாட்டு அஞ்சல் தினத்தை முன்னிட்டு காங்கேசன்துறை அஞ்சலக ஊழியர்கள் நேற்றுமுன்தினம் வெள்ளிக் கிழமை குருதிக்கொடை வழங்கினர். (ம-63)

## திறன் வகுப்பறை திறப்பு

கொடிகாமம், ஒக். 12
யாழ்ப்பாணம் சித்தன்கேணி வட்டு இந்து வித்தியாலயத்துக்குதிறன் வகுப்பறைமாணவர்களுக்குகையளிக்கும் நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.
தேசியக் கொள்கைகள், பொருளாதார விவகாரம், மீள்குடியமர்வு, மறுவாழ்வளிப்பு, வடக்கு அபிவிருத்தி மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சின் ஒதுக்கீட்டில் இந்த வகுப்பறை அமைக்கப்பட்டது.
அதன் செயலர் வீ. சிவஞானசோதி வகுப்பறையைத் திறந்து வைத்தார்.
இந்த நிகழ்வில் வலிகாமம் வலயக்கல்வி பணிப்பாளர் எஸ்.சுந்தரசிவம், வட்டு இந்து வித்தியாலய அதிபர் ஏ.ஆனந்தராஜா, ஆசிரியர்கள், மாணவர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். (ம-159)



## மின் வசதி கிடைக்காத பகுதிகளை பதிவுசெய்க

சாவகச்சேரி, ஒக். 13
தென்மராட்சிப் பிரதேசத்தில் இதுவரை மின்சார வசதி கிடைக்காத கிராமங்கள் அல்லது சாலைகள் இருப்பின் அவை பற்றிய விபரங்களைபிரதேசதிட்டமிடல் அலகுடன் தொடர்பு கொண்டுவழங்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.
தென்மராட்சி பிரதேச எல்லைக்குட்பட்ட கிராமங்களின் மின்மார்க்கங் களில் ஏதேனும் விரிவுபடுத்தல் செயற்பாடுகள் அல்லது பரவலாக்கல்செயற்பாடுகள் வேண்டியிருப்பதால் அவை தொடர்பான விவரங்களைசமர்ப்பிக்குமாறு பிரதேச செயலகதிட்டமிடல்பிரிவினர் கோரியுள்ளனர். (ம-9)

## தொழிற் கண்காட்சியும் தொழிற் சந்தையும்

யாழ்ப்பாணம், ஒக். 13
யாழ்ப்பாண மாவட்டத்தின் அரச தொழிற்பயிற்சிநிறுவனங்கள்ஒன்றிணைந்து வருடாந்தம் நடத்தும் தொழிற்கண்காட்சியும், தொழிற் சந்தை நிகழ்வும் எதிர் வரும்18ஆம்,19ஆம்திகதிகளில்நடத்தப்படத்தீர்மானிக்கப்பட்டுள்ளது.
யாழ்ப்பாணத்தில்உள்ள தொழில்நுட்பவியல் கல்லூரியில் இந்த நிகழ்வு இடம்பெறவுள்ளதுஎன்று ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ம-21)

## சின்மயா மிஷனின் வாணி விழா

யாழ்ப்பாணம்,ஒக்.13
யாழ்ப்பாணம் சின்மயா மிஷனின் நவராத்திரி செயற்பாடுகளின்நிறைவாக வாணி விழா இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல்10மணிக்கு இல9, செட்டித்தெரு ஒழுங்கை, நல்லூரில் அமைந்துள்ள சின்மயா மிஷனில் நடைபெறும்.
நிகழ்வில்கலைநிகழ்ச்சிகளும், நவராத்திரியை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பும் இடம்பெறவுள்ளன. (ஐ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வவுனியாவில்

# பார்த்தீனியம் ஒழிப்பு விழிப்புணர்வுப் பேரணி



வவுனியா, ஒக். 13

விவசாய ஊக்குவிப்பு வாரத்தை முன்னிட்டு வவுனியா பிரதிமாகாண விவசாய பணிப்பாளர் அலுவலகத்தின் ஏற்பாட்டில் பார்த்தீனியம் ஒழிப்பு விழிப்புணர்வு பேரணியும், பார்த்தீனியம் ஒழிப்பு நடவடிக்கையும் நேற்று இடம்பெற்றது.

'மனித ஆரோக்கியம், விவசாயம் சுற்றுசூழல், உயிர் பல்வகைமையை காக்க ஒன்றிணைவோம்' எனும் தொனிப்பொருளில் குறித்த நிகழ்வு முன்னெடுக்கபட்டிருந்தது.

இதன்போது வவுனியா நகரிலிருந்து, தாண்டிக்குளம் விவசாயக் கல்லூரி வரை பேரணியாக சென்ற அவர்கள், ஏ9 வீதியின் இருமருங்கிலும் உள்ள பார்த்தீனிய செடிகளை அகற்றியதுடன் விழிப்புணர்வு துண்டறிக்கைகளையும் விநியோகித்த னர். (ம-110)

# வீதிப் பாதுகாப்பு வார இறுதி நிகழ்வு இன்று

## யாழ். மத்திய கல்லூரியில் நடக்கும்

வடக்கு மாகாண வீதிப் பாதுகாப்பு வாரத்தின் இறுதிநாள் நிகழ்வு யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் இன்று காலை நடைபெறவுள்ளது.

வடக்கு மாகாணத்தில் இடம்பெறும் வீதி விபத்துக்களைக் கட்டுப்படுத்தவும், மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கோடும் வடக்கு மாகாணத்தில் வீதிப் பாதுகாப்பு வாரம் கடந்த திங்கட்கிழமை தொடக்கம் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. வடக்கு மாகாண ஆளுநரின் முயற்சியால் வடக்கு மாகாணத்திலுள்ள மாவட்டச் செயலகங்கள் உள்ளிட்ட திணைக்களங்களில் இந்த விழிப்புணர்வு நிகழ்வு நடத்தப்படுகின்றது. கடந்த வெள்ளிக்கிழமை விழிப்புணர்வுப் பேரணியும் ஏற்பாடு செய்யப்பட்டு நடைபெற்றிருந்தது. வடக்கு மாகாண ஆளுநர் செயலகம், வீதிப் பாதுகாப்புச் சபை, வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் அனுசரணையில் இந்த நிகழ்வு இடம்பெற்றுவருகின்றது. (த21)

# கருத்தமர்வும் பயிற்சிகளும்

தலைமன்னார், ஒக். 13

மன்னார் மறைமாவட்ட பொதுநிலையினரின் உருவாக்கத்தை ஆழப்படுத்தும் நோக்குடன் கருத்தமர்வு மற்றும் பயிற்சி மன்னார் மாவட்ட குடும்பநல பொதுநிலையினர் ஆணைக்குழு மண்டபத்தில் நடைபெறுகின்றது.

பொதுநிலைத் தலைவர்கள், வின்சன் டீ போல் சபையினர்மற்றும்கொல்பின் சங்கத்தினருக்கு இன்று நடைபெறும்.

நாளை குருத்துவ வாழ்வில் 20 ஆண்டுகளுக்கு உட்பட்ட குருக்களுக்கும், நாளைமறுதினம் மறைமாவட்ட அனைத்து குருக்களுக்கும், வரும் 16 ஆம் திகதி பங்குகளில் தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களுக்கும் குருக்களுக்கும், 17 ஆம் திகதி வவுனியா மாவட்டத்திலுள்ள மறைமாவட்ட குடும்பங்கள், பொதுநிலையினர், தலைவர்கள் மற்றும் ஆலய சபையினருக்கும், 18 ஆம் திகதி பங்கு மேய்ப்புப் பணிசபை மற்றும் ஆலய சபையினருக்கும் 19 ஆம் திகதி அரச, அரச சார்பற்ற ஊழியர்களுக்கும் மற்றும் துறைசார் நிபுணர்களுக்கும் கருத்தமர்வுகள் நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. நேற்று மறைமாவட்ட இளையோருக்கு நடைபெற்றது.

வளவாளர்களாக தென்னிந்தியாவைச் சேர்ந்த அருட்பணியாளர்கள், குழந்தை சாமி அடிகளார், செல்வராஜா அடிகளார், றோய் லாசர் அடிகளார் ஆகியோர் செயல்படுகின்றனர். (த-60)



# மக்கள் நடமாடும் சேவை இரணைதீவில் நடந்தது

## ஒளிப்பதிவு செய்தார் சிப்பாய்

யாழ்ப்பாணம், ஒக். 13

இரணைதீவில் மக்கள் நடமாடும் சேவை நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஏற்பாட்டில் இது நடைபெற்றது.

நடமாடும் சேவைக்காக 16 அரச நிறுவனங்கள் அழைக்கப்பட்டிருந்தன. அவற்றினூடாக இந்தப் பகுதியில் வசிக்கும் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகள் ஆராயப்பட்டு அவர்களுக்குத் தீர்வு பெற்றுக்கொடுக்கும் வகையில் குறித்த நடமாடும் சேவை இடம்பெற்றுள்ளது என்று இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாணப் பிராந்திய அலுவலக இணைப்பாளர் த. கனகராஜ் தெரிவித்தார்.

குறித்த பகுதியில் இயற்கை வளங்கள் சூறையாடப்படுகின்றன என்று நடமாடும் சேவையில் பொலிஸாரிடம் மக்கள் முறைப்பாடுசெய்தனர். மணல், கற்றாளை, மாடுகள் உள்ளிட்ட இயற்கை வளங்கள் வேறு நபர்களால் சூறையாடப்படுகின்றன. இதைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்று மக்கள் கோரினர்.

நடமாடும் சேவை ஆரம்பிக்கப்பட்டபோது அந்தப் பகுதியில் கடற்படை அலுவலர் ஒருவர் நிகழ்வுகளை ஒளிப்பதிவு செய்தார். யாழ்ப்பாணப் பிராந்திய இணைப்பாளர் கனகராஜ் குறித்த நபரை அழைத்து விசாரித்தார். பின்னர் அந்த நபர் அங்கிருந்து செல்லுமாறு பணிக்கப்பட்டு வெளியேற்றப்பட்டார்.

நடமாடும் சேவையில் பூநகரி பிரதேச செயலர் கிருஸ்ணேந்திரன், புதுக்குடியிருப்புப் பிரதேச சபைச் செயலர், திணைக்களங்கள் சார் அதிகாரிகள், மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிரிவுகள் சார் அதிகாரிகள், மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவன ஊழியர்கள் கலந்து கொண்டனர். (த-ரி1)

# மீசாலை விக்னேஸ்வராவில் சிறப்புற்ற ஆசிரியர்தின விழா

கொடிகாமம், ஒக். 13

தென்மராட்சி மீசாலை விக்கினேஸ்வரா மகா வித்தியாலயத்தின் ஆசிரியர் தின நிகழ்வு வித்தியாலயத்தின் கேட்போர் கூடத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

வித்தியாலய முதல்வர் சு. சிவானந்தன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், முதன்மை விருந்தினராக தென்மராட்சி கல்வி வலயத்தின் முன்னைநாள் கணித மூலவள நிலைய இணைப்பாளர் சி. பத்மநாதன், சிறப்பு விருந்தினர்களாக தஞ்சை தமிழ்ப் பல்கலைக் கழக தொலைக் கல்விப் பிரிவு மூத்த விரிவுரையாளரும், பாடசாலையின் பழைய மாணவர் சங்கச் செயலருமான க. ரஜனிகாந்தன், பிரான்ஸ் ஆசிரியர் பழைய மாணவர் சங்க உறுப்பினரான சு. சுதர்சன், பழைய மாணவர் சங்க ஆலோசகர் மா. மகேந்திரன் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

நிகழ்வில் ஆசிரியர்கள் மதிப்பளிக்கப்பட்டனர். மாணவர்களுக்கான கல்வி ஊக்குவிப்பு உதவிகளும் வழங்கப்பட்டன. (த-159)





# வவுனியாவில் டெங்கு ஒழிப்பு

வவுனியா, ஒக். 13

வவுனியா பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை அலுவலகத்தில் டெங்கு ஒழிப்பு செயற்திட்டம் நேற்று முன்னெடுக்கபட்டது.

வவுனியாவில் கடந்த சில நாள்களாக நீடித்து வரும் மழையுடனான காலநிலையைத் தொடர்ந்து குறித்த டெங்கு ஒழிப்பு நடவடிக்கை மேற்கொள்ளபட்டதுடன், வளாகத்தின் வடிகான்கள், சுற்றுப்புறம் உட்பட அனைத்து பகுதிகளும் துப்புராவாக்கபட்டது. (ம-110)

# சமூக பாதுகாப்புச் சபை மதிப்பளிக்கும் நிகழ்வு

ஏழாலை, ஒக். 13

இலங்கை சமூக பாதுகாப்புச் சபையின் வடக்கு மாகாண பிரிவின் சமூக பாதுகாப்பு ஒய்வூதியத் திட்டத்துக்கு 2017ஆம் ஆண்டில் அதிகூடிய பயனாளிகளை இணைத்துக்கொண்ட அலுவலர்களை மாகாண மட்டத்தில் மதிப்பளிக்கும் நிகழ்வு நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாண மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் இலங்கை சமூக பாதுகாப்புச் சபையின் பிரதிப் பொது முகாமையாளர் திருமதி கலதா டி.சில்வா தலைமையில் முற்பகல் 10 மணிக்கு இது நடைபெறவிருக்கிறது.

முதன்மை விருந்தினராக இலங்கை சமூக பாதுகாப்புச் சபையின் தலைவர் பி.எம். தேவகா வீரசிங்க, சிறப்பு விருந்தினராக வடக்கு மாகாணத்திலுள்ள ஐந்து மாவட்டங்களைச் சேர்ந்த மாவட்டச் செயலாகளும் கலந்து கொள்வர். (த-39)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அப்பாவி மக்களைக் கொன்றழித்த இராணுவத்தினரே சிறையிலடைப்பு

## அவர்களை விடுவிக்கும் உரிமை அரசதலைவருக்கு இல்லை
## கோத்தபாயவின் கருத்துக்கு ரவி கருணாநாயக்க பதிலடி

கொழும்பு, ஒக். 13

இது அரச தலைவரைத் தெரிவுசெய்வதற்கான தேர்தலே தவிர, தலைமை நீதியரசரை நியமிப்பதற்கான தேர்தல் இல்லை. நீதிமன்றத்தின் உத்தரவுக்கமைய சிறையில் அடைக்கப்பட்டிருப்பவர்களை விடுவிக்கும் உரிமை அரச தலைவருக்கு இல்லை இவ்வாறு தெரிவித்து கோத்தபாயவுக்குப் பதிலடி கொடுத்துள்ளார் ரவி கருணாநாயக்க. அவர் மேலும் தெரிவித்ததாவது:

'சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் அரச தலைவர் வேட்பாளர் கோத்தபாய ராஜபக்ச தனது அநுராதபுரத் தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில், தான் ஆட்சிக்கு வந்தால்நியாயமின்றிசிறைப்படுத்தப்பட்டிருக்கும் இராணுவத்தினரை விடுவிப்பதாகக் கருத்தொன்றை முன்வைத்தார். யார் நியாயமின்றி சிறையில் இருக்கின்றார்கள்? கடந்த ஆட்சிக்காலத்தில் அப்பாவிகளைக் கடத்தி வைத்து கப்பம் பெறும் நடவடிக்கைகளுக்குத் துணைபோன இராணுவத்தினரும், திருகோணமலையில் அப்பாவி மாணவர்கள் 11 பேரைக் கொல்வதற்குத் துணைபோனவர்களும், குடிதண்ணீர் கேட்டுப் போராடிய மக்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தியவர்களுமே சந்தேகத்தின் பேரில் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். அத்தோடு இது அரச தலைவரைத் தெரிவுசெய்வதற்கான தேர்தலே தவிர, தலைமை நீதியரசரை நியமிப்பதற்கான தேர்தல் இல்லை. நீதிமன்றத்தின் உத்தரவுக்கமைய சிறையில் அடைக்கப்பட்டிருப்பவர்களை விடுவிக்கும் உரிமைஅரசதலைவருக்குஇல்லை.

அரச தலைவர் தேர்தலில் எமது வேட்பாளராகக் களமிறக்கியிருக்கின்றசஜித்பிரேமதாஸவைவெற்றியடையச்செய்வதற்காக ஒவ்வொரு பிரதேசங்களிலும் அங்கு வாழும் மக்களுக்கு ஏற்றவாறு பொய்யான பரப்புரைகளை மேற்கொள்ள மாட்டோம். எனினும், மக்களின் ஆதரவைப் பெற்று வெற்றிகண்டு, நவம்பர் மாதம் 16ஆம் திகதியிலிருந்து நாட்டின் சுபீட்சமான எதிர்காலத்திற்கு இளைஞர்களை முன்நிறுத்திய ஒரு புதிய பயணத்தை ஆரம்பிப்போம்.

2015ஆம் ஆண்டுக்கு முன்புவரை மிகுந்த அச்சத்துடன் வாழ்ந்த காலத்தை முடிவுக்குக் கொண்டு வந்து, ஜனநாயகத்தை நிலைநாட்டும் போராட்டத்தில் வெற்றிகண்டோம். அதனைத் தொடர்ந்து நாங்கள் உறுதியளித்ததைப் போன்று நாட்டில் உயர்ந்தபட்ச ஜனநாயகத்தை நிலைநாட்டினோம்.

கடந்த வருடம் ஒக்டோபர் மாதம் இடம்பெற்ற ஜனநாயகத்துக்கு முரணான செயற்பாட்டின்போதும் பெருமளவு மக்கள் கூட்டத்தைத் திரட்டினோம். இம்முறை அரச தலைவர் தேர்தலிலும் அத்தகைய ஆதரவை வழங்குவதற்கு மக்கள் முன்வந்துள்ளமையைப் பார்த்து மகிழ்ச்சியடைகின்றோம்.

நாங்கள் ஆட்சிக்கு வந்த பின்னர் அரச தொழிலாளர்களின் ஊதியத்தைப் பெருந்தொகையாக அதிகரித்தோம். அதேபோன்று இராணுவத்தினரினது சம்பளத்தையும் அதிகரித்தோம். அத்தியாவசியப் பொருள்களின் விலைகளைக் குறைத்தோம். நாட்டில் குறித்த சில பிரதேசங்களுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டிருந்த அபிவிருத்தியை முழு நாட்டுக்கும் பரவலாக்கினோம். ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, அரச தலைவர் வேட்பாளர் சஜித் பிரேமதாஸ மற்றும் எமது கட்சியின் உறுப்பினர்களுடன் சிறுபான்மை மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகளின் தலைவர்களும் இணைந்து உருவாக்கிய புதிய ஜனநாயக முன்னணியின் ஊடாக எமது வெற்றிக்கான பயணத்தை ஆரம்பித்திருக்கின்றோம்' - என்றார். (ம-22,31)

## வாக்குச் சீட்டை ஒளிப்படமெடுத்த இளைஞன் எல்பிட்டியவில் கைது

கொழும்பு, ஒக். 13

எல்பிட்டிய பிரதேச சபைத் தேர்தலுக்கான வாக்களிப்புக்கு வழங்கப்பட்ட வாக்குச் சீட்டை கையடக்கத் தொலைபேசியில் ஒளிப்படமெடுத்த இளைஞர் ஒருவர் தலகஸ்பே வாக்குச் சாவடியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளதாக பிடிகல பொலிஸார் தெரிவித்துள்ளனர். குறித்த இளைஞன் தற்பொழுது பொலிஸ் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளதாகவும், எல்பிட்டிய நீதிவான் நீதிமன்றத்தில் பின்னர் தேர்தல் சட்டத்தை மீறிய குற்றச்சாட்டின் கீழ் வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளதாகவும் பிடிகல பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். (ம)

## நூல், இறுவெட்டு வெளியீடு இன்று

ஏழாலை, ஒக். 13

யாழ்ப்பாணம் ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியா சாலையின் நூற்றாண்டு விழாவின் இறுதி மூன்றாம் நாள் நிகழ்வில் நூல் மற்றும் இறுவெட்டு வெளியீடுகளும் மதிப்பளிப்பும் இன்று நடைபெறவுள்ளன. பாடசாலையின் கந்தசாமி அரங்கில் அதிபர் க.கெங்காதரகீர்த்தி தலைமையில் பிற்பகல் 3 மணிக்கு நடைபெறும். நிகழ்வில் ஆசியுரையை தெல்லிப்பளை துர்க்கா தேவி கோவில் தலைவர் செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு.திருமுகன் வழங்கவுள்ளார். முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலர் இ.இளங்கோவன் கலந்துகொள்வார். (த39)



வீதிப்போக்குவரத்து வாரத்தை முன்னிட்டு முருங்கன் பரிகாரிகண்டல் பாடசாலையில் வீதி விதிகள் தொடர்பாகவும், வீதியில் மாணவர்கள் நடந்து கொள்ளும் முறை தொடர்பாகவும் முருங்கன் வீதிப்போக்குவரத்து அதிகாரிகளால் நேற்று அறிவுறுத்தல் வழங்கப்பட்டது. (க-222)

## உரும்பிராயில் முழுநிலா கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஒக். 13

உரும்பிராய் ஞானவைரவர் சனசமூக நிலைய மாதாந்த முழுநிலாக் கருத்தரங்கு இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

நிலையத் தலைவர் ம.ரகுநாதன் தலைமையில் மாலை 5மணியளவில் சனசமூக நிலைய மண்டபத்தில் இது நடைபெறவுள்ளது.

கருத்தரங்கின் வளவாளராக நல்லூர்ப் பிரதேச சுகாதார மருத்துவ அதிகாரி அ.ஜெயக்குமார் கலந்துகொண்டு 'தொற்றா நோய்கள்' எனும் தலைப்பில் கருத்துரை வழங்கவுள்ளார். அந்தக் கருத்துரையைத் தொடர்ந்து கலந்துரையாடலும் இடம்பெறவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (த-21)

# யாழில் இந்திய அமைதிப்படையின் முதல் படுகொலை நினைவேந்தல்

## கொக்குவில் பிரம்படியில் நேற்று நடந்தது



யாழ்ப்பாணம், ஒக். 13

இந்திய அமைதிப் படையால் யாழ்ப்பாணம், கொக்குவில் - பிரம்படிப் பகுதியில் படுகொலைசெய்யப்பட்டவர்களின் 32 ஆவது நினைவேந்தல் நிகழ்வு நேற்று நடைபெற்றது.

படுகொலை செய்யப்பட்டவர்களின் உறவினர்களும் அந்தப் பகுதி மக்களும் நினை வேந்தலை ஏற்பாடு செய்திருந்தனர். நினைவேந்தல் நிகழ்வுகளின் ஆரம் நிகழ்வு கொக்குவிலில் அமைக்கப்பட்டுள்ள உயிரிழந்தவர்களின் நினைவுத் தூபியில் நடைபெற்றது.

தொடர்ந்து கொக்குவில் சனசமூக நிலையத்தில் வைக்கப்பட்டிருந்த உயிரிழந்தவர்களின் உருவப் படங்களுக்கு ஒளிச்சுடர் ஏற்றப்பட்டு மலர்கள் தூவி அஞ்சல் செலுத்தப்பட்டது. அஞ்சலிஉரைகளும் இடம்பெற்றன. நிகழ்வில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் செயலர் செ.கஜேந்திரன், யாழ்ப்பாண மாநகர துணை முதல்வர் ஈசன், மற்றும் பிரதேச சபை உறுப்பினர்கள், பொதுமக்கள் பலர் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தினர்.

1987ஆம் ஆண்டு அமைதிப் படை என்ற போர்வையில் யாழ்ப்பாணத்துக்கு வந்திறங்கிய இந்தியப் படையினர் யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளிலும் பல்வேறு படுகொலைகளை அரங்கேற்றியிருந்தனர். முதலாவது படுகொலை 1987ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 11, 12ஆம் திகதிகளில் கொக்குவில் பிரம்படியில் இடம்பெற்றது. பொது மக்கள் துப்பாக்கிச் சூடு நடத்தியும் கவச வாகனம் (செய்ன்பிளக்) கொண்டு வீதியில் போட்டு நசித்தும் 50க்கும் மேற்பட்ட மக்கள் துடிதுடிக்கக் கொல்லப்பட்டனர். அமைதிப் படையாக வந்த இந்திய இராணுவத்தின் முதலாவது தமிழ் இனப் படுகொலை சம்பவமாக பிரம்படி படுகொலை பதிவாகியிருந்தது. (த21,105 சி1)

## மாணவர்களுக்கு இரு இடங்களில் இன்று பரீட்சை

யாழ்ப்பாணம், வண்ணை சாந்தையர் மடம் சிறி கற்பக விநாயகர் கோவில் சைவ சமய அவிருத்திக் கழகம் சைவச் சிறார்க ளின் சைவ சமய அறிவை விருத்தி செய்யும் பொருட்டு, சிறிலசிறி ஆறுமுகநாவலர் குருபூசை யை முன்னிட்டு நடத்தும் சைவ சமய வினாவிடைப் பரீட்சை இன்று ஞாயிற்றுக்கிழமை நபடைபெறும். யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியிலும், கைதடி நுணாவில் அ.த.க பாடசாலையிலும் இந்தப் பரீட்சை நடைபெறவுள்ளது தரம் ஒன்று முதல் மூன்று வரையான மாணவர்களுக்கு காலை 9மணிக்கும், தரம் நான்கு முதல் ஆறு வரையான மாணவர்களுக்கு முற்பகல் 10 மணிக்கும், தரம் 7 முதல் 10 வரையான மாணவர்களுக்கு 11 மணிக்கும், இந்தப் பரீட்சை நடைபெறவுள்ளது. இந்தப் பரீட்சைக்கு பல பாடசாலைகளைச் சேர்ந்த 500க்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்துகொள்ளவுள்ளனர். இவர்களுக்கான அனுமதிஅட்டைகள் தபால் மூலம் அனப்பிவைக்கப்பட்டுள்ளன. பரீட்சைக்குரிய நேரத்தில் மேற்படி மாணவர்களைத் தவறாது கலந்துகொள்ளுமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். (த-21)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞாயிறு சிறப்பம்சம்
13.10.2019
சூரியகாந்தி



அருண்பாக்யா

# மௌன வாக்காளர்களும் சமூக வலைத்தளங்களும்

எதிர்வரும் அரச தலைவர் தேர்தலின்போது இதுவரையிருந்த வாக்காளர்களைவிடப் புதிதாகப் 10 இலட்சம் இளையோர் வாக்களிக்கத் தகுதி பெற்றிருப்பதாகத் தேர்தல் ஆணைக்குழுவின் தலைவரான மகிந்த தேசப்பிரிய குறிப்பிட்டார். இந்தப் 10 இலட்சம்பேரும் ஏற்கனவே உள்ள வாக்காளர்களில் தலா இரண்டு பேர் வீதமாவது (தமது வீட்டிலுள்ள உறவுகள், அல்லது நண்பர்கள் வட்டத்தில்) 20 லட்சம் வாக்காளர்களைத் தமது சிந்தனைக்கும், செயற்பாட்டுக்கும் ஏற்றவாறு மாற்றிவிடுவதற்கு வாய்ப்புண்டு என்று கருத முடியும். இந்தமாற்றத்துக்குக்காரணமாக இருப்பது இந்தப்புதியவாக்காளர்கள் மத்தியில் அதிகம் சிலாகிக்கப்படுகின்ற முகநூல் மற்றும் சமூக வலைத்தளங்கள் என்று அறுதியாகக் கூறமுடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொரு குடும்பத்திலும் உள்ளவர்கள் தமக்குள் யாரோ ஒரு தலைவரை அல்லது கட்சியை முதன்மைப்படுத்தி இதுவரை வாக்களித்து வந்திருக்கலாம். அவர்கள் தொடர்ச்சியாக அந்த நடைமுறையைப் பின்பற்றி வரலாம். இவ்வாறு வழக்கமாக ஆதரவளிக்கின்ற கட்சிகளதும், நபர்களதும் தவறான சித்திரிப்புப்பக்கங்களை இணையத் தளங்களின் ஊடாக இலகுவாகப் பெற்றுவிடுகின்றபுதிய வாக்காளர்கள் தமது குடும்பத்தினருக்கும், உறவுகளுக்கும் அதை எடுத்துக்காட்டுவதற்கு வாய்ப்புண்டு. உதாரணத்துக்கு எதிர்வரும்தேர்தலில்போட்டிமிக்கமுதன்மை வேட்பாளர்கள் என்று கருதத்தக்க கோத்தபாயவின் கடந்த கால இராணுவ ஒடுக்குமுறைகள், ஆட்கடத்தல்களையோ, சஜித் பிரேமதாசாவின் கட்சியால், அவருடைய தந்தையின் ஆட்சியால் ஏற்பட்டு பாதகங்கள் குறித்தே சுட்டிக்காட்டி எதிர்வரும் தேர்தலில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு வாய்ப்புண்டு.

### மௌன வாக்காளர்கள்


இதுவரைகாலமும்தேர்தல்பரப்புரைக் கூட்டத்தில்பங்குபற்றுகின்றமக்களின் தொகையை வைத்து அந்தக் கட்சிக்கான ஆதரவை உறுதிப்படுத்திவிட முடிந்தது. தற்போது மௌன வாக்காளர்களின்தொகைஅதிகரித்துள்ளது. ஒருவர் எந்தக் கட்சிக்கு ஆதரவாக உள்ளார் என்பதை இலகுவில் கண்டுபிடித்துவிட முடியாதுள்ளது. இவ்வாறானமௌனவாக்குகள்வடக்குமாகாணத்திலும் அதிகமாக உள்ளன என்பதை அவதானிக்க முடிகிறது. இந்த மௌனவாக்குகள்குறித்துயாரும்ஆருடம்கூறிவிடமுடியாது. கருத்துக்கணிப்புகளின் கவனத்திலும் இது சிக்காது.

### சமூக வலைத்தளங்களால் பரந்தளவில் மாற்றம்


முகநூல், இணையத்தளங்கள்மூலம் தமது குடும்பங்களுக்கு அப்பால் சென்றுநாடுதழுவியரீதியில்கருத்துப் பரவலைச் செய்வதற்கு வாய்ப்பு ஏற்படுகிறது. இத்தகையசெயற்பாடுகளால் எதிர்வரும்தேர்தலில்எவர்வெல்வார்? எனத்திட்டவட்டமாகஎதிர்வுகூறமுடியாதிருக்கும். இதனால்கருத்துக்கணிப்புகள் வெறும் பொழுதுபோக்குச் செயற்பாடுகளாகவே அமையும். அத்தோடு அனைவரும் தமது கருத்துக்களை வெளிப்படையாகக் கூறுவதில்லை. அதைவிடக் கூறுபவர்களும் வாக்குச்சீட்டில் புள்ளடியிடும்வரை அதே நிலைப்பாட்டில்தான் இருப்பார் என்று உறுதியாகக் கூறிவிடமுடியாது. முகநூல், சமூக வலைத்தளங்களைப் பயன்படுத்துவோரில்சிலர்குறைந்தது 3 மொழிகளிலாவது இவற்றைக் கையாளும் ஆற்றல் கொண்டவர்களாக இருப்பர். இவர்கள் தமது உறவு வட்டத்தைத்தாண்டி அதிக தூரம் செல்லவும்கருத்துருவாக்கத்தைஏற்படுத்திவிடவும் வாய்ப்புண்டு. அரசியல் கட்சிகள் வெளியிடுகின்ற துண்டுப் பத்திரிகைகள் போன்றனவே முன்னைய தேர்தல்களில்அதிகபங்காற்றிவந்தன. தற்போதுள்ள நிலையில் அது மாற்றமடைந்துள்ளது. சமூக வலைத்தளங்கள் அதை ஆக்கிரமித்துள்ளதோடு, இளவயதினரின் சிந்தனை பின்பால் சென்று பெருமளவில் மாற்றங்களையும் ஏற்படுத்த விளைகின்றன.

### மக்களை நேரடியாக அணுகும் வழியில்லை

அரசியல்கட்சிகளின்ஆதரவாளர்கள் மக்களைச் சந்தித்துத் துண்டுப் பத்திரிகைகளை வழங்குகின்ற நிலையில் தற்போது இல்லை. தத்தமது தேர்தல் பரப்புரை வாசகங்களை வீட்டு வாசல்களில் எறிந்துவிட்டுப்போகும் நிலையும்ஏற்பட்டுள்ளது. இதற்கு முக்கிய காரணம் இன்றைய அரசியல்கட்சிகள்ஒன்றுவிடாதுமக்களுக்காகச் சேவையாற்றாத தன்மையே. இதனால் மக்கள் கேட்கும்கேள்விகளுக்குநேரில்முகம் கொடுக்கும்போது அவர்களால் பதிலளிக்க முடியாதிருக்கிறது. அத்தோடுகட்சிசார்ந்த ஒருவர் பத்திரிகைகளுக்கோ, ஊடகங்களுக்கோ கருத்து வெளியிட்ட மறுகணமே முகநூலிலும் ஏனைய சமூக வலைத்தளங்களிலும்அதற்கானஎதிர்வினை அள்ளிவீசப்படுகிறது. ஆனால், கருத்துவெளியிட்டவர்அதற்குப்பதிலளிக்கும் நிலை இருப்பதில்லை. இதனால் அரசியல் பிரபலங்களால் வாய்திறக்க முடியாமலிருக்கிறது. இந்த நிலையில் பல அரசியல் புள்ளிகளை ஓரங்கட்டி வருவதில் இந்தச் சமூக வலைத்தளங்கள், ஊடகங்களுக்கு முக்கிய பங்குண்டு. முகநூல், சமூக வலைத்தளங்கள் அரசியல் தொடர்பில் மக்களைக் கூட்டிப் பொது மேடைகளில்பேசும்நிலையைத்தவிர்த்திருக்கின்றன என்று சொன்னாலும் தகும்.



### இந்தியத் தேர்தலில் சமூகவலைத்தளச் செல்வாக்கு



இந்தச் சமூக வலைத்தளங்களின் பலத்தை இறுதியாக நடந்த இந்தியப் பொதுத்தேர்தலில்வெளிப்படையாகக் காணமுடிந்தது. அந்தப் பொதுத் தேர்தல் நடப்பதற்கு ஒரு சில மாதங்களுக்கு முன்னர் இந்தியாவின் சில மாநிலங்களில்நடந்த இடைத்தேர்தல்களில் காங்கிரஸ் கட்சி வெற்றிபெற்றிருந்தது. மோடி தலைமையிலான பா.ஜ.க. படு தோல்வியடைந்திருந்தது. அதைவைத்துப்பொதுத்தேர்தலிலும்காங்கிரஸ்அதிகஆசனங்களைப் பெறும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், அதற்கு இடைப்பட்ட குறுகிய கால இடைவெளியில் தேர்தல் பரப்புரைகள் மற்றும் ஏற்கனவே ஏற்பட்ட தோல்விவிடயத்தில்மோடிஅவதானிப்புகளைச் செலுத்தியதன் காரணமாக மூன்றில் 2 பெரும்பான்மைக்கும் அதிகளவு ஆசனங்களைப் பெற்றது பா.ஜ.க. மட்டுமல்லாது நேரு, இந்திரா காந்தி, ராஜீவ் [illegible] நேரு குடும்ப[illegible] ஏனைய கட்சிகள் என்றுமே தோற்கடிக்க முடியாது என்று பெயர் பெற்றிருந்த தேர்தல்தொகுதியான அமெதித் தொகுதியில் பா.ஜ.க முதல் தடவையாக வெற்றி பெற்றது.

### இலங்கையில் சமூகவலைத்தளப் பாவனை

இலங்கையில்பெரும்பான்மை இனத்தவரான சிங்கள மக்கள் மத்தியில் முகநூலினதும், ஏனையசமூகவலை தளங்களினதும்பாவனை என்றுமில்லாத அளவுக்கு அதிகரித்துள்ளது. இவற்றின் மூலம் வேட்பாளர்கள் தொடர்பாகத் தற்போதே பலவாறான கருத்துகள் பரவ ஆரம்பித்துவிட்டன. ஐக்கிய தேசியக் கட்சி, பொது மக்கள் முன்னணிஆகிய இரண்டுகட்சிகளும் ஊழல் நிறைந்தவை, சிறுபான்மை மக்கள் விடயத்தில் எந்தத் தீர்வையும் முன்வைக்காது செயற்படுகின்ற கட்சிகள் என்கிற பதிவுகள் உருவாகியுள்ளன. மேற்குறித்தகட்சிகளின்ஊழல்களை விமர்சித்து வாக்குப் பெற நினைக்கிறார் ஜே.வி.பி. தலைவர், அவர் தமிழ், முஸ்லிம் மக்கள்தொடர்பில்வாய்திறக்கவில்லைஎன்றும் பதிவுகளுள்ளன. சிங்களமக்களைப்பொறுத்தவரை மத்திய வங்கிப் பணமுறி விடயங்களோ, மகிந்த அணியினரின் ஊழல்களோ எதிர்வரும் தேர்தலில் நேரடியாகப் பாதிப்பை ஏற்படுத்தும் என்று கருதுமளவுக்கு இல்லை. இவ்விரு கட்சிகளில் ஒன்றில் இருந்தே புதிய அரச தலைவர் தெரிவாக இருக்கிறார் என்பதும் தெரிகிறது. தலைமைத்துவ ஆளுமை, சிங்கள பௌத்தம் பேணுபவர் ஆகிய விடயங்களுக்கே சிங்கள மக்கள் முக்கியத்துவம் கொடுப்பது தெரிகிறது.

சஜித் பிரேமதாச வெற்றிபெற்றால் ஆறுமாத காலத்துக்குள் அதிகாரமிக்க அரசதலைவர் பதவியை இல்லாது செய்ய வேண்டும் என்ற கருத்து பொதுவாகக் காணப்படுகிறது. மறுபுறத்தில் இது ஓர் அதிகாரமற்ற பதவிக்கா வாக்களிக்கப்போகிறோம் என்ற கேள்வியையும் எழுப்பியுள்ளது.

தேர்தல் விடயங்களை ஆரம்பிக்கும் போதே விளம்பர நிறுவனங்களை வாடகைக்கு அமர்த்திப் பாடல்கள், கவர்ச்சிகரமான கட் அவுட்கள், பதாகைகள் என எல்லாவற்றையும் உருவாக்கி இருக்கிறார் கோத்தபாய. மகிந்தராஜபக்ச, சமல் ராஜபக்ச, பசில் ராஜபக்ச, நாமல் ராஜபக்ச ஆகியோர் தோள்களில் போடும் சால்வையின் நிறம் இந்தக் கட்சிக்குரியதாகியிருப்பது 'குடும்ப ஆட்சி' எனும் தலைப்பிடலில் முகநூலில் விவாதத்தை ஏற்படுத்தியிருக்கிறது. பௌத்தர்கள் விகாரைக்கு எடுத்துச் செலும் தாமரை மொட்டு இந்தக் கட்சியின் சின்னமாக்கப்பட்டிருப்பது பற்றியும் பேசப்படுகிறது. தேர்தலுக்கான இணையத்தளம் ஒன்றைப் பசில்ராஜபக்ச ஆரம்பித்து வைத்திருப்பதாகவும்சுட்டிக்காட்டப்படுகிறது. இவ்வாறான செயற்பாடுகள் சிங்கள இளைஞர், யுவதிகளில் புதிய வாக்காளர்களைக் கவரும் வகையில் கட்டமைக்கப்பட்டிருக்கிறது.

### அரச தலைவர் தெரிவு முறை

தேர்தலில் 50வீதத்துக்கு அதிகமான வாக்குகளைப்பெறுபவரேஅரசதலைவராக முடியும். 50 வீத வாக்குகளை எவரும் பெறுவதற்கு வாய்ப்பில்லை என்றும் எதிர்பார்க்கப்படுகிறது (இது தலைகீழாக மாறவும் வாய்ப்புண்டு). அவ்வாறு போதிய வாக்குகள் பெற முடியாத நிலையில் ஏனைய வேட்பாளர்கள் பெற்ற வாக்குகளில் 2ஆவது தெரிவாகவுள்ள போட்டியிலுள்ள நபருக்கு இடப்பட்ட வாக்குகள் எண்ணப்படும். இதன் முடிவில் அதிக வாக்குகளைஎவர்பெறுகிறாரோஅவரேஅரச தலைவர் ஆக முடியும். இந்த முறை தேர்தலில் மௌன வாக்காளர்களின் பலம் வெளித் தெரியாதிருப்பதுதான் முக்கிய அம்சமாகவுள்ளது. சமூக வலைதளங்கள் மீதமிருக்கின்ற குறுகியநாள்களுக்குள் அதிகளவில் இந்த மௌன வாக்காளர்களை உருவாக்கும் முயற்சியில் ஈடுபடவுள்ளன. முகநூல்களும், சமூக வலைத்தளங்களும் மிக வேகமான கருத்துருவாக்கத்தை ஏற்படுத்த வல்ல சக்தி மிக்க சாதனங்கள் என்பது எதிர்வரும் தேர்தலின் பின் வெளித்தெரியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அரச தலைவர் வேட்பாளர் சிவாஜிலிங்கத்துக்கு ஒரு திறந்த மடல்!

அன்புள்ள அரசதலைவர் வேட்பாளர் மகாலிங்கம் கனகலிங்கம் சிவாஜிலிங்கம் அவர்களுக்கு, வணக்கம்! நான் நலம், அதுபோல நீங்களும் உடல், உள சுக சேமமாக இருக்க எனது பிரார்த்தனைகள்.

இலங்கையின் அடுத்த அரச தலைவரைத் தெரிவதற்கான தேர்தலில் களமிறங்கியிருக்கும் உங்களுக்கு எனது வாழ்த்துகள்!

'பெட்டிக்கு வெளியே' சிந்திக்கும் வகையான முடிவொன்றை எடுத்து, இந்த முறை வாக்குப்பெட்டிகளின் அதிகரிப்பை ஏற்படுத்துவதிலும் வாக்குச் சீட்டின் நீளத்தை அதிகரிப்பதிலும் நீங்களும் பங்களித்திருக்கிறீர்கள்.

பாடசாலைப் பருவத்தில் எம்மில் பலர் "நான் நாட்டின் அரச தலைவரானால்..." என்னும் தலைப்பில் கட்டுரையை தமிழ்ப்பாட ஆசிரியரின் வற்புறுத்தலினால் எழுதியதுண்டு. பின்னர் அதனை அதனோடே விட்டுவிட்டு மற்ற மற்றச் சோலிகளில் சுறுசுறுப்பாகிவிட நீங்களோ அந்த விடயத்தை நினைவில் வைத்து மீண்டும் அரச தலைவருக்கான தேர்தல் களத்தில் இறங்கியிருக்கிறீர்கள்.

2010ஆம் ஆண்டில் நிறைவேற்றதிகார அரச தலைவராவதற்கு முயற்சித்த நீங்கள், அந்த முயற்சி பிசகிய நிலையில் ஒன்பது ஆண்டுகளுக்குப் பிறகு இந்த ஆண்டும் களம் வந்திருக்கிறீர்கள். நிறைவேற்றதிகாரமற்ற அரச தலைமையைப் பெற்றுக்கொள்வதன் மூலம், தமிழர் பிரச்சினைகளுக்கு மட்டுமல்ல நாட்டின் பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்க நீங்கள் முன்வந்திருக்கிறீர்கள்.

கனடாவிலேயோ ஸ்காபுரோவிலோ அல்லது ஏனைய பிற நாட்டு பிரதேசங்களிலோ தமிழர் ஒருவர் தேர்தலில் போட்டியிடும்போது அது மதிப்புமிக்க ஒன்றாக நோக்கப்படுவதுண்டு. ஆனால் இலங்கையின் குடிமகனான நீங்கள், அதுவும் அரச தலைவருக்கான தேர்தலில் போட்டியிடுவதற்குரிய தகுதிகளைப் பூர்த்தி செய்யும் நீங்கள் உங்கள் சொந்த நாட்டில் அரச தலைமைக்காக போட்டியிடுவது வேடிக்கைக்குரியதாக நோக்கப்படுகிறது.

**2010ஆம் ஆண்டில் போட்டி**

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினராகவும் முன்னாள் நகரசபைத் தலைவராகவும் முன்னாள் மாகாணசபை உறுப்பினராகவும் அறியப்பட்ட நீங்கள், 2010ஆம் ஆண்டு நடந்த அரச தலைவருக்கான தேர்தலில் தான் அரச தலைவருக்கான போட்டிக்களத்தில் முதன்முதலில் ருசி பார்க்க இறங்கியிருந்தீர்கள். அதில் நாடாளாவிய ரீதியில் செலுத்தப்பட்டுச்செல்லுபடியான 9 ஆயிரத்து 662 வாக்குகளைப் பெற்றுப் போட்டியிட்ட 22 வேட்பாளர்களில் 9ஆம் இடத்தை பெற்றிருந்தீர்கள். சிறிதுங்க ஜயசூரிய மற்றும் விக்கிரம பாகு கருணாரட்ன போன்றோரை விட அதிக வாக்குகள் உங்களுக்குக் கிடைத்திருந்தன. அந்தத் தேர்தலில் முன்னாள் இராணுவத் தளபதியான சரத் பொன்சேகா போட்டியிட்டிருந்தார்.

**குருநாகலில் போட்டி**

2015ஆம் ஆண்டு அரச தலைவருக்கான தேர்தலில் ஒதுங்கி நின்ற தாங்கள், அதே ஆண்டில் இடம்பெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் குருநாகல் மாவட்டத்தில் போட்டியிட்டி அங்கும் உங்கள் பலத்தைக் காட்டியிருந்தீர்கள். மைத்திரிபாலவின் அனுசரணையுடன் மகிந்த ராஜபக்ச அந்த வருட நாடாளுமன்றத் தேர்தலில் குருநாகல் மாவட்டத்தை தேர்ந்தெடுத்திருக்க, நீங்களும் உங்கள் எதிர்ப்பைத் தெரிவிக்க அங்கே விரைந்தீர்கள். இவ்வகையான நடவடிக்கைகள் மூலம் தமிழர்களுக்கு இருக்கும் சுதந்திரத்தையும் தெரியப்படுத்தியிருந்தீர்கள்.

**அமெரிக்கத் தேர்தலில் !**

இலங்கையின் அரச தலைமைப் பதவியைக் கைப்பற்றும் முயற்சியில் சற்றும் தளராத விக்கிரமாதித்தனாக மீண்டும் களமிறங்கியிருக்கும் நீங்கள், எனக்கோ 'உள்ளூர் ஆபிரகாம் லிங்கனாகவே' தோன்றுகிறீர்கள். 1860ஆம் ஆண்டில் அமெரிக்காவின் அதிபராகத் தெரிவுசெய்யப்பட்ட ஆபிரகாம் லிங்கன் உங்களைப்போலவே தனது முதலாவது முயற்சியில் வெற்றிபெற்றிருக்கவில்லை. ஆனால் சிலபல தோல்விகளின் பின்னர் அவர் அமெரிக்காவின் அரச [illegible] ரிக்க அரச தலைமைக்கான தேர்தலைப் பற்றிக் கதைக்கும் பொழுது அந்தத் தேர்தலோடு உங்களைச் சம்பந்தப்படுத்தும் இன்னோர் விடயமும் எனக்கு நினைவுக்கு வருகிறது. மூன்றாண்டுகளுக்கு முன்பதாக 2016இல் ஹிலாரி கிளின்டன் அமெரிக்கத் தேர்தலில் போட்டியிட்டபோது அவருடைய வெற்றிக்காக உள்ளூரில் உழைத்தவர் நீங்கள். நல்லூர் ஆலய முன்றலில் அவருடைய தேர்தல் வெற்றிக்காகத் தேங்காய் உடைத்துக் ஹிலாரி கிளின்டன் மீதான பற்றைப் பறைசாற்றியிருந்தீர்கள். மிகுந்த சிரமத்தின் மத்தியில் மீன் சின்னத்தைப் பெற்று அரச தலைவர் தேர்தலுக்கான பரப்புரையை விட நான் ஏன் அரச தலைவர் தேர்தலில் போட்டியிடுகிறேன் என்பதை முக்கிய தேர்தல் பரப்புரையாகியிருக்கும் நீங்கள் போர்க்குற்றவாளிகளை எதிர்ப்பதற்குத் தேர்தலை எவ்வாறு பயன்படுத்தலாம் என்பதையும் 'தெளிவுபடுத்தி' வருகின்றீர்கள்.


**நாடு முழுதும் பரப்புரை!**

வடக்கு மாகாணசபையின் முன்னாள் உறுப்பினரான உங்களுக்கு, வடக்கு மாகாண சபையின் செங்கோலைச் சேதப்படுத்திய வரலாறும் இருக்கிறது. வித்தியாசமாகச் சிந்திக்கும் நீங்கள், அதனைச் செயற்படுத்தும் விதம், அதற்குக் கற்பிக்கும் தர்க்க ரீதியான நியாயம் என்பன பல சந்தர்ப்பங்களில் சிரிக்கவும் சில சந்தர்ப்பங்களில் சிந்திக்கவும் வைத்திருக்கின்றன. எதிர்வரும் நவம்பர் 16ஆம் திகதி நடைபெறவுள்ள அரச தலைவர் தேர்தலில் பங்காளனாகும் நீங்கள் நாடாளாவிய ரீதியிலான பரப்புரைக்கும் தயாராகி வருவதாகத் தெரிகிறது. பாதுகாப்பு வழங்கப்பட்டால் காலி, மாத்தறை பகுதிகளுக்கும் உங்கள் பரப்புரையை எடுத்துச் செல்ல ஆயத்தமாக இருப்பதாகத் தெரிவித்திருக்கும் நீங்கள் தமிழ்த் தரப்புக்கள் முன்வைக்கும் கோரிக்கைகள் செவி சாய்க்கப்பட்டால் போட்டியிலிருந்து விலகுவதாகவும் வாக்குறுதி அளித்திருக்கிறீர்கள்.

போர்க்குற்ற விசாரணையை நடத்துவது, போர்க்குற்றவாளிகளுக்குத் தண்டனை பெற்றுத்தருவது போன்ற விடயங்களில் கடும்போக்கைக் கடைப்பிடித்து வரும் நீங்கள் அரச தலைவருக்கான நியமனப் பத்திரம் தாக்கல் செய்ததனையடுத்துக் கொலை அச்சுறுத்தல்களுக்கும் உள்ளாகி வருவதாகத் தெரிவித்திருக்கிறீர்கள்.

எதிர்ப்புகளுக்கு மத்தியில் பயணத்தைத் தொடங்கியிருக்கும் உங்களுடைய முயற்சி கோமாளித்தனமான ஒன்றாக நோக்கப்படுகையில், அது புதிய தர்க்கங்களுக்கான வாயிலையும் அகலத்திறந்திருக்கிறது. உங்களுடைய முயற்சியின் அறுவடை என்ன என்பதை அரச தலைவர் தேர்தலின் பின் ஊடகங்களுக்கு வழங்குவதற்கு மறக்க வேண்டாம்.

நன்றிகளுடன்,
**ஸூடோ ஸ்வாமி**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 2019 நோபல்!

கா.பார்வி

இயற்பியல், வேதியியல், இலக்கியம், மருத்துவம் அல்லது உடலியங்கியல் மற்றும் அமைதி ஆகியவற்றில் சிறந்து விளங்கியவர்களைத் தெரிவு செய்து இந்தப்பரிசுகள்வழங்கப்படுவதுவழமை. அந்த வகையில் இந்த வருடத்துக்கான நோபல் பரிசைப் பெறுபவர்களின் பெயர்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

சுவீடனைச் சேர்ந்த வேதியியலாளர் அல்பிரட் நோபல் என்பவரால் 1895ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட பரிசளிப்பு முறை இது. இதன் முதல் பரிசு 1901ஆம் ஆண்டில் வழங்கப்பட்டது. சில ஆண்டுகளில் இந்தப் பரிசு கூட அறிவிக்கப்படாமல் போனதும் உண்டு. எனினும், குறைந்தபட்சம் ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறையாவது இந்தப் பரிசு அறிவிக்கப்பட்டு வருகிறது. இயற்பியல், வேதியியல், இலக்கியம், மருத்துவம் அல்லது உடலியங்கியல் மற்றும் அமைதி ஆகியவற்றில் சிறந்து விளங்கியவர்களைத் தெரிவு செய்து இந்தப் பரிசுகள் வழங்கப்படுவது வழமை. அந்த வகையில் இந்த வருடத்துக்கான நோபல் பரிசைப் பெறுபவர்களின் பெயர்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. இந்த ஆண்டுக்கான நோபல் பரிசுக்கு 223 தனிநபர்கள், 78 அமைப்புகள் உட்பட 301 பரிந்துரை விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றிருக்கின்றன. அவற்றில் இருந்து தெரிவு செய்யப்பட்ட சிலருக்கே நோபல் வழங்கப்படவிருக்கிறது.

### இலக்கியத்துக்கான நோபல் பரிசு



2019ஆம் ஆண்டுக்கான இலக்கியத்துக்கான நோபல் பரிசைப் போலந்து, ஆஸ்திரிய நாடுகளைச் சேர்ந்த ஓல்கா டோகார்ஸுக் மற்றும் பெறுகின்றனர். 76 வயதான ஆஸ்திரிய நாடக ஆசிரியரும் நாவலாசிரியருமான பீட்டர் ஹேண்ட்கேவுக்கு, 'மொழியியல் புத்திக் கூர்மையின் மூலம் மனித அனுபவத்தின் தனித்துவத்தை ஆராய்ந்த ஒரு சிறப்புமிக்க படைப்புக்காக' நோபல் பரிசு வழங்கப்படுவதாக அந்த அமைப்பின் அறிக்கையில் குறிப்பிடப் பட்டுள்ளது. போலந்து நாவலாசிரியரான 57 வயதான டோகார்ஸுக்கின் எழுத்து நடைக்கும், கோணத்துக்கும் இந்தப் பரிசு வழங்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### 2018 இலக்கியத்துக்கான பரிசு வழங்கப்படவில்லை

நோபல் விருது வழங்கும் அமைப்பிலுள்ள உறுப்பினர் ஒருவரின் கணவருக்கு எதிரான பாலியல் குற்றச்சாட்டைக் கையாண்ட விதம் சர்ச்சைக்குள்ளானதையடுத்து சர்ச்சைக்குரிய அந்த உறுப்பினர் உள்ளிட்ட ஐந்து உறுப்பினர்களும், அதன் தலைவரும் குறித்த அமைப்பிலிருந்து பதவி விலகினர். அதையடுத்து, 2018ஆம் ஆண்டில் இலக்கியத்துக்கான நோபல் பரிசுக்குரியவரை 2019ஆம் ஆண்டு பரிசுக்குரியவரோடு சேர்த்துத் தெரிவு செய்யப் போவதாக அறிவிக்கப்பட்டது. 1901ஆம் ஆண்டு முதல் முறையாக இந்தப் பரிசு வழங்கப்பட்டதில் இருந்து இந்தப் பரிசு தொடர்பாக எழுந்த மிகப்பெரிய சர்ச்சையாக இது கருதப் பட்டது. இதனால்இந்த ஆண்டு இலக்கியத்துறையில் தெரிவுசெய்யப்பட்ட ஓல்கா டோகார்ஸ் 2018ஆம் ஆண்டுக்கான நோபல் பரிசுக்குரியவராகவே தெரிவாகினார். பீட்டர் ஹேண்ட்கேவுக்கே இந்த ஆண்டுக்கான இலக்கிய நோபல் பரிசு அறிவிக்கப்பட்டது. இந்த இடத்தில் குறிப்பிடப்பட வேண்டிய மற்றொரு விடயம் உலகப் போர்கள் நடந்து வந்த காலங்களில் ஆறு ஆண்டுகள் இலக்கியத்துக்கான நோபல் பரிசு வழங்கப்படவில்லை. இது தவிர, 1935ஆம் ஆண்டு தகுதியான யாரும் இல்லை என்பதால் இந்தப் பரிசு அறிவிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

### இயற்பியலுக்கான நோபல் பரிசு



பேரண்டம் பற்றிய கண்டுபிடிப்புகளுக்காக மூன்று விஞ்ஞானிகள் இயற்பியலுக்கான நோபல் பரிசைக் கூட்டாகப் பெறுகிறார்கள். '51 பெகாசி' என்ற தொலைதூரக் கோளைக் கண்டுபிடித்ததற்காகக் கனடாவில் பிறந்த 84 வயதான ஜேம்ஸ் பீட்பிள்ஸ், டிடியர் குவிலாஸ், மைக்கல் மேயர் ஆகிய மூவருக்கும் இந்த விருது கூட்டாக வழங்கப்பட்டுள்ளது. 50 ஒளி ஆண்டு தூரத்தில் உள்ள சூரியனைப் போன்ற ஒரு நட்சத்திரத்தைச் சுற்றிவரும் 51 பெகாசி என்ற வாயுக் கோள் ஒன்றைக் கண்டுபிடித்ததற்காக டிடியர் குவிலாஸ், மைக்கல் மேயர் ஆகிய இருவரும் நோபல் பரிசுக்குத் தெரிவுசெய்யப்பட்டனர். ஒளியின் திசைவேகம் விநாடிக்கு சுமார் 3 இலட்சம் கிலோ மீற்றர். இந்த வேகத்தில் ஒளி ஓர் ஆண்டு பயணித்தால் செல்லக்கூடிய தூரமே ஓர் ஒளியாண்டு தூரம். அந்தத் தூரத்தில் சூரியனைப் போன்றதொரு நட்சத்திரத்தைச் சுற்றிவரும் கோள் ஒன்றை சூரியக் குடும்பத்துக்கு வெளியே கண்டுபிடித்தது இதுவே முதல் முறை. இவர்கள் இருவருடன், இணைந்து, பேரண்டத்தை இணைக்கும் கதிர்வீச்சு இருப்பதைக் கணித்தவர் பீட்பிள்ஸ்.

### வேதியியலுக்கான நோபல் பரிசு



மீளவும் மின் ஏற்றக்கூடிய லிதியம் அயன் மின்கலங்களை உருவாக்கியதற்காக 96 வயதுடைய விஞ்ஞானி ஜான் பி குட் எனாவ்ப், எம்.ஸ்டேன்லி வைட்டிங்காம், அகிரா யோஷினோ ஆகியோருக்கு இந்த வருடத்துக்கான வேதியியல் துறை நோபல் பரிசைப் பெறுகிறார்கள். [illegible] மின்னேற்றம் செய்யக்கூடிய லிதியம் அயன் மின்கலங்கள் என்பவை எடை குறைந்த, இலகுவாக எடுத்துச் செல்லத்தக்க, ஆற்றல் மிக்க மின்கலங்கள் ஆகும். சிறிய வகையிலான மின்னணுச் சாதனங்களில் பயன்படுத்தப்படுகின்றன. இந்த மின்கலங்கள் ஒரு 'ரீசார்ஜபிள்' உலகத்தையே உருவாக்கியுள்ளதாகக் குறிப்பிட்டு இந்தப் பரிசு வழங்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### அமைதிக்கான நோபல் பரிசு



2019ஆம் ஆண்டுக்கான அமைதிக்கான நோபல் பரிசுக்கு எதியோப்பியா நாட்டின் தலைமை அமைச்சர் அபி அஹ்மத் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். அமைதியை நிலைநாட்டவும், பன்னாட்டு ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கும் நடவடிக்கைகளை எடுத்ததற்காக அவருக்கு நோபல் பரிசு வழங்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. 1998ஆம் ஆண்டு தொடக்கம் 2000ஆம் ஆண்டுக்கு இடைப்பட்ட காலத்தில் நடைபெற்ற எல்லைப் போரைத் தொடர்ந்து, ஏரிட்ரேயாவுடன் 20 ஆண்டுகாலமாக எதியோப்பியாவுக்கு நிலவி வந்த இராணுவ ரீதியிலான சிக்கலைக் கடந்த ஆண்டு சமாதான ஒப்பந்தத்தின் மூலம் இவர் முடிவுக்கு கொண்டுவந்தார். இதன்மூலம் குறி;த பரிசுக்குத் தெரிவான இவர் அமைதிக்கான நோபல் பரிசைப் பெறும் 100ஆவது நபர் எனும் பெருமையைப் பெறுகிறார்.

### எதியோப்பியப் பின்னணி

மிகவும் இறுக்கமான, கட்டுப்படுத்தப்பட்ட நாடாக இருந்து வந்த எதியோப்பியாவின் தலைமை அமைச்சராகக் கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் பதவியேற்றவர் அபி அஹ்மத். அந்த நாட்டில் தாராளவாத சீர்திருத்தங்களை அறிமுகப்படுத்தினார். ஆயிரக்கணக்கான செயற்பாட்டாளர்களைச் சிறையில் இருந்து விடுவித்ததுடன், நாடுகடத்தப்பட்ட அதிருப்தியாளர்களை நாடு திரும்புவதற்கு அனுமதி அளித்தார். மிகவும் முக்கியமாக, எதியோப்பியாவின் அண்டை நாடான ஏரிட்ரேயாவுடன் சமாதான ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டதன் மூலம் அந்த நாட்டுடனான இரண்டு தசாப்த கால மோதலை முடிவுக்குக் கொண்டுவந்தார். அதே சமயத்தில், இந்த சீர்திருத்த நடவடிக்கைகளின் காரணமாக எதியோப்பியாவில் ஏற்பட்ட இன ரீதியிலான பதற்றம் மற்றும் அதைத்தொடர்ந்து நடைபெற்ற வன்முறைகளின் காரணமாக சுமார் 2.5 மில்லியன் மக்கள் தங்களது வீடுகளிலிருந்து வெளியேற வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது.

# துருக்கியால் குறிவைக்கப்படும் குர்துக்கள்

சிரிய எல்லைக்குள் ஊடுருவி குர்துக்கள் மீதான தனது தாக்குதலைத் தீவிரப்படுத்தியுள்ளது துருக்கி. வான் வழியாகவும், தரை வழியாகவும் இந்தத் தாக்குதல்கள் தொடர்ந்து அங்கு மேற்கொள்ளப்படுகின்றன.

துருக்கியால் கடந்த ஒரு வாரகாலமாக மேற்கொள்ளப்படும் இந்தத் தாக்குதலில் பல நூறு குர்துக்கள் உயிரிழந்துள்ளனர். சுமார் 70 ஆயிரம் அப்பாவிகள் இடம்பெயர்ந்துள்ளனர்.

குர்துக்களுக்கு எதிரான தாக்குதல் தற்காப்பு நடவடிக்கை அறிவித்துள்ளது துருக்கி. அமெரிக்கா, ஐக்கிய நாடுகள், இந்தியா, ஈரான் என்பன இந்தத் தாக்குதலுக்குக் கடும் கண்டனத்தைத் தெரிவித்துள்ளன. எனினும் துருக்கி தொடர்ந்தும் தாக்குதலை நடத்திக்கொண்டுதான் உள்ளது.

'குர்திஷ்தானை சிதைப்பதே துருக்கியின் குறிக்கோள்...'






## ஈரானின் கப்பலை தாக்கியது சவூதி

ஈரான் நாட்டைச் சேர்ந்த பெட்ரோலிய கப்பலை ஏவுகணைகள் மூலம் தாக்கியுள்ளது சவூதி அரேபியா கடந்த சில வாரங்களுக்கு முன்னர் சவூதியின் கச்சா ஆலைகள் தாக்கப்பட்டிருந்தன. இந்தத் தாக்குதலை ஈரானே மேற்கொண்டது என்று தெரிவித்த சவூதி அதற்குப் பதிலடியாக இந்தத் தாக்குதலை நடத்தியுள்ளது.

ஈரான் அரசுக்கு சொந்தமான 'சபிட்டி' என்ற பெட்ரோலிய டேங்கர் கப்பலே இவ்வாறு தாக்கப்பட்டுள்ளது. ஜெத்தா துறைமுகத்தில் இருந்து சுமார் 100 கிலோமீற்றர் தூரத்தில் சென்றுகொண்டிருந்த கப்பலே இவ்வாறு தாக்கப்பட்டது.

'மீள்கிறது முறுகல்...'



## சவூதி ஆயுத படையில் பெண்கள்

சவூதி ஆயுதப் படையில் பெண்கள் சேர்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

சவூதி அரேபிய பட்டத்து இளவரசர் சல்மான் சவூதியில் பல்வேறு சீர்திருத்தங்களைக் கொண்டுவந்த வண்ணமுள்ளார். குறிப்பாக கடும் போக்கு இஸ்லாமிய நாடான சவூதி பெண்களுக்கான பல்வேறு உரிமைகளை மறுத்திருந்தது. அண்மைக்காலமாக சல்மான் பெண்களுக்குப் பல்வேறு சலுகைகளை அறிவித்து வருகின்றார். குறிப்பாக பெண்கள் கார் செலுத்தலாம், தமது ஆண்களின் துணையில்லாமல் வெளிநாடுகளுக்குச் செல்லலாம், கால்பந்தாட்ட மைதானத்துக்குப் பெண்கள் செல்லலாம் ஆகிய அறிவிப்புக்களை விடுத்திருந்தார். இந்த நிலையில் தற்போது பெண்கள் ஆயுதப் படையில் சேரலாம் என்ற அறிவிப்பு வெளிவந்துள்ளது.

'மாறுகின்றது சவூதி...'

ரவுண்ட் த வேள்ட்

பிரகாஸ்

## அலெக்ஸி லியோனவ் காலமானார்

54 ஆண்டுகளுக்கு முன்பாக விண்வெளியில் நடந்த முதல் மனிதர் அலெக்ஸி லியோனவ் ரஷ்யாவில் காலமானார். அவருக்கு வயது 85. சோவியத் யூனியன் என முன்னர் அழைக்கப்பட்ட ரஷ்யாவை சேர்ந்த விண்வெளி வீரர் அலெக்சி லியோனவ். விண்வெளி ஆய்வில் மிகப்பெரிய மைல்கல்லாக விதந்தோதப்பட்டவர். இவரது தைரியம் பலராலும் பாராட்டுக்குரியதானது. இவர் 1965ஆம் ஆண்டு வோஸ்கோட் 2 விண்கலத்தை விட்டு வெளியேறி 12 நிமிடங்கள் ஒன்பது வினாடிகள் விண்வெளியில் நடந்து சாதனை படைத்தார்.

'முக்கியஸ்தர்...'





அமெரிக்காவின் மிகப்பெரும் மாநிலங்களில் ஒன்றான கலிபோர்னியாவில் காட்டுத் தீ ஏற்பட்டுள்ளது. காற்று அதிகமாக வீசிவருவதால் தீயைக் கட்டுக்குள் கொண்டுவருவது சிரமமாக உள்ளது என்று கலிபோர்னியப் பேரிடர் மையம் அறிவித்துள்ளது. நூற்றுக் கணக்கான தீயணைப்பு வீரர்கள் களத்தில் இறக்கப்பட்டுள்ளனர்.

THE NOBEL PEACE PRIZE 2019



## அபிக்கு அமைதிக்கான நோபல்

எத்தியோப்பியாவின் அரச தலைவர் அபி அகமது அலிக்கு அமைதிக்கான நோபல் பரிசு அறிவிக்கப்பட்டுள்ளது. கடந்த வருடம் எத்தியோப்பியாவின் அதிபராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட அகமது அலி, எதிரி நாடாக விளங்கிய எரித்திரியாவுடன் மேற்கொண்ட அமைதி நடவடிக்கைகளை அடுத்தும், எத்தியோப்பிய மக்களின் வாழ்வாதாரத்தை வளப்படுத்த மேற்கொண்ட பணிகளுக்காகவுமே இந்த விருது அறிவிக்கப்பட்டுள்ளது என்று நோபல் குழு தெரிவித்துள்ளது.

'தகுதியானவருக்கு விருது...'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வானலையில் தமிழ் ஒலி- 22

# புலிகளின் குரல் ஆளுமைகளில் ஒருவர் மாமனிதர் நாவண்ணன்

தேவநாயகம் தேவானந்த்



புலிகளின் குரல் வானொலியில் பல கலைஞர்கள் தன்னலமின்றிப் பணியாற்றி வந்தார்கள். அவர்களின் அளப்பெரிய பங்களிப்பும் ஈடுபாடும் பல அற்புதமான நிகழ்ச்சிகள் புலிகளின் குரலில் ஒலிபரப்பாவதற்கு வாய்ப்பை ஏற்படுத்திக்கொடுத்தன. புலிகளின் குரல் வானொலியில் நீண்டகாலமாகப் பணியாற்றி வந்த கலைஞர், கவிஞர் மற்றும் பன்முக ஆளுமையுடையவர் நாவண்ணன். சூசைநாயகம் என்பது இவரது இயற்பெயர். இவர் தொண்ணூறுகளின் பிற்பகுதி யல் தொகுத்து வழங்கிய 'தமிழன் சிந்திய இரத்தம்' என்ற தொடர் நிகழ்ச்சி புலிகளின் குரல் வானொலியில் ஒலிபரப்பானது. இதைப் பற்றி இன்றும் பலர் நினைவுகூருகிறார்கள்.

**தமிழன் சிந்திய குருதி**

இது ஈழவிடுதலைப் போராட்டத்தில் தியாகம் செய்த பலரின் உண்மைக் கதைகளை அடிப்படையாகக் கொண்டது. நேரடிச் சாட்சியங்களின் ஒலி வடிவச் செவ்விகளையும் சேர்த்துத் தொகுத்து வழங்கிய நிகழ்ச்சியாகும். கிழக்கு மாகாணத்தில் நடைபெற்ற பல துயர்மிகு சம்பவங்களை அதில் நேரடியாகத் சம்பந்தப்பட்டவர்களின் நேரடிக் குரல் பதிவுகள் மூலம் ஆவணப்படுத்தினார். இது ஒரு கள ஆய்வாக மேற்கொள்ளப்பட்ட மிக அற்புதமான ஆவணமாக விளங்கியது.

மட்டக்களப்பில் குடும்பத்தோடு சேர்த்து வீடு கொழுத்தப்பட்ட போது சிறுவயதில் தப்பிய ஒருவர் தனது குடும்பம் முழுவதுமே அதில் கொல்லப்பட்டதாக நினைத்திருந்தவர், மணலாற்றுச் சண்டையில் தனது சகோதரியைப் போராளியாகச் சந்தித்த சம்பவங்கள் போன்ற உணர்ச்சிமிகு சம்பவங்களை ஆவணப்படுத்தியிருந்தார். அதேபோல் எல்லைப்புறத் தமிழர்கள்மேல் நடத்தப்பட்ட வன்முறைகளும் தமது சொந்த நிலங்களைப் பறிகொடுத்து அவர்கள் வெளியேறியதும் பலர் வெளியேறாமல் இருந்து மாண்டது போன்ற பல விடயங்களையும் அவர்களின் பாடுகளையும் 'தமிழர் சிந்திய இரத்தம்' நிகழ்ச்சியூடாக வெளிக் கொண்டு வந்தார்.



**புலிகளின் தலைவரால் பாராட்டு**

ஆயுதப்போராட்டம் வீரியமடைவதற்கு முந்திய காலத்தில் நிகழ்ந்த படுகொலைகளையும் ஆவணப்படுத்தியிருந்தார் நாவண்ணன். வடக்குக் கிழக்கில் நடைபெற்ற படுகொலைகள், சித்திரவதைகளை நேரடி விவரணச் சித்திரமாகக் (இதனைப் பெட்டக நிகழ்ச்சியென்றும் குறிப்பிட முடியும்) கொண்டு வந்தார். ஒலி வடிவ ஆவணமாகவும் இதனைக் குறிப்பிடலாம். சித்திரவதைகளையும் படுகொலைகளையும் மேலும் பல வரலாற்று நிகழ்வு களையும் ஒலி வடிவில் ஆவணப்படுத்துவதற்காகத் தனது வாழ்நாளில் அதிக நேரத்தைச் செலவிட்டவர் நாவண்ணன். . ஈழத்தின் மூத்த கவிஞராகப் போற்றப்பட்ட நாவண்ணன், விடுதலைப்புலிகளின் தலைவரால் பல தடவைகள் பாரட்டப்பட்டவர். 1998ஆம் ஆண்டு புலிகளின் குரலில் சிறப்பாகச் செயற்பட்டதற்காகத் தேசியத் தலைவர் பிரபாகரனால் தங்கப் பதக்கம் வழங்கி மதிப்புறுத்தப்பட்டார். நாவண்ணனின் சாவுக்குப் (2006) பின்னர் இவருக்கு 'மாமனிதர்' விருது வழங்கி விடுதலைப்புலிகள் மதிப்புறுத்தினர்!

**நாவண்ணன் வழங்கிய நிகழ்ச்சிகள்**

கவிஞர் நாவண்ணன். புலிகளின் குரலில் பல நிகழ்ச்சிகளை வழங்கியிருந்தார். 'தமிழன் சிந்திய இரத்தம்', 'கரும்புலிக் காவியம்', 'இனிமைத் தமிழ் எமது', 'ஈரமுது' போன்ற சிறப்பு நிகழ்ச்சிகள் அவரது ஆளுமைக்குச் சிறந்த சான்றாக அமைந்திருந்தன. போர் நடைபெறும் போதும் தாக்குதல்கள், வீரச் சாவுகள் என்று பல நிகழ்வகளுக்காகச் சிறப்பு நிகழ்ச்சிகளை உடனுக்குடன் தயாரித்து ஒலிபரப்பும் வழக்கத்தைக் கொண்டிருந்தார்கள் விடுதலைப்புலிகள். அவ்வாறான சூழலில் நாவண்ணன் உடன் பாடல்களை எழுதிக் கொடுப்பார்.

அதைப் புலிகளின் குரல் இசைக் கலைஞர்கள் இசையமைத்து உடனுக்குடன் சிற்ப்பு நிகழ்ச்சிகளில் ஒலிபரப்பினார்கள். நினைத்த மாத்திரத்திலேயே கவி புனையும் இவரது தன்னெழுச்சி ஆற்றல் காரணமாகப் பல பாடல்கள் பிறந்தி ருக்கின்றன. வவுனிக் குளத் தேவாலயப் படுகொலையை நினைந்து உடனடியாகவே அவர் இயற்றிய, 'கன்னங்கள் தாங்கிய காலங்கள் போதும். எம் சன்னங்கள் வென்றிட உம்தயை தாரும்.' பாடல் இதற்கு நல்லதொரு சான்றாகும். இது திருமலைச் சந்திரன் குரலில் பலரையும் உருக்கியது.

நாவண்ணன் தனது பேனாமுனையால் போராட்டத்திற்கு வலுச்சேர்க்கும் கருத்துக்களைக் கவிதை வடிவிலும் பாடல் வடிவிலும் கொடுத்திருந்தார்.

அற்புதமான கலைஞனாகத் தன்னை ஈழவிடுதலைப் போராட்டத்தில் நிலை நிறுத்திச் சென்றுள்ளார்.

இவரது படைப்பக்களின் வெற்றிக்குக் காரணம் ஊர் ஊராகத் திரிந்து, இரவு பகலாக அலைந்து, குடிசைகளிலும் கடற்கரைகளிலும் படுத்துறங்கி மக்களின் வாழ்வை, உணர்வுகளைப் பதிவு செய்தமையே ஆகும்.

(தொடரும்)



கவிஞர் நாவண்ணன்

ஆயுதப்போராட்டம் வீரியமடைவதற்கு முந்திய காலப் படுகொலைகளையும் ஆவணப்படுத்தியிருந்தார் நாவண்ணன். வடக்குக் கிழக்கில் நடைபெற்ற படுகொலைகள், சித்திரவதைகளை நேரடி விபரணச் சித்திரமாகக் (இதனைப் பெட்டக நிகழ்ச்சியென்றும் குறிப்பிட முடியும்) கொண்டு வந்தார். ஒலி வடிவ ஆவணமாகவும் இதனைக் குறிப்பிடலாம். சித்திரவதைகளையும் படு[illegible] நிகழ்வுகளையும் ஒலி வடிவில் ஆவணப்படுத்துவதற்காகத் தனது வாழ்நாளில் [illegible] நாவண்ணன்..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவைப் பகிரத் தெரிந்தவர் வெற்றிகரமான ஆசிரியர்



ஜனனீ சிவஞானசுந்தரம்

ஒவ்வோர் ஆண்டும் ஒக்ரோபர் மாதம் 6ஆம் திகதி ஆசிரியர் தினத்தைக் கொண்டாடுகிறோம். இது மிகுந்த உற்சாகமும், மகிழ்ச்சியும் நிறைந்த நாள். இந்த அருமையான சந்தர்ப்பத்தில் எமக்கான கல்வியின் அடி அத்திபாரமாக இருக்கின்ற ஆசிரியர்களைப் பற்றியும் ஆசிரியத்துவத்தைப் பற்றியும் பேசுவது பொருத்தமாக இருக்கும். உலகின் ஒளியாகவும் இருட்டில் கலங்கரை விளக்காகவும் மற்றும் உயிர்வாழ்வதற்கு எமக்கு வலிமை அளிக்கும் நம்பிக்கையாகவும் ஆசிரியர்கள் விளங்குகிறார்கள். பல ஆயிரம் மாணவர்களின் எதிர்காலம் பிரகாசமாக இருப்பதை உறுதி செய்வதற்குத் தினமும் வேலை செய்யும் ஆத்மாக்கள் இவர்கள். மாணவர்களை வழிப்படுத்தி நாட்டு வளர்ச்சி மீதும், நாட்டின் நல்வாழ்வு மீதும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்துகின்ற ஆசிரியர்கள் உன்னதமானவர்கள். கற்பித்தல் ஓர் உன்னதமான தொழில் என்பதை நாங்கள் ஏற்றுக் கொள்ளவேண்டும்.

**ஆசிரியர்கள் சமூகத்தின் முதுகெலும்பு**

ஆசிரியர்கள் எமது சமூகத்தின் முதுகெலும்பாக இருக்கிறார்கள். ஏனென்றால் அவர்கள் நாட்டின் எதிர்காலத்தை வடிவமைப்பதில் முக்கிய பங்களிக்கின்றனர். அதாவது மாணவர்கள் இந்த நாட்டின் சிறந்த குடிமக்களாக மாறுவதற்கு ஆசிரியர்களே வழிகாட்டுகிறார்கள்.



ஆசிரியர் பணியானது பொறுப்பு மற்றும் சவால்களால் நிறைந்துள்ளது. ஏனெனில் அனைத்து மாணவர்களும் ஒரே மாதிரியாக இல்லை. இதனால் ஆசிரியர் தன்னிடம் உள்ள ஒவ்வொரு மாணவரையும் நுணுகி அவதானித்து அவர்களுக்கு ஏற்ற வெவ்வேறு கற்பித்தல் முறைகளைப் பின்பற்ற வேண்டும். இந்தக் கடினமான பணியை அற்புதமாக ஆசிரியர்கள் செய்கிறார்கள். கற்பித்தல் என்பது ஒரு சமூக நடைமுறை. அதே வேளை அறிவை வளர்த்தல் என்பதை அடிப்படையாகக் கொண்டுள்ளது. இதற்காக ஒவ்வோர் ஆசிரியரும் சில அடிப்படைப் பண்புகளைக் கொண்டிருப்பார்கள்.

**பெற்றோரைவிடப் பெரியவர்கள்**

பெற்றோரை விட ஆசிரியர்கள் பெரியவர்கள் என்று ஒரு பொன்மொழி உண்டு. பெற்றோர்கள் ஒரு குழந்தையைப் பெற்றெடுக்கிறார்கள், அதே நேரத்தில் ஆசிரியர்கள் அந்த குழந்தையின் ஆளுமையை வடிவமைத்துப் பிரகாசமான எதிர்காலத்தை வழங்குகிறார்கள். அதனால் அவர்கள் உன்னதமானவர்கள். இந்த உன்னத நிலையை அடைவதற்காக ஆசிரியர்கள் கடுமையாக உழைக்கவேண்டும். ஒவ்வோர் ஆசிரியரும் மாணவர்களிடமும் பெற்றோர்களிடமும் சமூகத்திடமும் நல்லவராக இருக்க விரும்புகிறார்கள். ஆனால் ஒரு நல்ல ஆசிரியரை உருவாக்கும் குணங்கள் என்ன? திறன்கள், திறமைகள் மற்றும் பண்புகள் யாவை என்பது பற்றி நாங்கள் சதா சிந்தித்தாக வேண்டும். அது எமக்கான கல்வியின் மிக அடிப்படையான முதலீடு ஆகும். அது இல்லையெனில் நாம் வெற்றி பெறமுடியாது.

**ஆசிரியர் பணியானது பொறுப்பு மற்றும் சவால்களால் நிறைந்துள்ளது. ஏனெனில் அனைத்து மாணவர்களும் ஒரே மாதிரியாக இல்லை. இதனால் ஆசிரியர் தன்னிடம் உள்ள ஒவ்வொரு மாணவரையும் நுணுகி அவதானித்து அவர்களுக்கு ஏற்ற வெவ்வேறு கற்பித்தல் முறைகளைப் பின்பற்றவேண்டும்.**

**இரசிகர் பட்டாளத்தையுடைய ஆசான்!**

ஓர் ஆசிரியரை எந்தக் குணாதிசயங்கள் திறம்பட ஆக்குகின்றன? வகுப்பறையில் ஆசிரியர் எவ்வாறு வெற்றிபெற முடியும்? ஆகிய கேள்விகளைப் பற்றிச் சிந்திப்பதற்கு நிறைய நேரம் செலவிடப்படவேண்டும். ஒவ்வொரு சிறந்த ஆசிரியரும் தனக்கான தனித்துவமான அடையாளத்தைக் கொண்டிருப்பார். தனித்துவமான பாணியையும் கொண்டிருப்பார். எந்தவோர் ஆசிரியர் சில சிறப்பான குணாதிசயங்களைக் கொண்டிருக்கிறாரோ அவர் பெரியளவில் இரசிகர் பட்டாளத்தைக் கொண்டிருக்கின்ற ஒரு நல்ல ஆசிரியராக இருப்பார்.

இதற்கான சில அடிப்படை விடயங்களாக, நிபுணத்துவமுடைய தொடர்பாடல் திறன், சிறந்த கேட்கும் திறன், ஆழ்ந்த அறிவு, விடயம் மீதான ஆர்வம், மாணவர்களுடன் அக்கறையுள்ள உறவுகளை உருவாக்கும் திறன், நட்பு, அணுகக்கூடிய தன்மை, சிறந்த ஒழுங்கமைப்பு, நிறுவனத் திறன்கள், வலுவான பணி நெறிமுறை மற்றும் சமூகத்தை உருவாக்கும் திறன்கள் போன்றவற்றைக் குறிப்பிடமுடியும். இவற்றைக் கொண்டிருக்கின்ற ஆசிரியர் ஒருவர் தன் பின்னால் இரசிகர் பட்டாளத்தை நிச்சயம் கொண்டிருப்பார்.

**அற்புதமான குணங்களுடன் வாழ்பவர்கள்**

சிறந்த ஆசிரியர்கள் பல அற்புதமான குணங்களையும் கொண்டிருப்பதால் காலத்துள் வாழ்கிறார்கள். உலகளவில் கொண்டாடப்படுகிறார்கள். உதாரணமாக நகைச்சுவை உணர்வு, தனிமனித ஆளுமை, நெகிழ்வுத்தன்மை, தயவு தாட்சணியம் காட்டும் பண்பு, தலைமை தாங்கும் துணிவு, வகுப்பறையை மேலாண்மை செய்யும் அழகு, அமைதியான நடத்தை, பல்பணி திறன் போன்றவை ஆசிரியரை உலகளவில் வாழவைக்கும். ஆசிரியருக்கு மிக முக்கியமானதாக இருக்கவேண்டியது தனது பாடத்தில் போதியளவு அறிவைக் கொண்டிருப்பது என்றுதான் நாங்கள் நினைக்கிறோம். அது இல்லையென்றால் ஆசிரியப்பணி இல்லையென்று நினைக்கிறோம். ஆனால் அதற்கு மேலாகத் தனக்குத் தெரிந்த அறிவைப் பகிர்கின்ற திறன் உள்ளவரே சிறந்த ஆசிரியராவார். ஆசிரியர் எவ்வளவு அறிந்தவராக இருந்தாலும், தனக்குத் தெரிந்ததை மற்றவர்கள் புரிந்துகொள்ளக்கூடியதாக வெளிப்படுத்துவதற்குத் தெரியாதவராக இருந்தால் அவர் எவ்வாறு வெற்றிபெற முடியும்? கேட்பவரை ஈடுபாட்டுடன் கேட்கத் தூண்டும் விதத்தில் தெரிவிக்க முடியாத ஆசிரியரின் அறிவு பயனற்றதாகவே இருக்கும்.

ஆசிரியரின் தொடர்பாடல் திறன், அதாவது வாய்மொழி ஆற்றல், அவரிடமுள்ள சொற்களஞ்சியம் அதன் வழி உருவாக்கும் காட்சி, இதில் பேசுதல், எழுதுதல், படங்கள், உடல் மொழி மற்றும் புரிந்து கொள்ளக்கூடிய கட்டமைப்புகளான யோசனைகளை ஒழுங்கமைத்தல் ஆகியவற்றைக் கொண்டிருந்தால் சிறந்த திறமை மற்றும் முடிவுகளுடன் அறிவை வெளிப்படுத்த முடியும். அதேவேளை கற்பிக்கும் போது உற்சாகத்தைக் காட்டும் ஆசிரியர்கள் நேர்மறையான கற்றல் சூழலை உருவாக்குகிறார்கள். இது விரைவாகவும் மகிழ்ச்சியாகவும் அறிவைப் பெறுவதற்கு மாணவர்களுக்கு உதவுகிறது. ஆசிரியர்கள் தினமும் ஒரே மாதிரியான கற்பித்தல் முறையைப் பின்பற்ற முடியாது. ஓர் ஆசிரியர் மாணவர்களை ஈடுபாட்டுடனும் ஆர்வத்துடனும் வைத்திருப்பதற்கு நாளாந்த கற்பித்தல் முறைகளைக் கண்டுபிடிக்க வேண்டும். மாணவர்களைக் கவர்வதற்கான வழிகளைப் புதிது புதிதாகக் கண்டுபிடித்தல் வேண்டும். தனது தொடர்பாடல் ஆற்றலைப் பன்முகத் தன்மையுடன் விருத்தியாக்குவதனூடாகவே இதைச் சாத்தியப்படுத்த முடியும்.

(தொடரும்)

கட்டுரையாளர்: மூத்த விரிவுரையாளர்
யாழ்.பல்கலைக்கழகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாரிடம் சொல்ல...!

மிருசுவில் தமிழ்தாசன்

நேரம் மாலை ஐந்து மணியைத் தாண்டிவிட்டது. பொழுது விடிந்தகையுடன் காலை ஐந்து மணிக்கே அனுராதபுர பஸ்ஸில் ஏறிப்போனால் தான் பதினொருமணிக்கு நடக்க விருக்கும் நேர்முகப்பரீட்சையில் தோற்றலாம். காலையில் வந்திருந்த கடிதத்தை அம்மா இப்போது தான் கொடுத்தாள். என்ன செய்ய! கையில் கொஞ்சக் காசும் இல்லை. வாயைக்கட்டி வயிற்றைக் கட்டிச் சாப்பிட்டுக் கடைகளைத் திரும்பியே பார்க்காது பஸ் காசுடன் அனுராதபுரம் போய் வருவதென்றாலும் ஆகக் குறைந்தது ஆயிரம் ரூபாயாவது வேண்டுமாம். விவரம் தெரிந்த சிவராசாதான் சொன்னான்.

"கடவுளே! அம்மாளாச்சித்தாயே! இப்ப ஆரிட்டைப் பல்லுக்காட்டுறது! சரி பல்லுக்காட்டினாப்போலை ஆரும் தரப்போறினையோ! காசைப் பாத்திட்டுத் திரும்பித் தாறனெண்டாலும் அம்மாவானை ஒரு குருவியும் தராது. ஊரிலை அப்பிடியொரு செல்வாக்கு எனக்கு. பின்னை முப்பது வயதாகியும் வேலை வெட்டியொண்டுமில்லாமல் ஊர் சுத்தித் திரியுற எனக்கு எந்த இளிச்ச வாயன்தரப்போறான்! உவன் காத்தாற்றைக் கடைக்குட்டி கனகசிங்கத்திட்டை சக்குப்பிடிச்ச காசு கிடக்குது. பட்டை கட்டி பரராசசிங்கத்திட்டையும் கும்பிக் காசு கிடக்குது. அவங்களிட்டைக் கழட்டவே ஏலாது. இப்ப ஆரிட்டைப் போறது" மண்டையைப் போட்டு உடைத்துக் கொண்டிருந்தேன்.

★★★★★

நாளை காலையில் அனுராதபுரத்துக்குப் புறப்பட்டேயாகவேண்டும். பதினொரு மணிக்குச் சிறைச்சாலை அலுவலகத்தில் எனக்கு நேர்முகப்பரீட்சை. சாவுத் தண்டனைக் கைதிகளைத் தூக்கில் போடும் அலுக்கோஸ் பதவிக்கானது. மாதாந்தம் ஐம்பதினாயிரம் சம்பளம் கிடைக்குமாம். இதையும் சிவராசாதான் சொன்னான். முன்பு ஒரு தடவை தண்டவாளக் கடவை திறக்கும் வேலைக்கான நேர்முகப் பரீட்சைக்குப் போய்ப் படுதோல்வி. பின்பும் சுடலைக் காவலாளி வேலைக்கான பரீட்சைக்குப் போய் அதுவும் தோல்விதான். இந்தியத் தலைமை அமைச்சர் ஆரெண்டு கேட்டாங்கள். இந்திரா காந்தி எண்டன். அடிக்காத குறையாக விரட்டி விட்டிட்டாங்கள். இந்த அலுக்கோஸ் வேலையெண்டாலும் கிடைச்சிட்டுதெண்டால்....!

இந்த வேலை கட்டாயம் கிடைக்குமெண்டு எனக்கு ஒரு நம்பிக்கை. என்ரை தோற்றத்தையும் உடம்புக்கட்டமைப்பும் பாத்திட்டு எனக்கு வேலை தருவாங்கள். கைதியின்ரை கழுத்தைப் பிடிச்சுச் சுருக்குப்போட்ட கயித்துக்கை அமத்திப்பிடிச்சுக்கொழுவி அவங்களைத் திமிறாமல் கொள்ளாமல் கெட்டித்தனமாய் சாக்கொண்டுபோடவேணும். எங்கடை சிவப்பியின்ரை மோன் சற்குணத்தான் எனக்கு இதுபற்றி விவரமாகச் சொன்னான். அருணாசலம் மாமாவின்ரை சுதாகரனைப்போல நோஞ்சானுகளாலை இதுவெல்லாம் ஏலாது. என்னாலை ஏலும் எண்டும் சொன்னான். எனக்கு உசுப்பேத்தி விட்டிட்டானோ எண்டும் எனக்குள்ள சாதுவா ஒரு சந்தேகமிருக்குது.

★★★★★

எப்பிடியாவது எனக்கு இந்த வேலை கிடைக்கும் போலதான் கிடக்குது. சேட்டிக்கேற் ஏதேன் கேட்டாங்களெண்டால் குடும்பக் காட்டைக் குடுப்பம். அதெல்லாம் சரிதான். இப்ப நேர்முகப் பரீட்சைக்குப் போறதுக்குச் செலவுக்கு ஆயிரம் ரூபாவுக்கு எந்தக் குஞ்சியப்பனிட்டைப் போறது? எட! உவர் கந்தராசா வாத்தியாரை ஒருக்கால கேட்டுப் பாப்பமோ! மனிசன் நல்ல சீவன். விசயத்தைச் சொன்னால் வாய்ச்சாலும் வாய்ச்சுப்போம்.

வாத்தியார் வீட்டுப்படலையைத் திறந்தேன். அவரை முந்திக் கொண்டு அவரது வீட்டு நாய்க் கடுவன் வந்தது. அதுவும் அவரைப் போல் நல்லது. கடிக்காது. வாத்தியாரிடம் விசயத்தைச் சொன்னேன். வீட்டுக்குள்ளே சென்றவர் புன்சிரிப்புடன் புத்தம் புதிய ஆயிரம் ரூபா நோட்டொன்றைக் கொண்டு வந்து எனது கையில் திணித்தார். மெல்லச் சட்டைப் பொக்கெற்றில் அதை வைத்துக்கொண்டு நன்றியுடன் வீடு திரும்பினேன். இந்தச் சந்தோசமான விடயத்தை நண்பர்கள் பாலன், இரத்தினராசா மற்றும் நாகேந்திரனுக்கும் கூறிப் பெருமைப்படவேண்டும். சட்டையைக் கழற்றிக் கொடியில் போட்டுவிட்டு ஒரு சாதாரண அழுக்குச் சட்டையுடன் தேவராசாவின்ரை கடையடிக்குப் போகலாம். போனால் கையோடு ஒரு 'தம்மும்' அடித்து விட்டு வரலாம்.

"டேய் யோகன்! நீ கடுமையாய்ப் புழுகாதை. உனக்கிந்த வேலை கிடைக்காது எண்டு சொல்லுறன். பந்தயம் பிடிக்கிறியே! நான் சாத்திரம் சொல்லுறன்"

படுபாவிப்பயல் பாலன் இப்படிக்கூறி என்னைக் குழப்பினான். கடுங்கோபம் வந்தது. கூடவே பயமும் வந்தது. பொதுவாகப் பாலன் ஏதாவது சொல்லிவிட்டால் அது அதன்படியே நடப்பதுமுண்டு. அவனுடைய நாக்கில் கறுப்பு மச்சமிருப்பதினாலே என்னவோ!

சற்று மனக்குழப்பத்துடன் சென்ற வழியாலே வீடு திரும்பிக் கொண்டிருந்த எனக்கு மாபெரும் இன்ப அதிர்ச்சியொன்று காத்திருந்தது. ஆட்டுப்பட்டி அருளம்பலத்தாரின்ரை வீட்டுப் படலைக் கருகில் ஆயிரம் ரூபா தாளொன்று அனாதரவாகக் கிடந்தது. எனக்கு மகிழ்ச்சியோ மகிழ்ச்சி.



சற்று மனக்குழப்பத்துடன் சென்ற வழியாலே வீடு திரும்பிக் கொண்டிருந்த எனக்கு மாபெரும் இன்ப அதிர்ச்சியொன்று காத்திருந்தது. ஆட்டுப்பட்டி அருளம்பலத்தாரின்ரை வீட்டுப் படலைக்கருகில் ஆயிரம் ரூபா தாளொன்று அனாதரவாகக் கிடந்தது.

"கடவுளே ஆர்போட்ட காசோ! ஆரேன் என்னைப் போலை கஸ்ரப்பட்டதுகள் போட்டிருந்தால் பாவம் தான். அதுக்கு நான் என்ன செய்யுறது! கடவுளே உந்தக்காசு சொட்டு முன்னம் அம்பிட்டிருந்தால் வாத்தியாரிட்டை அந்த ஆயிரத்தையும் வாங்காமல் விட்டிருக்கலாம். வீண் கடமையாய்ப் போச்சு. சரி பிரச்சினையில்லை. இப்ப இந்த ஆயிரத்தையும் கொண்டு போய் மரியாதையாய் அவரிட்டைக் குடுப்பம். என்னட்டைக் கிடக்கிற ஆயிரம் அனுராதபுரம் போகக் காணும்தானே? இதை ஏன் வைச்சிருப்பான்! கொண்டு போய்க்குடுத்திட்டு வந்திடவேணும்.

விசயத்தைச் சொல்லி வாங்கினது போல் இப்போது எதையும் சொல்லவில்லை. ஒருமெல்லிய திமிர்த்தனத்துடன் காசைக் கொடுத்து வீடு வந்து சேர்ந்தான்.

★★★★★

மறுநாள் விடிந்தது.

அதிகாலை ஐந்து மணி.

அனுராதபுரத்துக்குப் புறப்படுவதற்குப் பரபரப்புடன் ஆயத்தமானேன். ஐயோ கடவுளே சேட்டுப் பொக்கெற்றில் நேற்று வைத்த அந்த ஆயிரத்தைக் காணவில்லை. யார் எடுத்தது! என்ன நடந்திருக்கும்! சிந்தனை சிதறியது. பல மணி நேரங்களுக்குப் பிறகுதான் இப்படி நடந்திருக்கலாம் என்ற பொறி தட்டியது.

"எடக்கோதாரி! அப்ப நான் வாத்தியாரிட்டை வாங்கிக்கொண்டு வந்த ஆயிரத்தைத்தான் நான் றோட்டிலை போட்டிருக்கிறன். பிறகு நானே அதை எடுத்துமிருக்கிறன் போலை! போலையென்ன போலை! அதுதான் உண்மை. ஐயைய்யோ! இதுவும் ஒரு சோதனையோ! றோட்டிலை கிடந்த காசை அவசரப்பட்டுக் குடுத்திட்டனே. விடியக்காலமை அஞ்சு மணிக்குப் பஸ்செடுத்தால்தான் நேரத்துக்கு இன்ரவியூவுக்குப் போகலாமாம். இப்பவே ஆறுமணியாய்ப் போச்சுது. இனி ஆரிட்டை காசு வாங்கிறது! அனுராதபுரத்தக்கு எப்பிடிப்போறது? அவன் பாலன்ரை வாயும் ஒருவாய் தான். இனி ஒன்றும் செய்யேலாது. இந்த வேலையும் இல்லை. தொடர்ந்து நான் வெட்டிதான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்கிழக்கு திசையில் இருந்து....



அனார்கலி




## வாணி விழா

இந்துக்கள் வருடாந்தம் கொண்டாடிவரும் நவ ராத்திரி விழாவின் இறுதிநாள் வாணி விழா தென்கிழக்கின் பல பிரதேசங்களிலும் சிறப்பாக இடம்பெற்றன.

குறிப்பாகப் பாடசாலைகள், அரச அலுவலகங் கள், வங்கிகள் உட்பட்ட பல தமிழ், முஸ்லிம் பிரதேசங்களிலும் இந்துக்களால் வாணி விழாக் கள் ஏற்பாடு செய்யப்பட்டு நடைபெற்றன.

அரச அலுவலகங்கள், வங்கிகளில் இடம்பெற்ற வாணிவிழா நிகழ்வுகளில் தமிழ் உத்தியோகத் தர்களுடன் முஸ்லிம் அலுவலர்கள், ஊழி யர்களும் இணைந்து பங்கு கொண்டிருந்தமை சிறப்பு அம்சமாகும்.

**பட்டி தொட்டியெல்லாம்
கலகலத்த விழா இது.**




## சுவரொட்டிப் போர்

அரச தலைவர் தேர்தலுக்கான பரப் புரை நடவடிக்கைகள் முடுக்கி விடப் பட்டுள்ள நிலையில் தென்கிழக்கின் தமிழ், முஸ்லிம் பிரதேசங்களில் தேர்தல் சுவரொட்டிப் போரும் ஆரம் பமாகியுள்ளது.

குறிப்பாக முக்கிய வேட்பாளர்களா கத் திகழும் சஜித் பிரேமதாச, கோத் தபாய ராஜபக்ச, அனுர குமார திசா நாயக்கா ஆகியோருக்கு ஆதரவு திரட்டும்வகையிலான சுவரொட்டிகள் பரவலாகக் காணப்படுகின்றன.

சில இடங்களில் பொலிஸார் இந்தச் சுவரொட்டிகளை அகற்றுகின்றபோ திலும் மறுகணம் மீண்டும் அவ்வி டங்களில் சுவரொட்டிகள் காணப்படு கின்றன.

**பரப்புரைப் போருடன்
சுவரொட்டிப் போரும்
தொடர்கின்றது.**

## மீண்டும் அரசியல்

கிழக்கிலங்கையின் மூத்த அரசியல்வாதிகளுள் ஒருவரான கல்முனை யைச் சேர்ந்த முன்னாள் பிரதி அமைச்சர் மயோன் முஸ்தபா நீண்ட இடைவெளிக்குப் பின்னர் மீண்டும் அரசியல் களத்தில் பிரவேசித் தார். 1999ஆம் ஆண்டிலிருந்து இதுவரை ஐக்கிய தேசியக் கட்சியின் பக்கமிருந்ததுடன் நீண்டகாலம் வெளிநாடொன்றில் தங்கிருந்த மயோன் நடைபெறவிருக்கும் அதிபர் தேர்தலுடன் அரசியல் பாதையை மாற்றியுள்ளார். கல்முனையில் கடந்த வாரம் ஊடக சந்திப்பொன்றை நடத்திய அவர் "கோத்தபாயவின் வெற்றியில் முஸ்லிம் சமூகமும் பங் காளர்களாக வேண்டும் என அறைகூவல் விடுத்தார்.

**காலம் செய்த கோலமடி!**

## அப்படிச் சொல்லவில்லை



"சாய்ந்த மருதுக்கு உள்ளூராட்சி சபை ஒன்று வழங்கப்படுமானால் கல்முனையில் குருதிக் களரி ஏற்படும்" என முஸ்லிம் காங்கிரஸின் அதி உயர் பீடக் கூடத்தில் நான் கூறவில்லையென முன்னாள் இராஜாங்க அமைச்சரும் முஸ்லிம் காங்கிரஸின் பிரதித் தலைவருமான எச்.எம்.எம். ஹரீஸ் உறுதிபடத் தெரிவித்தார்.

சாய்ந்தமருது பரடைஸ் வரவேற்பு மண்டபத்தில் அவர் ஏற்பாடு செய்த செய்தியாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்தார் ஹரீஸ்.

கல்முனை தமிழ்ப் பிரதேச செயலகத் தரமுயர்த்தல் விடயத்தில் முஸ்லிம்களைப் புறக்கணித்துத் தன்னிச்சையான முடிவு அரசால் எடுக்கப்படுமானால் கல்முனையில் இனமோதல் வெடித்து அங்கு குருதிக் களரி ஏற்படுமென்றே கூறினேன் எனவும் தெரிவித்தார்.

இதனை சாய்ந்தமருதிலுள்ள மாநகர சபை உறுப்பினர்கள் சிலர் திரிவுபடுத்தி பரப்புரை செய்வதாகவும் அவர் கவலை தெரிவித்தார்.

**சிவப்பு சமிக்ஞை தெரிகிறது.**

## முஸ்லிம்களுக்கு உச்ச நன்மை

தேசிய மக்கள் சக்தியின் அரச தலைவர் வேட் பாளர் அனுரகுமார திசாநாயக்காவை ஆதரிப் பதே இலங்கையில் பரந்து வாழும் முஸ்லிம்க ளுக்கு உச்ச நன்மையைத் தருவதாக அமையு மெனக் கிழக்கு தேச விடுதலை முன்னணியின் தலைவர் வஃபாபாறூக் கருத்து வெளியிட் டுள்ளார்.

சாய்ந்தமருதில் அவர் நடத்திய சமகால அரசி யல் நிலைமை தொடர்பான ஊடகவியலாளர் சந்திப்பில் இதை வலியுறுத்தினார்.

அஞ்சி ஒடுங்கியிருக்கும் முஸ்லிம்க ளுக்கு பாதுகாப்பையும் சுதந்தி ரத்தையும் வழங்கச் சாத்தியமான வேட்பாளர் அனுர எனவும் தலை வர் வஃபா பாறூக் தெரிவித்தார்.

**பறவைகள் பலவிதம்
ஒவ்வொன்றும் ஒருவிதம்**





## உணர்வலைகள்

எதிர்வரும் அரச தலைவர் தேர்தலில் முன்னாள் இராஜாங்க அமைச்சர் எச்.எம்.எம்.ஹரீஸ் எந்தக் கட்சியை ஆதரிக்கிறாரோ அந்தக் கட்சியை நாம் எதிர்ப்போமெனச் சாய்ந்தமருது பிரதேசத்திலிருந்து உணர்வலைகள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

சாய்ந்தமருது மாளிகைக்காடு உள்ளூராட்சி மன்ற இலக்கை நோக்கிய மக்கள் பணிமனை கடந்த வாரம் ஏற்பாடு செய்த ஊடக சந்திப்பொன்றில் மேற் படி உணர்வலை வெளிப்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

**உக்கிரமடையும் முறுகல் நிலை.**

## மாகாணப் பணிப்பாளர் நியமனம்



கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளராகக் கடந்த ஐந்தரை வருடங்களாகச் சிறப்புறப் பணியாற்றி வந்த மருத்துவர் ஏ.எல். அலாவுதீன் பதவி உயர்வுடன் கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளராக நியமனம் பெற்றுள்ளார். கடந்த வியாழன்று திருமலையில் தமது கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் பத வியை உத்தியோகபூர்வமாக ஏற்றுக் கடமைப் பொறுப்பேற் றுக் கொண்ட இவருக்குக் கல்முனைப் பிராந்தியத்திலுள்ள பல மருத்துவமனை களில் சேவை நலன் பாராட்டு விழாக்கள் நடத்தப்பட்டன.

கல்முனைப் பிராந்தியத்தில் 44 சுகாதார சேவை வழங்கும் நிறுவனங்கள். பணிப்பாளர் மருத்துவர் அலாவுதீன் தலைமையிலான நிர்வாகத்துக்கு உட் பட்டிருந்தமை குறிப்பி டத்தக்கது.

**துணிந்து நில் தொடர்ந்து செல்!**

## கல்விச் சாதனை

கல்முனை கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளிலிருந்து இந்த முறை தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 432 மாணவ மாணவியர்கள் சித்தி பெற்றுள்ளனர்.

இதன்படி வலயத்தைச் சேர்ந்த கல்முனை தமிழ், கல்முனை முஸ்லிம், சாய்ந்த மருது, காரைதீவு, நிந்தவூர் ஆகிய கோட்டப் பிரிவுகளிலிருந்து முறையே 137, 110, 67, 58, 60 மாணவ, மாணவியர்கள் சித்திபெற்றுள்ளனர்.

கடந்த வருடம் இடம்பெற்ற தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் இந்த வலயத்திலி ருந்து 316 பேர் சித்தி பெற்றிருந்ததாகவும் இந்த முறை இந்தத் தொகை அதிகரித் துள்ளதாகவும் வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ். அப்துல் ஜலீல் தெரிவித்தார்.

**கல்விச் சாதனைதான்!**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கதை**

உணவுப் பாதுகாப்புத் துறையில் உதவி ஆணையாளராகப் பணிபுரிகிறார் சித்தார்த். தேநீர், தண்ணீர், சாம்பார் சாதம், பாண் என்று எதில் எங்கு கலப்படம் நடந்தாலும் களத்தில் இறங்கிச் சம்பந்தப்பட்ட கடைக்கு, நிறுவனத்துக்குச் 'சீல்' வைக்கிறார். இதனால் தேநீர்க்கடை வியாபாரிகள் சங்கத் தலைவரில் இருந்து மத்திய சுகாதாரத் துறை அமைச்சர் வரைக்கும் பல எதிரிகளைச் சம்பாதிக்கிறார். இதனிடையே ஆசிரியையாகப் பணிபுரியும் கேத்ரீன் தெரஸாவைக் காதலிக்கிறார். காதலியைத் தாண்டி வேலையை அதிகம் நேசிக்கும் சித்தார்த்தின் உயிருக்கு எதிரிகளால் ஆபத்து வருகிறது. இந்த சூழலில் சித்தார்த் என்ன செய்கிறார், எதிரிகள் என்ன ஆகிறார்கள், காதலியைக் கரம் பிடித்தாரா, அவரின் கனவு நிறைவேறியதா? போன்ற கேள்விகளுக்குப் பதில் சொல்கிறது மீதிக் கதை.

**பாத்திரங்கள்**

உணவுப் பாதுகாப்புத் துறை அதிகாரியாக வரும் சித்தார்த் விறைப்பும் முறைப்புமாக வந்து போகிறார். அவரின் உடல்மொழி பொலிஸ் அதிகாரியையே மிஞ்சும் அளவுக்கு இருக்கிறது. எந்தக் காட்சியிலும் அவரை அமைதியுடன் பார்க்க முடியவில்லை. முதல் பாதி முழுக்க சில காட்சிகளில் மட்டும் சித்தார்த் வந்து போகிறார். சொல்லப்போனால் படத்தின் நீட்டிக்கப்பட்ட மதிப்புக் கதாபாத்திரத்தில் சித்தார்த் நடித்துள்ளாரோ என்ற நினைப்பு ஏற்படுகிறது. நல்லவேளை, இரண்டாம் பாதியில் ஈடுகட்டி அந்தக் குறையைப் போக்குகிறார். தேநீர்க் கடையைப் பரிசோதிக்கும் காட்சியில் மட்டும் சித்தார்த் தனது முத்திரையைப் பதிக்கிறார். அன்னை தெரஸா அளவுக்கு சேவை செய்ய வேண்டும், மற்றவர்களுக்கு உதவ வேண்டும் என்று உள்ளத்தால், குணத்தால் உயர்ந்து நிற்கிறார் கேத்ரின் தெரஸா. ஆனால், அவரின் கதாபாத்திரம் சரியாகக் கட்டமைக்கப் படவில்லை. வாசனையை நுகரும் உணர்வை இழந்தவர் கேத்ரின் என்பது திரைக் கதைக்குச் சுவாரஸ்யம் சேர்க்கும் அம்சம். ஆனால், இயக்குநர் அதைச் சரியாகப் பயன்படுத்தாது பெருங்குறை. நகைச்சுவையான அப்பா என்கிற பெயரில் நரேன் நடித்திருக்கும் விதம் ரசிக்கும்படி இல்லை. மயில்சாமி, மனோபாலா, பருத்திவீரன் சுஜாதா, இளங்கோ குமாரவேல் என படத்தில் அத்தனை பேரும் வீணடிக்கப்பட்டிருக்கிறார்கள். சதீஷின் நகைச் சுவையில் சிரிக்க முடியவில்லை. ஸ்டண்ட் சில்வா, மதுசூதனராவ், கபீர் சிங், நந்தகுமார் ஆகியோர் வழக்கமான வில்லன்களாக வந்து செல்கிறார்கள்.






**இசை, ஒளிப்பதிவு, காட்சித் தொகுப்பு**

ஏகாம்பரத்தின் ஒளிப்பதிவு படத்தின் ஒரே ஆறுதல். தமன் படம் முழுக்க இரைச்சலையே கொடுத்திருக்கிறார். ப்ரவீன் கே.எல். தயங்காமல் சில இடங்களில் காட்சிகளை நீக்கியிருக்க லாம். குறிப்பாக படத்தின் தொடக்கக் காட்சி. தொகுப்பு முறையையும் மாற்றி சத்துணவு முட்டையால் பாதிக்கப்படும் பள்ளிக் குழந்தைகள் பிரச்சினையை முதலில் சொல்லியிருந்தால் படத்தின் தன்மை மாறியி ருக்கும்.

**பலம் - பலவீனம்**

உருவமில்லாத அருவத்தை மையமாகக் கொண்டு திகிலூட்டக்கூடிய படம் ஒன்றைக் கொடுப்பதற்கு இயக்குநர் சாய் சேகர் முயற்சி செய்துள்ளார். ஆனால், அது திகிலாக இல்லாமல் நல்ல செய்தியும் சொல்லாமல் ஏனோதானோவென்று கடந்து போகிறது. நல்ல செய்தியைச் சொன்னால் நல்ல படமாகிவிடும் என்ற இயக்குநரின் நம்பிக்கை இரசிகர்களிடத்தில் எடுபடவில்லை. அழுத்தமான காட்சிகளோ,. திரைக்கதைக்கான வலுவான காரணங்களோ இல்லாமல் படம் நிதான கதியில் செல்கிறது. ஒருவனின் செயல்களை வைத்து நல்ல ஆத்மா என்று முடிவுக்கு வராமல் அவரின் சாம்பலைக் கடலில் கரைத்ததால்தான் நல்ல ஆத்மா ஆனது என்று சொல்வதெல்லாம் அபத்தமான நகைச்சுவை. ஷங்கர் முருகதாஸ் பட மாதிரிக் காட்சி கள், 'காஞ்சனா' போன்ற படங்களின் உசாத்துணை என படத்தின் திரைக் கதை தெளிவில்லாமல் இருக்கிறது.

---

தெலுங்கில் வெளியான 'அனந்தோ பிரம்மா' என்ற படத்தைத் தமிழில் மறுதயாரிப்புச் செய்துள்ளார் இயக்குநர் ரோஹின் வெங்கடேசன். அதுவே 'பெட்ரோமாக்ஸ்'.

**கதை**

மலேசியாவில் வசிக்கும் பிரேம், தன்னுடைய பெற்றோர் இந்தியாவின் கேரளாவில் ஏற்பட்ட வெள்ளத்தில் இறந்துவிட்டதாகக் கூறி, சென்னை மணிமங்கலத்தில் உள்ள வீட்டை விற்பதற்கு முயற்சி செய்கிறார். ஆனால், அங்குள்ள சில பேய்கள் அந்த முயற்சிக்குத் தடை போடுகின்றன. வீட்டில் பேய்கள் இருப்பதை நம்பாத பிரேம், பேய்கள் இல்லையென நிரூபித்தால் பணம் தருவதாக முனீஷ்காந்திடம் கூறுகிறார். பணத்தேவை இருப்பதால், முனீஷ்காந்த், காளி வெங்கட், சத்யன், திருச்சி சரவணகுமார் ஆகிய 4 பேரும் அந்த வீட்டில் 4 நாள்கள் தங்குகின்றனர். அவர்கள் நால்வரையும் அங்குள்ள பேய்கள் என்ன செய்தன? உண்மையிலேயே கேரளா வெள்ளத்தில் இறந்தது பிரேமின் பெற்றோர்கள்தானா? வீட்டை விற்கும் முயற்சி என்ன ஆனது? இதற்குள் தமன்னா எப்படி வந்தார்? என்பதுதான் 'பெட்ரோமாக்ஸ்' படத்தின் கதை.

**பாத்திரங்கள்**

மீரா எனும் கதாபாத்திரத்தில் தமன்னா நடித்துள்ளார். பட விளம்பரங்களில் அவருக்குக் கொடுக்கப்பட்ட முக்கியத்துவத்தைப் பார்த்தால், முதன்மைக் கதாபாத்திரத்தில் சிறப்பாக நடித்திருப்பார் என்று தோன்றும். ஆனால், கொஞ்சம் நீட்டிக்கப்பட்ட சிறப்புத் தோற்றம்தான் எனும் அளவுக்கு தமன்னாவின் பங்கு மிகக் குறைவாகவே உள்ளது. வெள்ளாவியில் வைத்து வெளுத்தது போல ஏற்கெனவே வெள்ளையாக இருக்கும் தமன்னாவை, பேய்த் தோற்றத்துக்காக மேலும் வெள்ளையாக்கியுள்ளனர். அப்படி ஒரு வெள்ளையில் தமன்னாவைப் பார்ப்பதற்குக் கொஞ்சம் பயமாகத்தான் இருக்கிறது. பேய்த் தோற்றம் என்பதால், பெரும்பாலும் ஆடையுடனேயே இருக்கிறார். தமன்னாவைவிட முனீஷ்காந்துக்குத்தான் இந்தப் படத்தில் அதிகக் காட்சிகள். செந்தில் கதாபாத்திரத்தில் அவர் செய்யும் நகைச்சுவை சிரிப்பை வரவழைக்கின்றது. அதுவும் பயம் வந்தால் பதற்றப்படாமல் சிரிக்க வேண்டும் என மருத்துவர் சொல்லியிருப்பதால், பேய்களைப் பார்த்து அவர் சிரிக்கும் இடங்களில் பார்வையாளர்களுக்கும் சிரிப்பு வருகிறது. நடிகனாவதற்கு ஆசைப்படும் காளி கதாபாத்திரத்தில் திருச்சி சரவணகுமார் நடித்துள்ளார். விதவிதமான தோற்றங்களில் ஒவ்வொரு நடிகரைப் போலவும் அவர் நடிக்கும்போது சிரிப்பு வருகிறது. காளி வெங்கட், சத்யன், மைனா நந்தினி, ப்ரேம், வெங்கடேஷ், மைம் கோபி, பேபி மோனிகா ஆகியோரும் தங்கள் பங்களிப்பை நன்றாகச் செய்துள்ளனர்.





இசை, ஒளிப்பதிவு

டேனி ரேமண்டின் ஒளிப்பதிவும், ஜிப்ரானின் இசையும் உறுத்தாமல் படத்துக்கு ஏற்றவாறு அமைந்துள்ளன. மைனா நந்தினி எழுதிய கடிதத்தை முனீஷ்காந்த் படிக்கும்போது, மைனாவின் இரண்டு காதுகளையும் முனீஷ்காந்த் பிடித்திருப்பதுபோல் காட்சியமைத்திருப்பது, இயக்குநரின் புதிய எண்ணக்கருவுக்கு நல்லதோர் எடுத்துக்காட்டு.


**பலம் பலவீனம்**

இது பயமுறுத்தும் படம் இல்லை, நகைச்சுவைப் படம் என ஆரம்பத்திலேயே சொல்லிவிடுவதால், பயந்த சுபாவம் கொண்டவர்கள் தைரியமாக நிமிர்ந்து படம் பார்க்கிறார்கள். ஆனால், நகைச்சுவை எப்போது வருமெனக் காத்திருக்க வேண்டியதாகிவிட்டது. இடைவேளைக்குப் பின் முனீஷ்காந்த், சத்யன், காளி வெங்கட், திருச்சி சரவணகுமார் நால்வரும் நன்றாகச் சிரிக்க வைக்கின்றனர். அதுவும் ஒருகட்டம் வரைக்கும்தான். முனீஷ்காந்த் குழுவின் முற்காலக் காட்சிகள் எதிலுமே சிரிப்பு வரவில்லை. அந்தக் காட்சிகளைக் குறைத்திருக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 100% காதல்



2011ஆம் ஆண்டு தெலுங்கில் வெளியான '100% லவ்' என்ற படத்தின் மறு தயாரிப்பு இது.

**கதை**

10ஆம் மற்றும் 12ஆம் வகுப்புப் பரீட்சைகளில் மாநில மட்டத்தில் முதல் மாணவனாகத் தேர்ச்சி பெறுகிறார் ஜி.வி.பிரகாஷ். படிப்பில் எப்போதுமே சிறந்தவனும், வேகமுடையவனும் தான் ஒருவனே என்ற தன்முனைப்பு (ஈகோ) அவருக்குள் விஸ்வரூபம் எடுத்து நிற்கிறது. கிராமத்தில் ஒழுங்காகப்



படிக்காததால், ஜி.வி.பிரகாஷ் கல்வி கற்கும் பாடசாலையில் சேர்வதற்காக வருகிறார், அவருடைய முறைப்பெண் ஷாலினி பாண்டே. 'மாமா... மாமா...' என ஜி.வி.பிரகாஷையே சுற்றிவரும் ஷாலினி பாண்டேவை, ஜி.வி.பிரகாஷ் கண்டு கொள்வதே இல்லை. ஒழுங்காகப் படிக்காததால் பரீட்சைகளில் தோல்வியடைந்து விடுவேன் என ஷாலினி பாண்டே அழுகிறார். அவருக்குப் பாடம் சொல்லிக் கொடுக்கிறார் ஜி.வி.பிரகாஷ். ஜி.வி. பிரகாஷையும் தாண்டிப் பரீட்சையில் சிறந்த புள்ளிகளை எடுத்து விடுகிறார் ஷாலினி பாண்டே. ஜி.வி.பிரகாஷ்க்குள் ஈகோ தலைதூக்குகிறது. அடுத்த தவணைப் பரீட்சையில் யார் அதிக புள்ளிகள் வாங்குவது என ஜி.வி. ஷாலினி பாண்டே இருவரும் போட்டிபோட்டுப் படிக்கிறார்கள். இருவருக்கும் அதிர்ச்சியளிக்கும் வகையில் யுவன் மயில்சாமி அதிக புள்ளிகளைப் பெற்றுவிடுகிறார். அவர் மறுபடியும் அதிக புள்ளிகளைப் பெறாமல் இருப்பதற்காக ஜி.வி.பிரகாஷ் ஷாலினி பாண்டே இருவரும் இணைந்து திட்டம் போடுகின்றனர். அந்தத் திட்டம் வெற்றி பெற்றதா? ஜி.வி.யின் ஈகோ என்னவானது? ஷாலினி பாண்டேவின் காதல் வெற்றி பெற்றதா? என்பதுதான் மீதிப்படம்.

**பாத்திரங்கள்**

படத்தின் நாயகனான ஜி.வி.பிரகாஷ், பாடசாலை ஆண்டு விழா நாடகத்தில் நடிப்பதுபோல ஈடுபாடே இல்லாமல் நடித்துள்ளார். அவர் வாயிலிருந்து வசனங்கள் வெளிவருகின்றனவே தவிர, முகத்தில் எந்த வெளிப்பாடுகளையும் பார்க்க முடியவில்லை. ஏதேதோ செய்ய முயன்று, தன்னுடைய எல்லா முயற்சிகளிலும் தோற்றுப் போகிறார் ஷாலினி பாண்டே. படத்தின் இயக்குநர் சந்திரமௌலி, ஒரு நடிகரிடமும் கொஞ்சம்கூட வேலை வாங்கவே இல்லை என்பது அப்பட்டமாகத் தெரிகிறது. ஏகப்பட்ட படங்களில் நடித்த முதிர்ச்சியான நடிகர்களான நாசர், ஜெயசித்ரா, தலைவாசல் விஜய், ரேகா ஆகியோர் கூட ஏனோதானோவென்று நடித்துள்ளனர். நடிகர்களிடம் டயலாக் பேப்பரை மட்டும் கொடுத்துவிட்டு, 'உங்கள் விருப்பத்துக்கு நடியுங்கள்' என இயக்குநர் சொல்லிவிட்டார் போலும்.

**இசை, காட்சித் தொகுப்பு**

ஜி.வி.பிரகாஷ் இசையில், பாடல்கள் எதுவுமே படத்துக்குத் தேவையில்லாத ரகத்திலுள்ளன. பின்னணி இசையும் சொதப்பல். அடுத்தடுத்த காட்சிகள் தொடர்ச்சியாக இல்லாமல், தனித்தனித் துண்டுகளாகத் தனித்துத் தெரிகின்றன. சோகமான காட்சிகளில் சிரிப்பு வருவதைத் தவிர்க்க முடிவதில்லை. படத்தின் கலை இயக்குநர் தோட்டா தரணி. ஆனால், ஜி.வி.பிரகாஷ் அறையைத் தவிர வேறு எந்தக் காட்சியமைப்புயே உருப்படியாக இல்லை. சுவாரசியமான கதையாக இருந்தாலும், திரைக்கதை வலுவாக இல்லாததால் படம் அலுப்பூட்டிவிடுகிறது.



# 'மதர்லெஸ் ப்ரூக்ளின்'

## MOTHERLESS BROOKLYN

ஜோனாதன் லெதாம் என்பவர் எழுதிய இதே பெயரிலான நாவலைத் தழுவியதாக உருவாகியுள்ள திரைப்படம் இது.



**கதை**

1950களில் நடக்கிறது கதை. அமெரிக்காவின் ப்ரூக்ளின் நகரில் சிறிய அளவிலான துப்பறிவாளராக வலம் வருபவர் லயனல் எஸ்ராக். இவருக்கு நரம்புக் கோளாறு தொடர்பாக வித்தியாசமான குரல் தொனி இருக்கிறது. அங்கச் சேஷ்டைகள் கூடும் விசித்திரமான நரம்புப் பாதிப்பும் உண்டு. ஆனால் வேறு எவருக்கும் வாய்க்காத நுண்ணிய சிடுக்குகளை விடுவிக்கும் மூளைத்திறனும் இவருக்கு வரப்பிரசாதமாய் வாய்த்திருக்கிறது. ஆருயிர் நண்பனும் வழிகாட்டியுமான வ்ப்ராங்க் எதிர்பாரா தருணமொன்றில் கொல்லப்படுகிறார். அந்தக் கொலையைத் தனிப்பட்ட காரணங்களுக்காகத் துப்பறிவதற்கு ஆயத்தமாகிறார் எஸ்ராக். அப்போது நட்பு, காதல், துரோகம், அதிகாரம் தொடர்பான இரகசியங்கள் பலவற்றை எஸ்ராக் எதிர்கொள்ள நேரிடுகிறது. தனது நண்பரின் கொலைக்குப் பின்னால் இருக்கும் பல சம்பவங்களை எதிர்கொள்ளும் எஸ்ராக், கொலைக்கான காரணத்தைக் கண்டறிந்தாரா? இல்லையா? என்பதே மீதிக் கதை.

**பாத்திரங்கள்**

வித்தியாசமான உடல்நலப் பாதிப்பை பிரதிபலிக்கும் முதன்மைப் பாத்திரத்தை ஏற்று நடித்திருக்கிறார் எட்வர்ட் நோர்டன். அதனுடன் அவரே படத்துக்குத் திரைக்கதை அமைத்து, தயாரித்து இயக்கியும் உள்ளார். இவரது நண்பராக ப்ரூஸ் வில்லிஸ் தோன்றுகிறார். செர்ரி ஜோன்ஸ், லெஸ்லி மான் உட்படப் பலர் நடித்துள்ளனர். 1950 காலப்பகுதில் வழக்கத்தில் இருந்த இசை, அந்தக் காலத்தைச் சித்திரிக்கும் விதமான எட்வர்ட் நோர்டனின் வித்தியாசமான நடிப்பு, பிரபலமான நாவலின் கதை ஆகியவற்றுடன் 'மதர்லெஸ் ப்ரூக்ளின்' திரைப்படம் எதிர்வரும் நவம்பர் மாதம் முதலாம் திகதியன்று வெளியாகும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்த வாரம்

**13.10.2019 முதல் 19.10.2019 வரை**

உங்களுக்கு எப்படி?

## மேடம்

சூரியன், செவ்வாய், ராகு, சந்திரனால் நற்பலன் கிடைக்கும்.,உங்கள் பேச்சில் வசீகரம் உருவாகும். தம்பி, தங்கை அதிக பாசம் கொள்வர். புத்திரர் படிப்பு, வேலையில் முன்னேற்றம் காண்பர். இஷ்டதெய்வ அருளால் குடும்ப விவகாரம் சுமூக தீர்வுக்கு வரும். உறவினர்களின் வருகை மகிழ்ச்சி தரும். விருந்து, விழாவில் கலந்து கொள்வீர்கள். மனைவியின் உடல் நலத்தில் கவனம் வேண்டும். தொழிலில் உற்பத்தி, விற்பனை செழிக்கும். பணியாளர்கள் சுறுசுறுப்புடன் பணிபுரிவர். மாணவர்கள் படிப்பில் கூடுதல் பயிற்சி பெறுவர்.

## இடபம்

புதன், குரு, சந்திரனால் நன்மை கிடைக்கும். நண்பர்களிடம் பேசுவதில் நிதானம் வேண்டும். சமூக நிகழ்வு மாறுபட்ட அனுபவம் தரலாம். வாகனத்தில் மிதவேகம் நல்லது. புத்திரர் பெற்றோரின் வழிகாட்டுதல் ஏற்று செயல்படுவர். எதிரியால் உருவான செயல் பலமிழக்கும். மனைவியின் ஆர்வமிகு செயல் குளறுபடியாகலாம். விரும்பிய பொருட்கள் வாங்கி மகிழ்வீர்கள். தொழில், வியாபாரத்தில் அளவான பணவரவு கிடைக்கும். பணியாளர்கள் பணியிட சூழல் உணர்ந்து செயல்படவும். வாங்க கூடாது. மாணவர்கள் பாதுகாப்பற்ற இடங்களில் செல்ல வேண்டாம்.

## மிதுனம்

சுக்கிரன்,சந்திரன்ஓரளவுசுபபலன் தருவர். எதிர்ப்பாக இருந்த விஷயங்கள் நல்ல மாற்றம் தரும். லட்சிய மனதுடன் பணி புரிவீர்கள். புத்திரர் செயல் சிறப்பாக அமைந்திடும். குடும்பத்திற்கான பணச்செலவில் தாராளம் இருக்கும். எதிரியிடம் சமயோசிதமாக விலகுங்கள். மனைவி கருத்திணக்கமுடன் நடந்து கொள்வார். தொழிலில் உற்பத்தி, விற்பனைஅளவுடன்இருக்கும்.பணியாளர்கள் அதிக வேலை வாய்ப்பை ஏற்று கொள்வர். பெண்கள் பண செலவில் சிக்கனம் பின்பற்றுவர். மாணவர்கள் படிப்பில் அதிக கவனம் வேண்டும்.

## கடகம்

பெரும்பான்மை கிரகங்களால் ராஜயோகபலன்கிடைக்கும்.சமூகத்தில் பெற்றநற்பெயரைபாதுகாத்துகொள்வீர்கள். வாழ்வில் முன்னேற புதிய வாய்ப்பு வரும். உடன் பிறந்தவர்களுக்கு சுப நிகழ்ச்சி நடந்தேறும். புத்திரரின் செயல் சிறப்பாக அமைந்து மகிழ்ச்சியை தரும். பிரச்னையில் சுமூக தீர்வு கிடைக்கும். மனைவியின் பணிகளில் முன்னேற்றம் ஏற்படும். தொழில் வியாபாரத்தில் போட்டி குறைந்து பணவரவு கூடும். பணியாளர்களுக்கு சலுகை கிடைக்கும். பெண்களுக்கு தாய் வீட்டு உதவி கிடைக்கும். மாணவர்கள் படிப்புடன்கலைகளும்பயில்வர். மாணவர்கள் படிப்பில் முன்னேற்றம் பெற புதிய பயிற்சிமேற்கொள்வர்.

## சிங்கம்

சுக்கிரன், ராகு, சந்திரனால் அதிக நன்மை ஏற்படும். பணி நிறைவேற உத்வேகமுடன் செயல்படுவீர்கள். பணவரவுஅதிகரிக்கும். வாகனத்தில்மிதவேகம் பின்பற்றவும். புத்திரர் சில விஷயங்களில் பிடிவாதம் கொள்வர். விவகாரங்களில் சுமூக தீர்வு பெற மாற்று உபாயம் உதவும். மனைவியின் ஆலோசனை மனதில் நம்பிக்கையை உருவாக்கும். தொழில், வியாபாரத்தில் அபிவிருத்தி ஏற்படும். பணியாளர்கள் அதிக வேலை வாய்ப்பைஏற்றுகொள்வர். பெண்கள்பிள்ளைகள் நலனில் அக்கறை கொள்வர். மாணவர்கள் வெளியிடம் சுற்றுவதை குறைக்கவும். பெண்கள்வீட்டுஉபயோகபொருட்கள் வாங்குவர்.

## கன்னி

சுக்கிரன், சந்திரன் நற்பலன் வழங்குவர். எவரிடமும் நிதானித்து பேசுவீர்கள். உறவினர் உதவி கிடைக்கும். குடும்பத்திற்கான பண செலவில் சிக்கனம் நல்லது. வீடு, வாகனத்தில்பாதுகாப்புபின்பற்றவும். புத்திரரின் சொல்லும், செயலும் குளறுபடியாகலாம். ஒவ்வாத உணவு உண்ண வேண்டாம். மனைவியின் உடல் நலத்திற்கு மருத்துவ சிகிச்சை தேவைப்படலாம். தொழில், வியாபாரத்தில் அளவான பணவரவு கிடைக்கும். பணியாளர்கள் பணியிட சூழல் உணர்ந்து செயல்படவும். பெண்கள் குடும்ப விஷயம் பிறரிடம் பேச வேண்டாம். மாணவர்கள் படிப்பில் கவனம் வேண்டும்.

## துலாம்

சுக்கிரன், குரு, கேது, சனீஸ்வரரால் வியத்தகு அளவில் நன்மை உண்டாகும். தெய்வ நம்பிக்கை மனதில் நல்ல மாற்றம் தரும். செயல்கள் சிறப்பாக அமையும். வாகன பயணம் அளவுடன் மேற்கொள்வீர்கள். தாயின் மன குறையை அறிந்து சரி செய்வீர்கள். புத்திரரின் நற்செயல் பெருமையை தேடி தரும். மனைவியின் கருத்துக்கு முக்கியத்துவம் தருவீர்கள். தொழிலில் உற்பத்தி, விற்பனை செழித்து ஆதாய பண வரவு கிடைக்கும். பணியாளர்கள் பணி இலக்கை எளிதில் நிறைவேற்றுவர். பெண்கள் புத்தாடை, நகை வாங்குவர். மாணவர்கள் படிப்பில் அதிக மதிப்பெண் பெறுவர்.

## விருச்சிகம்

செவ்வாய், சூரியன் சுக்கிரன் சந்திரனால் ஆதாய பலன் கிடைக்கும். தம்பி, தங்கை அதிக அன்பு பாராட்டுவர். அறிமுகமில்லாதவருக்கு வீடு, வாகனத்தில் இடம் தர கூடாது. புத்திரர் எண்ணம், செயலில் புத்துணர்வு பெறுவர். நோய் தொந்தரவு குறைந்து ஆரோக்கியம் பலம் பெறும். மனைவி வழி சார்ந்த உறவினர் உதவுவர். தொழில், வியாபாரத்தில் அளப்பரிய முன்னேற்றம் உருவாகும். பணியாளர்கள் கேட்ட கடனுதவி கிடைக்கும். பெண்கள் குடும்ப நலன் பேணி பாது காத்திடுவர். மாணவர்களுக்கு படிப்பில் முன்னேற நண்பரால் உதவி உண்டு...

## தனுசு

குரு, சுக்கிரன், சூரியன், புதன் அதிர்ஷ்ட பலன் வழங்குவர். தாயின் அன்பு, ஆசி மனதில் புத்துணர்வு தரும். பணிகளில் நேர்த்தி உருவாகும். புத்திரர் பெற்றோரின் வார்த்தையை ஏற்று செயல்படுவர். சொத்தின் பேரில் அதிக பணம் கடன் பெற வேண்டாம். எதிரியால் உருவான செயல் பலமிழக்கும். மனைவியின் ஜாதகம் அதிர்ஷ்டகரமான பலன் தரும். தொழில், வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். பணியாளர்கள் அக்கறையுடன் பணிபுரிவர். பெண்கள் உறவினர் குடும்பத்தில் சுப நிகழ்ச்சி நடத்த உதவுவர். மாணவர்கள் படிப்பில் சிறந்து நண்பருக்கும் உதவுவர்.

## மகரம்

ராகு, புதன், குரு, சந்திரன் அனுகூல அமர்வில் உள்ளனர். புதியவர்கள் அன்பு, பாசத்துடன் உதவுவர். மனதில் புத்துணர்வு பிறக்கும். பணிகளில் முன்னேற்றம் ஏற்படும். வெளியூர் பயணம் இனிய அனுபவம் தரும். புத்திரர் உங்கள் வழிகாட்டுதலை தயக்கத்துடன் ஏற்று கொள்வர். உடல் ஆரோக்கியம் பலம் பெறும். எதிரி இடம் மாறுகின்ற நன்னிலை உண்டு. மனைவி கருத்திணக்கம் கொள்வார். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலைத்திருக்கும். தொழில், வியாபாரம் செழித்து நிலுவை பணமும் வரவாகும். பணியாளர்களுக்கு சலுகையும், விண்ணப்பித்த கடனுதவியும் கிடைக்கும். பெண்கள் குடும்ப நலன் பேணி காத்திடுவர்.

## கும்பம்

சுக்கிரன், கேது, சனீஸ்வரர், சந்திரனால் நற்பலன் கிடைக்கும்., வாக்குறுதியை நிறைவேற்று வீர்கள்., உடன்பிறந்தவர் அதிக அன்பு பாராட்டுவர். வாகனத்தின் பயன்பாடு அதிகரிக்கும். புத்திரர்கள் படிப்பு, வேலையில் முன்னேற்றம் காண்பர். தாய் விரும்பிய பொருள் வாங்கி தருவீர்கள். மனைவி கருத்திணக்கம் கொள்வார். வாழ்க்கை மகிழ்ச்சிகரமாகும். தொழில், வியாபாரம் செழித்து வளரும். பணியாளர்கள் சிறப்பாக பணி புரிந்து பாராட்டு, வெகுமதி பெறுவர். பெண்கள் கலையம்சம் நிறைந்த பொருள் வாங்குவர். மாணவர்கள் படிப்பில் முன்னேற்றம் காண்பர்.. பெண்கள் பிள்ளைகள் நலன்களை பாதுகாத்திடுவர்.

## மீனம்

புதன், குரு, சுக்கிரன், சந்திரன் தாராள அளவில் நற்பலன் தருவர். மன உறுதியுடன் பணிகளை செயல்படுத்துவீர்கள். குடும்பத்தில் ஒற்றுமை, மகிழ்ச்சி அதிகரிக்கும். புத்திரர் ஆடம்பர பொருள் வாங்க ஆர்வம் கொள்வர். எதிர்ப்பாளர் மறைமுகமாக இடையூறு செய்வர். மனைவியின் மனதில் நம்பிக்கை வளர்ந்திடும். விருந்து, விழாவில் கலந்து கொள்வீர்கள். தொழில், வியாபாரம் செழித்து அளப்பரிய லாபம் கிடைக்கும். பணியாளர்கள் சிறப்பாக பணி புரிந்து சலுகை பெறுவர். பெண்கள் பணம் சேமிப்பில் ஆர்வம் கொள்வர். மாணவர்கள் படிப்பில் முன்னேறுவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிம்மதியே உண்மையான செல்வம்!



துறவி ஒருவர் கிராமத்துக்கு வந்திருந்தார். பணக்காரர் ஒருவர் அவரிடம் ஆசி வாங்கினால் தனக்கு மேலும் பணம் பெருகும் என்ற எண்ணத்தில் அவரை சந்திப்பதற்குச் சென்றார். துறவியின் பாதத்தில் விழுந்து வணங்கினான்.

"அன்பனே! எழுந்திரு! உனக்கு என்னப்பா குறை!" என்று கேட்டார். "ஐயா! உங்கள் நல்லாசியுடன் நான் இன்னும் பணம் சேர்க்க வேண்டும் என்று வாழ்த்துங்கள்," என்று கூறினார். துறவி அவரிடம், "செல்வம் என்பது சிந்தையின் நிறைவு. பொருளாசைக்கு எல்லையே கிடையாது. மனம் என்னும் குரங்கு தாவிக் கொண்டே தான் திரியும். நாம் தான் மனதை ஒருமுகப்படுத்தி நிலைநிறுத்த வேண்டும். இல்லாதவர்களுக்குச் சிறிதளவாவது கொடுப்பதே நீ பெற்ற செல்வத்தின் பயனாகும். பெற்ற பொருள் அனைத்தையும் நீ ஒருவனே அனுபவிக்க வேண்டும் என்றால் முடியாது. வாழ்க்கையில் நாம் இழக்கக் கூடாத பெருஞ் செல்வம் மனநிறைவும், நிம்மதியுமே. ஒரு நாளைக்கு ஒருபிடி அன்னத்தையாவது பசித்தவருக்கு உணவாக இடு! உன்னிடம் உள்ள பணம் உனக்கு உதவலாம், உதவாமலும் போகலாம். நீ படுத்த படுக்கையாகக் கிடந்தால், பணத்தை எட்டி எடுக்கக்கூட கை உதவாது. ஆனால், ஒருவன் செய்த தர்மம் தக்க சமயத்தில் உதவும்," என்று ஆசியளித்தார்.

இந்த அறிவுரை பணக்காரனின் மனதை மாற்றியது. தான் மட்டுமே செல்வத்தை அனுபவிக்க வேண்டும் என்ற தன் எண் ணத்தை மாற்றிக் கொண்டார்.

## குயில்...



கூகூ கூகூ கூகூ என்று
கூவிக் கீதம் பாடுவேன்
கூடி வாழும் சோடிக் குயிலைக்
கூவிக் கூவித் தேடுவேன்

காகம் என்று நீங்கள் என்னைக்
கருதிக் கொள்ள வேண்டாம்
காதில் இனிக்கக் கூவும் குரலால்
கண்டு கொள்வீர் என்னை


பார்க்க நானும் கறுப்பு நிறந்தான்
பாடும் குரலைக் கேளும்
பாலும் தேனும் கரும்பும் போலப்
பாடும் குரலைக் கேளும்.

காகக் கூட்டில் முட்டை இடுவேன்
காகம் அடைகாக்கும் பொரிக்கும்
காலஞ் செல்ல எனது குஞ்சு
கனிந்த குரலில் கூவும்

கூவுங் குரலைக் கேட்ட காகம்
குஞ்சைக் கொத்திக் கலைக்கும்
கூவிக் கூவி எனது குஞ்சு
கூட்டை விட்டுப் பறக்கும்

குஞ்சை நானும் கூட்டிக் கொண்டு
கூவிக் கூவித் திரிவேன்
கூகூ கூகூ கூகூ என்று
கூவிக் கூவித் திரிவேன்

காகக் கூட்டில் முட்டை இட்ட
கள்ளக் குயிலே நானும்
கல்லும் கனியக் கூவும் குரலைக்
காது கொடுத்துக் கேளும்



## புதிய வகை நத்தை மீன்கள்!

முதன் முறையாக உலகின் மிக ஆழமான பகுதிகளில் ஒன்றான (ஆழம் 10,994 மீற்றர்) பசுபிக் பெருங்கடலின் அட்டகாமா படுகுழியிலிருந்து மூன்று புதிய வகை மீன் இனங்களை நியூகாஸ்டிக் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த விஞ்ஞானிகளின் ஆராய்ச்சிக் குழு கண்டுபிடித்துள்ளது.

ஆழ்கடல் தன்மை பற்றியும், மீன்களின் குண நலன்களும், அத்துடன் இணைந்த ஆழ்கடல் வாழ் உயிரிகளின் கண்டுபிடிப்பும் இந்தக்கண்டுபிடிப்பால் நம்மைப் பிரமிக்க வைக்கின்றன. கண்டு பிடிக்கப்பட்ட அந்த மீன்களின் பெயர் நத்தை மீன்கள் ஆகும்.

ஆழ்கடலில் மெதுவாக ஊர்வதால் இந்தப் பெயர் சூட்டப்பட்டி ருக்கலாம். இத்துடன் எலூசிவ் நத்தை மீன்கள் மூன்று கண்டுபிடிக்கப் பட்டுள்ளன. இவற்றின் நிற அடிப்படையில் இவற்றை பிங்க், ப்ளூ, மற்றும் பர்ப்பிள் வண்ண நத்தை மீன்கள் என்று குறிப்பிடப்படுகின்றன. அந்த மீன்களின் நகர் பாதையை நோக்கும்போது அவை சுமார் 7ஆயிரம்500 மீற்றர் ஆழத்தில் இருப்பவை என்று தெரிய வருகிறது!

இந்த மீன்களின் உடலமைப்பைப் பார்க்கும்போது, இவை மீன் இன வகைப்பாட்டில் 'லிபரிடே' குடும்பத்தைச் சேர்ந்தவையாக இருக்கலாம் எனக் கருதப்படுகிறது. இந்த நத்தை மீன்களின் அசுரப் பற்களையும், அச்சுறுத்தும் உடல் வகையையும் விட்டுவிட்டால், இவை மிகமிக அழகானவை! சிறியவை. கண்ணாடி போல் லேசாக ஒளி ஊடுருவும் உடலமைப்பு கொண்டவை. மேல் செதில்கள் இன்றி வழு வழுவென்று இருக்கின்றன. ஒளியற்ற ஆழ்கடல் பகுதியில் வாழும் படு திறமைசாலி மீன்கள் இவை.


ஆராய்ச்சிக்குழுவைச் சேர்ந்த விஞ்ஞானி, "தாமஸ் லின்லே' இந்த மீன்களைக் குறித்து இவ்வாறு குறிப்பிடுகிறார். இந்த நத்தை மீன்கள் ஆழ்கடலின் ராஜாக்கள்! பொதுவாக மற்ற மீன்களுக்கு உள்ள இரையாகும் தன்மை இவ்ற்றிற்கு இல்லை. அது போல இவை மிக ஆழமான பகுதியில் வாழ்வதால் போட்டியே இல்லை. ஆழ்கடல் வாழ் விலங்கின அறிவியல் வரலாற்றில் அரிய பதிவாகவே இந்த மூன்று வகைப் புதிய நத்தை மீன் இனங்கள் கருதப்படுகின்றன.

## பொன்மொழிகள்

1. நமது தேவைகள் குறையக் குறைய தெய்வம் நம்மை நெருங்குகிறது.
2. பொறுமையில்லாதவனிடம் ஞானமும் இருப்பதில்லை.
3. அறிவு தெளியத் துணிவு பிறக்கும்.
4. அவதூறு சப்தமிடும்போது செவிகளை மூடிக்கொள்.
5. செழுமை நற்பண்பின் உரைகல்.
6. செருக்கு தேவர்களையும் அசுரர்களாக்குகிறது! அடக்கமோ மனிதர்களைத் தேவர்களாக்குகிறது.
7. தீர்மானமுள்ள மனதுக்குக் கவலை இல்லை.
8. அன்பில் அச்சம் கலந்திருக்க முடியாது! நாம் கண்டு அஞ்சும் மனிதனிடம் நம்மால் அன்பு செலுத்த முடியாது.
9. பக்திக்கும், மதிப்புக்கும் உரிய இடம் கோயில் மட்டும் அல்ல; நாம் பணி புரியும் இடமும்தான்.



## இரண்டு படங்களிலும் 10 வித்தியாசங்கள் உள்ளன கண்டுபிடிப்போம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குர்திஷ்களை கொல்கிறது துருக்கி!



சிரியாவில் குர்திஷ் ஆயுததாரிகளுக்கு எதிராகத் தரை வழியாகவும், வான் வழியாகவும் துருக்கி இராணுவம் தாக்குதல் நடத்தி வருகிறது. இதனால் அந்தப் பகுதியில் பெரும் பதற்றம் நிலவுகிறது. துருக்கி, ஈராக், ஈரான், சிரியா மற்றும் அர்மீனியா ஆகிய நாடுகளின் எல்லைப் பகுதிகளில் மலைப்பாங்கான இடங்களில் வசிப்போர் தான் குர்திஷ்கள். குர்து மொழி பேசும் இவர்களுக்கென்று தனி நாடு கிடையாது. இவர்கள் வாழும் நிலப்பரப்பைக் குர்திஷ்தான் என்று இவர்கள் அழைக்கின்றனர். இவர்கள் ஒரு இன சிறுபான்மைக் குழு. கிட்டத்தட்ட இரண்டரைக் கோடியில் இருந்து 3 கோடி வரை இருக்கிறார்கள். இவர்களில் பெரும்பாலானவர்கள் சன்னி முஸ்லிம்கள். அவர்கள் ஒரு தனித்துவமான இனம், கலாசாரம் மற்றும் மொழியால் ஒன்றுபட்டுள்ளனர். குர்திஷ்தான் என்று அழைக்கப்படும் தனி நாட்டை உருவாக்குவதற்கு அவர்கள் பாடுபட்டு வருகிறார்கள். அரசு சாராத பிராந்தியமான மக்களுக்கு உத்தியோகபூர்வ தாயகமோ, நாடோ இல்லை. இவர்கள் துருக்கி, சிரியா, ஈராக், ஈரான் மற்றும் அர்மீனியா ஆகிய ஐந்து வெவ்வேறு நாடுகளில் உள்ள நிலப்பரப்பில் வசித்து வருகின்றனர்.

### குர்திஷ் படை

'ஒய்.பி.ஜி' என அழைக்கப்படும் 'குர்திஷ் மக்கள் பாதுகாப்புப் படை' குர்திஷ் மக்களைப் பாதுகாக்கிறது. சிரியாவில் ஐ.எஸ். ஆயுததாரிகளை ஒழிப்பதில் இந்த அமைப்புப் பெரும் பங்கு வகித்தது. அமெரிக்கப் படைகள் மற்றும் சிரிய ஆயுதப் படைகளுடன் சேர்ந்து கொண்டு ஐ.எஸ். ஆயுததாரிகளை ஒழித்துக் கட்டியது ஒய்.பி.ஜி., அமைப்பு. மேலும், பிடிபட்ட ஐ.எஸ். ஆயுததாரிகள் குர்திஷ் மக்கள் பாதுகாப்புப் படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள சிறைகளில் அடைத்து வைக்கப்பட்டுள்ளனர். சிரியாவில் நிலைமை இப்படி இருக்க துருக்கியில், குர்திஷ்களுக்குப் பெரிய அளவில் மதிப்புக் கிடையாது.

மேலும் தனித் தேசம் கேட்கும் குர்திஷ்கள் தங்கள் நாட்டிலும், தங்கள் நாட்டின் எல்லை அருகேயும் இருப்பதைத் துருக்கி விரும்ப வில்லை. துருக்கியில் குர்திஷ் கள் தங்கள் அடையாளத்தைத் தக்கவைத்துக் கொள்வதற்காகப் போராடி வருகின்றனர். பெரும்பாலும் துருக்கியில் இவர்கள் 'மவுண்டன் டர்க்ஸ்' என்று அழைக்கப்படுகிறார்கள்.

### துருக்கியில் குர்திஷ்களுக்குத் தடை

துருக்கியில் குர்திஷ் மக்கள் தமது பாரம்பரிய ஆடைகளை அணியவோ அல்லது அவர்களின் மொழியைப் பேசவோ தடை செய்யப்பட்டுள்ளனர். துருக்கியில் குர்திஷ்கள் மிகப்பெரிய இன சிறுபான்மையினராக இருந்தாலும், சுமார் 20 சதவீத மக்கள் உள்ளனர். அவர்கள் துருக்கியில் ஒரு சிறுபான்மைக் குழுவாக அங்கீகரிக்கப்படவில்லை. குர்திஷ்களின் தனித் தேசத்தை விரும்பாத துருக்கி அதிபர் எர்டோகன் தங்கள் நாட்டிலும் சிரியாவிலும் செயற்பட்டு வரும் குர்திஷ்தான் தொழிலாளர்கள் கட்சியை ஒழித்துக் கட்ட வேண்டும் என்பதை இலக்காகக் கொண்டவர். எல்லையோரத்தில் உள்ள குர்திஷ் இனப் போராளிகளை அழிப்பதற்குத் தக்க சமயத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்த துருக்கி அதிபர் எர்டோகனுக்கு, சிரியாவில் உள்ள அமெரிக்கப் படைகளை திரும்ப பெறுவதாக அமெரிக்க அதிபர் ட்ரம்ப் வெளியிட்ட அறிவிப்பு மகிழ்ச்சியை அளித்தது.

### துருக்கிக்கு அமெரிக்கா எச்சரிக்கை

தங்கள் நாட்டு படைகளை சிரியாவில் இருந்து திரும்பப் பெறுவதாக அறிவித்த ட்ரம்ப், ஒருவேளை குர்திஷ் ஆயுததாரிகளுக்கு எதிராகத் துருக்கி போர் தொடுத்தால் கடும் விளைவுகளை சந்திக்க நேரிடும் என எச்சரித்தார். இருப்பினும் ட்ரம்பின் எச்சரிக்கையைப் பொருட்படுத்தாத துருக்கி அரசு, குர்திஷ் ஆயுததாரிகளுக்கு எதிராகப் போரைத் தொடங்கியுள்ளது. கடந்த புதன்கிழமை இரவு சிரியாவின் ரஸ் அல் அயின் நகரை நோக்கி, துருக்கி இராணுவம் வான் வழித்தாக்குதலைத் தொடங்கியது. டல் அப்யத் உட்பட 2 நகரங்களில் துருக்கி இராணுவம் தாக்குதல் நடத்தியுள்ளது. துருக்கியின் தாக்குதலால் உயிருக்கு அஞ்சி அங்கு வசிக்கும் 2 இலட்சம் மக்கள், தங்கள் இருப்பிடங்களை விட்டுக் கூட்டம் கூட்டமாக வெளியேறி வருகின்றனர். இதுவரை ஒய்.பி.ஜி. போராளிகள் குழுக்களின் 181 முகாம்கள் மீது தாக்குதல் நடத்தியுள்ளதாகத் துருக்கி கூறியுள்ளது. கடந்த வியாழக்கிழமை, தல் ஹலாவ்ப் மையத்திலும், வடகிழக்குச் சிரியாவின் ஸ்லுக் நகரத்திலும் 'துருக்கிய ஆக்கிரமிப்பு இராணுவம்' மேற்கொண்ட தரை ஊடுருவல் முயற்சியைத் தடுத்து விட்டதாகக் கூறுகிறது குர்திஷ் சிரிய ஜனநாயகப் படை. அன்று இரவு வான் மற்றும் தரைவழித் தாக்குதல்களை வெற்றிகரமாக மேற்கொண்டு நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளைத' தாக்கித் திட்டமிட்டபடி செயற்பட்டதாகத் துருக்கி அரசு கூறியுள்ளது.

**துருக்கியின் இராணுவ நடவடிக்கையின் முதல் நாளில் 8 பேர் கொல்லப்பட்டனர். பலர் காயமடைந்தனர். பின்னர் வெளியான தகவல்களின் படி அங்குள்ள இலட்சக்கணக்கான மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர்.**



### மக்களுக்குப் பெரும் பாதிப்பு

துருக்கியின் இராணுவ நடவடிக்கையின் முதல் நாளில் 8 பேர் கொல்லப்பட்டனர். பலர் காயமடைந்தனர். பின்னர் வெளியான தகவல்களின்படி அங்குள்ள இலட்சக்கணக்கான மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர். சாவடைந்தவர்களின் தொகையும் அதிகரித்துள்ளது. மேலும், சிரியாவின் எல்லையை ஒட்டிய அக்காக்கலே என்ற இடத்தில் துருக்கி இராணுவ டாங்கிகள் குவிக்கப்பட்டுள்ளன. குர்திஷ் போராளிகள் குழுக்களுக்கு எதிராகத் துருக்கி அரசு தாக்குதலை தொடங்கியுள்ளது. இதனால் அந்தப் பகுதியில் குர்திஷ்களின் சிறையில் உள்ள ஐ.எஸ். ஆயுததாரிகள் தப்பிச்சென்று மீண்டும் தங்கள் பயங்கரவாதச் செயல்களை உலகில் அரங்கேற்றலாம். இந்தப் போரால், சிரியா மட்டுமல்லாமல் உலக நாடுகளில் ஐ.எஸ். பயங்கரவாதம் மீண்டும் தலைதூக்குவதற்கும் வாய்ப்பு இருப்பதாக உலக நாடுகள் கவலை தெரிவித்துள்ளன. துருக்கியின் இராணுவ நடவடிக்கையை இந்தியா, பஹ்ரைன், எகிப்து, சவூதி அரேபியா, ஐக்கிய அரபு இராச்சியம், ஜேர்மனி, பிரிட்டன், ஈராக், மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகள் கண்டித்துள்ளன. அங்குள்ள நிலைமை குறித்து விவாதிப்பதற்கு ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புச் சபை தனிப்பட்ட முறையில் கூடியது. குர்திஷ்கள் மீது துருக்கி நடத்தும் தாக்குதலுக்கு அந்தக் கூட்டத்தில் கவலை தெரிவிக்கப்பட்டுள்ளது. இருகப்பினும் துருக்கியின் தாக்குதல் தொடர்ந்து கொண்டே இருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறைக்கதவில் எத்தனை கம்பிகள்

70

■ தாஸ் மாஸ்ரர்



தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட கைதிகள் சிலரைப் போகம்பரைச் சிறையில் முதன் முதலில் சந்தித்தேன். ஒரு மனிதனின் இறுதி விடயம் தான் சாவு. அவர்கள் தமக்குள் முரண்படுவதும், காயம் வரத்தக்கதாக அடிபடுவதும் சாதரணமான விடயமாக இருந்தது. அது அவர்களின் உச்ச மன அழுத்தத்தாலும், தம்மை எல்லோரும் கைவிட்டுவிட்டார்கள் என்ற தாழ்வு மனப் பாங்கினாலும் ஏற்படுவது. தமக்கு அந்த நிலை ஏற்படுவதற்குக் காரணமாக இருந்தவர்களின் மீது தினமும் பழிவாங்கும் உணர்வும் அவர்களுக்குள் ஏற்படுகிறது. சிலரோ தமக்கு நடந்ததை நினைத்து வேதனைப்படுவதும், தமது மனைவி, பிள்ளைகள் பற்றிக் கவலைபப்படுவதும், கடவுளை வணங்குதல், தியானம் செய்தல், புத்தகங்களை வாசித்தல் போன்ற விடயங்களிலும் கவனம் செலுத்துகின்றனா். சிலர் திடீரெனக் கோபப்பட்டுக் கொலை செய்திருக்கிறார்கள். அவர்களுடன் பழகும்போது மிக நல்ல மனிதர்களாக அவர்கள் இருப்பதை உணர்ந்திருக்கிறேன். அவ்வாறன கைதிகளைக் காலையில் அரை மணிநேரமும் மாலையில் அரை மணிநேரமும் மாத்திரமே சிறையிலிருந்து திறந்து விடுவார்கள். அந்தக் குறுகிய நேரத்தில் அவர்கள் மிகவும் சுறு சுறுப்பாக இயங்குவதையும் இரவில் பாவிப்பதற்காக பீடி அல்லது 'லோக்கல்' (சிறிய ஒரு புகையிலைத் துண்டை வைத்துக் கடதாசித் துண்டால்; உருட்டி எடுக்கப்படும் புகைப் பொருள். இது பல்லுக் குத்துகின்ற குச்சியின் அளவில் இருக்கும். அதை இரண்டு அல்லது ஒரு தடைவ மாத்திரமே உள் இழுத்துப் புகைக்க முடியும்) போன்ற எதையாவது வாங்குவதற்கு ஓடித்திரிவார்கள். பலருக்குத் தூக்கு தண்டனை விதிக்கப்பட்ட போதும் அது நிறைவேற்றப்படுவதில்லை.

★ ★ ★ ★

ஒருவருக்கு என்ன குற்றத்துக்காகத் தூக்குத் தண்டனை வழங்கினாலும் அந்தக் குற்றம் எப்போதோ முடிந்து விட்ட ஒன்று. அதற்காக இன்னொர் மனிதனைக் கொல்வதில் பயனில்லை. மாறாக அவரைச் சிறையில் அடைத்து வைத்திருப்பது பரவாயில்லை. தூக்கிலிடுவதிலும் பார்க்க, இத்தகைய கைதிகளுக்காக அதிகளவில் சிறைச்சாலைகளைக் கட்டினால் கூடப் பரவாயில்லை என்று தோன்றியது. அவர்களுக்கு 3 நேரமும் உணவு வழங்குவது, தேவையான அடிப்படை வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுப்பதும் அரசின் கடமைகளாகும். அவர்களது உணவுக்காக அவர்களையே ஏதாவது தொழில் முயற்சியில் ஏற்படுத்தும் நிலை .இருப்பின் இவர்கள் மீண்டும் சமூகத்தைப் பாழாக்காத வகையிலும் சமூகத்துக்குப் பாரம் இல்லாதவர்களாகவும் மாற்றியமைக்கின்ற ஏற்பாடுகளைச் செய்ய முடியும். தற்போதுள்ள சிறைத் தண்டனை நடைமுறையில் தூக்குத் தண்டனைக் கைதிகளை காலையில் அரை மணி நேரமும் மாலையில் அரை மணிநேரமும் திறந்து விடுகின்றனர். அவர்களுக்கு வேலை எதுவும் கொடுப்பதில்லை. 23 மணி நேரம் அடைக்கப் பட்ட நிலை.

★ ★ ★ ★

2002ஆம் ஆண்டு வெசாக் பண்டிகைக் காலத்தில் அங்கிருந்த தூக்குத் தண்டனைக் கைதிகள் 7பேரின் தண்டனை ஆயுள் தண்டனையாக குறைக்கப்பட்டது. அவர்களின் முகத்தில் மலர்ச்சியையும் புது உற்சாகத்தையும் காண முடிந்தது. தூக்குத் தண்டனைக் கைதியாக 23மணித்தியாலங்கள் சிறைக்குள் அடைபட்டு இருப்பதை விட ஏனைய கைதிகளைப் போல சிறைச்சாலைக்குள் உலாவுவதற்குக் கிடைத்த சந்தர்ப்பத்தை அவர்கள் பெரு விடுதலையைப் போல உணர்ந்து மகிழ்ந்தார்கள். இன்னும் எத்தனை வருடங்கள் சிறைச்சாலைக்குள் கழிக்க வேண்டி இருந்தாலும் பரவாயில்லை என்ற மன உணர்வில் இருந்தார்கள். தூக்குத் தண்டனைக் கைதிகளைக் இதன் பின்னர் பார்க்கும் போது எந்த ஒரு மனிதனும் சிறைக்குள் இருந்தால் கூட அல்லது எத்தகைய துன்பங்கள் அனுபவித்தாலும் கூட மேலும் ஒரு நாள் உயிர் வாழ்வதையே விரும்புகி றான் என்பது தெளிவாகிறது.

சாவுத் தண்டனை வழங்கப்படுகின்ற கைதிக்கு இலங்கை அரசின் அரச தலைவர் மன்னிப்பு வழங்கினால், அந்தத் தண்டனை வாழ்நாள் சிறைத் தண்டனையாக மாற்றப்படுகிறது. இதில் 20 வருடம் கட்டாயமாகச் சிறையில் இருந்தே ஆக வேண்டும். இவ்வாறு மன்னிப்பு வழங்கிய ஒருவரைச் சந்தித்தேன்...

(தொடரும்)

■ வ.துசாந்தன்

# படுவான் துயரம்!



மகேஸ்வரன் படைத்த மண் இது
மழலைகள் விளையாடிய மண்
மலர்கள் பூத்த மண்

மனைகள் கட்டவும் மண் பூமியில்
மதில் அமைக்கவும் மண்
மடு நிரப்பவும் மண்

மனிதர்களின் போராட்டம் அப்போ
மண்ணிலே போராட்டம்
மண்ணுக்கான போராட்டம்

மண்டியிடாத் தமிழர்கள் இப்போ
மண் விற்கும் அவலம்
மட்டு படுவானிலும் துயரம்

# வட்டி குடியை அழிக்கும்

வளமான ஊரு
வரவேற்கும் மண்ணு
வயிறார உணவு
வஞ்சனையில்லா மனசு

வட்டிக் கடையும் இல்ல
வம்புக்கும் யாருமில்ல
வழியில் பயமுமில்ல
வற்புறுத்தலும் இங்கில்ல

வக்கற்ற சனங்கள்
வடிக்கிதுகள் கசிப்பு
வட்டமாகக் காவல்
வட்டி வியாபாரம் செழிக்கிறது

வண்டவாளம் தெரிகிறது
வறுமையும் சூழ்கிறது
வளர்ச்சியும் குன்றுகிறது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







# ஷங்கர் மகாதேவனின் மகனைப் பாடகராக்கிய இமான்

விஜய் சேதுபதி நடித்த 'றெக்க' படத்தின் இயக்குநர் ரத்ன சிவா அடுத்ததாக இயக்கும் படம் 'சீறு'. ஜீவா நாயகனாக நடித்து வரும் இந்தப் படத்தை வேல்ஸ் பிலிம் இண்டர்நேஷனல் நிறுவனம் சார்பில் ஐசரி கணேசன் தயாரிக்கிறார். காதல், அதிரடி கலந்த படமாகத் தயாராகும் இந்தப் படத்துக்கு டி.இமான் இசையமைக்கிறார்.

இந்த நிலையில், இந்த படத்தின் மூலம் பிரபல பாடகர் ஷங்கர் மகாதேவனின் மகன் சிவம் மகாதேவனைப் பாடகராக அறிமுகம் செய்துள்ளார் இமான். ஷங்கர் மகாதேவனின் மகனை பாடகராக அறிமுகம் செய்வதில் மகிழ்ச்சி. அவர் பாடிய பாடல் நன்றாக வந்துள்ளன" என்று இமான் தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் பதிவிட்டுள்ளார். இந்தப் பாடலை விவேகா எழுதியுள்ளார்.



நிற் "கலாம்"
நடக் "கலாம்"
உடுக் "கலாம்"
உறங் "கலாம்" என . . .
இருக் "கலாம் "
என்றிருந்த இந்தியனை . . .
விழிக் "கலாம் "
என தட்டி எழுப்பி இனி . . .

உழைக் "கலாம்"
சிந்திக் "கலாம்"
பறக் "கலாம் "
ஜெயிக் "கலாம் "
சாதிக் "கலாம் "
எனச்சொன்னவர் . . .
அன்புமிகு
அப்துல் கலாம்!


வி(ஜேனா)நோத பிறவி @itz_ViNo51

வாத்தியாரிடம் அடி வாங்காமல் பாடசாலை படி தாண்டியவர்கள் குறைவு தான் அன்று எவ்வளவு அடித்தாலும் மரியாதை குறைந்தது கிடையாது.

சப்பாணி @manipmp

அடுத்த கட்டத்துக்குப் போன பிறகுதான் முந்தைய கட்டத்துக்கு அங்கீகாரம் கொடுக்கிறார்கள்.




## மதவாதம்

குண்டுதாரியின் உடலை
இந்து மயானத்தில்
புதைத்தார்கள்

பிக்குவின் உடலை
பிள்ளையார் கோவில்
தீர்த்தக்கரையினில்
எரித்தனர்

நிகழ்ந்தவை எதிலும்
நியாயம் இல்லை
சட்டமும் சொல்கிறது
ஆனாலும்
கடந்து செல்ல வேண்டிய
கட்டாயத்தில்

முறைதலை என்று
வீதியில் இறங்கினால்
முரளியை வைத்து
நியாயம் சொல்லுவர்
எதற்கு வம்பு

முப்பது வருடப் போராட்ட
முடிவில் முயன்று பாருங்கள்
தீர்வை என்று
சப்பணமிட்டு அமைதியாய்
சாந்த முகத்துடன்
புத்த பெருமான்
சந்திகள் தோறும்




twitter

நீங்கள் அணிந்திருக்கும் அனைத்து முகமூடிகளையும் களைந்து விட்டு, ஆசுவாசப்படுத்திக் கொள்ள நண்பர்களுடன் பொழுதை கழிப்பது மிகவும் உதவுகிறது!!



கோழியின் கிறுக்கல்!! @Kozhiyaar

பிணவறையின் வாசம் ஒருமுறை உணர்ந்து பாருங்கள்!!
பிறருடன் சண்டையிடுவதற்கான காரணங்கள் கட்டாயம் குறைந்துவிடும்!!!

சில கணங்கள் விருப்பமற்று கடக்கின்றன..
தவறான நேரத்தை [illegible]ம் கடிகாரம்போல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெல்லிக்காய் சோறு



குழந்தைகள் நெல்லிக்காயைச் சாப்பிட மறுப்பார்கள். அவர்களுக்கு நெல்லிக் காயில் சோறு செய்து கொடுத்துப் பாருங்கள். கண்டிப்பாக விரும்பிச் சாப்பிடுவார்கள். மேலும், நெல்லிக்காய் அவர்களுக்கு சளி மற்றும் காய்ச்சல் போன்ற நோய்கள் வராமல் தடுத்து, உடலின் எதிர்ப்பு சக்தியை மேம்படுத்த உதவுகிறது.


**தேவையானவை:**


வேகவைத்த சோறு - 3 கப்
நெல்லிக்காய் - 4
வேர்க்கடலை - 2 மேசைக்கரண்டி
கடலைப்பருப்பு - ஒரு மேசைக்கரண்டி
கடுகு - ஒரு கரண்டி
உளுத்தம்பருப்பு - ஒரு தேக்கரண்டி
மஞ்சள்தூள் - அரை தேக்கரண்டி
பெருங்காயத்தூள் - அரை தேக்கரண்டி
செத்தல் மிளகாய் - 2
பச்சை மிளகாய் - 2
கறிவேப்பிலை - சிறிதளவு
நல்லெண்ணெய் - 5 மேசைக்கரண்டி
உப்பு - தேவையான அளவு

**செய்முறை:**

நெல்லிக்காய்களை நன்கு கழுவிவிட்டுச் சிறு துண்டு களாக நறுக்கவும். விதைகளை நீக்கவும். பின்னர் அதை சிறிய மிக்ஸியில் சேர்த்து தண்ணீர்விடாமல் அரைத்துக்கொள்ளவும். வேகவைத்த சோற்றை அகலமான தட்டில் ஆற வைத்து சோற்றின் மேலே சிறிதளவு நல்லெண்ணெய் சேர்த்து நன்கு கலந்துவிடவும். சட்டியில் ஒரு தேசைக்கரண்டி நல்லெண்ணெய்விட்டுச் சூடாக்கி வேர்க்கடலை சேர்த்து நன்றாகப் பொரிந்ததும் சாதத்தில் சேர்த்துக் கலந்துவிடவும். பின்னர் மீதமுள்ள நல்லெண்ணெயை அதே சட்டியில் விட்டு சூடாக்கி கடுகு, உளுத்தம் பருப்பு, கடலைப்பருப்பு, செத்தல் மிளகாய் சேர்த்துத் தாளிக்கவும். பிறகு அதில் நறுக்கிய பச்சை மிளகாய், கறிவேப்பிலை சேர்த்துக் கிளறவும். பச்சை மிளகாய் நிறம் மாறியதும் அரைத்த நெல்லிக்காய் விழுதைச் சேர்த்து நன்கு வதக்கவும்.

அதனுடன் மஞ்சள்தூள், பெருங்காயத்தூள் சேர்த்து வதக்கவும். வதங்கியதும் வேகவைத்த சோறு மற்றும் உப்பு சேர்த்து, அடுப்பை மிதமான சூட்டில்வைத்து, நன்றாகக் கலந்துவிடவும். சோற்றை, நெல்லிக்காய் கலவையோடு நன்கு சேர்ந்த பின் ஒரு பாத்திரத்தில் மாற்றிக் கொள்ளவும்.





# பகவத்கீதை கூறும் அற்புதமான வாழ்க்கை போதனை

1. வாழ்வென்பது உயிர் உள்ள வரை மட்டுமே!
2. தேவைக்குச் செலவிடு.
3. அனுபவிக்கத் தகுந்தன அனுபவி.
4. இயன்ற வரை பிறருக்கு உதவி செய்.
5. மற்றும் ஜீவகாருண்யத்தை கடைப்பிடி.
6. இனி அநேக ஆண்டுகள் வாழப்போவதில்லை.
7. உயிர் போகும் போது, எதுவும் கொண்டு செல்லப் போவது மில்லை. ஆகவே, அதிகமான சிக்கனம் அவசியமில்லை.
8. மடிந்த பின் என்ன நடக்கும் என்று குழம்பாதே.
9. உயிர் பிரிய தான் வாழ்வு. ஒரு நாள் பிரியும். சுற்றம், நட்பு, செல்வம், எல்லாமே பிரிந்து விடும்.
10. உயிர் உள்ள வரை ஆரோக்கி யமாக இரு.
11. உடல் நலம் இழந்து பணம் சேர்க்காதே.
12. உன் குழந்தைகளைப் பேணு. அவர்களிடம் அன்பாய் இரு.
13. அவ்வப்போது பரிசுகள் அளி.
14. அவர்களிடம் அதிகம் எதிர்பா ராதே. அடிமையாகவும் ஆகாதே.
15. பெற்றோர்களை மதிக்கும் குழந்தைகள் கூட, பாசமாய் இருந்தாலும், பணி காரண மாகவோ, சூழ்நிலை கட்டாயத் தாலோ, உன்னை கவனிக்க இயலாமல் தவிக்கலாம், புரிந்து கொள்!
16. அதைப்போல, பெற்றோரை மதிக்காத குழந்தைகள், உனது சொத்தைப் பங்கீடுவதற்க்குச் சண்டை போடலாம்.
17. சொத்தை அனுபவிக்க, நீ சீக்கிரம் சாக வேண்டுமென, வேண்டிக் கொள்ளலாம். பொறுத்துக்கொள்.
18. அவர்கள் உரிமையை மட்டும் அறிவர்; கடமை மற்றும் அன்பை அறியார்.
19. "அவரவர் வாழ்வு, அவரவர் விதிப்படி" என அறிந்து கொள்.
20. இருக்கும் போதே குழந்தை களுக்கு கொடு.
21. ஆனால், நிலைமையை அறிந்து, அளவோடு கொடு. எல்லாவற்றையும் தந்து விட்டு, பின் கை ஏந்தாதே.
22. "எல்லாமே நான் இறந்த பிறகு தான்" என, உயில் எழுதி வைத் திராதே. நீ எப்போது இறப்பாய் என எதிர் பார்த்து காத்திருப்பர்.
23. எனவே, கொடுப்பதை நினைப்பதை மட்டும் முதலில் கொடுத்து விடு; மேலும் தர வேண்டியதை, பிறகு கொடு.
24. மாற்ற முடியாததை, மாற்ற முனையாதே.
25. மற்றவர் குடும்ப நிலை கண்டு, பொறாமையால் வதங்காதே!
26. அமைதியாக, மகிழ்ச்சியோடு இரு.
27. பிறரிடம் உள்ள நற்குணங் களைக் கண்டு பாராட்டு.
28. நண்பர்களிடம் அளவளாவு.
29. நல்ல உணவு உண்டு, நடை பயிற்சி செய்து, உடல் நலம் பேணி, இறை பக்தி கொண்டு, குடும்பத்தினர், நண்பர்களோடு கலந்து உறவாடி, மன நிறைவோடு வாழ்.
30. இன்னும் இருபது, முப்பது, நாற்பது ஆண்டுகள், சுலபமாக ஓடி விடும்!
31. வாழ்வை கண்டு களி!
32. ரசனையோடு வாழ்!
33. வாழ்க்கை வாழ்வதற்கே!
34. நான்கு நபர்களை புறக்கணி!
மடையன்
சுயநலக்காரன்
ஏமாற்றுக்காறன்
ஓய்வாக இருப்பவன்
35. நான்கு நபர்களுடன் தோழமை கொள்ளாதே!
பொய்யன், துரோகி
பொறாமைக்கைரன்
மமதை பிடித்தவன்
36. நான்கு நபர்களுடன் கடின மாக நடக்காதே!
அனாதை
ஏழை
முதியவர்
நோயாளி
37. நான்கு நபர்களுக்கு உனது கொடையை தடுக்காதே!
மனைவி
பிள்ளைகள்
குடும்பம்
சேவகன்
38. நான்கு விசயங்களை ஆபரண மாக அணி!
பொறுமை
சாந்த குணம்
அறிவு
அன்பு
39. நான்குநபர்களைவெறுக்காதே!
தந்தை
தாய்
சகோதரன்
சகோதரி
40. நான்கு விசயங்களை குறை!
உணவு
தூக்கம்
சோம்பல்
பேச்சு
41. நான்கு விசயங்களை தூக்கிப் போடு!
துக்கம், பொறாமை
இயலாமை, கஞ்சத்தனம்
42. நான்கு நபர்களுடன் சேர்ந்து இரு!
மனத்தூய்மை உள்ளவன்
வாக்கை நிறைவேற்றுபவன்
கண்ணியமானவன்
உண்மையாளன்
43. நான்கு விசயங்கள் செய்!
தியானம், யோகா
நூல் வாசிப்பு
உடற்பயிற்சி
சேவை செய்தல் வாழ்க்கை வளம் பெற இத்தகைய செயல் களைக் கடைப்பிடியுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

■ இ.இராசகுலன்



## கதிர்

வையமது வளமுடனே
செல்வங்களால் செழித்திடவே
கதிர் ஒளியை பகர்ந்திடும்
பகலவனின் அபயமதால்
வளமுடனே மானிடர் தாம்
வாழ்ந்திங்கு மேன்மை பெற
தனை வளர்த்த விவசாயி
இன்பமுடன்
நெஞ்சமது மகிழ்வடையத் தான்
அடைந்த தலைக்கனத்தால்
இளநெஞ்சம் தான் இளகி
அன்னையவள் விவசாயி
ஆதவனாம் தந்தையுடன்
இன்புறவே
செய்நன்றி மறவாமல்
கொண்டுவிட்ட தலைக்கனத்தால்
சிரம் தாழ்த்தி வணங்குகிறாள்
கழனியிலே நெற்கதிராள்



## மழை

செருக்களத் தம்மதை
மறந்து விட்ட தேவர்கள்
இந்திரனும் வருணனும்
வஜ்ராயுதமும் வருணாஸ்திரமும்
துணை கொண்டு
பேரொளியுடனும்
பேரொலியுடனும்
தம்முள் மோதியதால்
நிலை குலைந்து
வாய் விட்டு அழுகின்றாள்
கருநீல வான மகள்.....

பாய்ந்து வந்த
'தண்'ணீ(நீ)ரின் தழுவலினால்
குளிர்ந்து விட்டாள்
பூமி மகள், பூமகள்
தன்னிலையை மாற்றியதால்
பாவப்பட்ட உயிர்கள் இங்கே
அயர்வற்ற தன்மையினால்
விழிப்பது கொண்டு
அபயமது வழங்கவென
வேண்டுகிறார் பார்தனிடம்



■ சிவரம்யா


## நெஞ்சுக்கு நிம்மதி

எங்கு தேடினும் கிடைக்கவில்லை
ஆயினும் மனத் தேடல் ஓயவில்லை

ஓடி ஓடி அலைந்த போதும்
கோடி கோடி அடைந்த போதும்
இன்னும் நிம்மதி கிடைக்கவில்லை
வாழ்வு நன்கு அமையவில்லை

உன்னைத் திருத்தி மனதை மாற்றி
அன்பு உறுதி நல்லவை இருத்தி
இன்றே நன்று செய்து
வாழ நீ வாழ விடு
காண்பாய் நெஞ்சுக்கு நிம்மதி

## சொற்சிலம்பம் போட்டி இல: 591



**அனுப்புபவர் பெயர்:..........................................................**
**முழுமையான தபால் விலாசம்: ..........................................**
**.......................................................................................**
**கையொப்பம்:..........................................................................**

வாசகர்கள் மத்தியில், குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தி யில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத் தூண்டுவதே இப் போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள். ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.
சொற்சிலம்பம் போட்டி இலக்கம் 589 இற்கான சரியான விடைகள் வருமாறு:

### இடமிருந்து வலம்
(1) பதவி (4)செய்மதி (7) குந்திதேவி (9) தரி (10) திதி (11) கடுவன் (13)ரசம் (16)அம்மா (17)தடிமன் (19)சகலை (20)கன (21)பதம் (23)விசரன் (25)தின் (26)மதியம்

### மேலிருந்து கீழ்
(1) பகுதி (2) தந்திரம் (3) விதி (4) செவிடு (5) மதன் (6) திரி (8) தேகம் (12) வண்டி (14) சமாசம் (15) மன்னன் (16) அதிபதி (17) தலைவிதி (18)மகரம் (22)தன் (24)சய

சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது
ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

**சொற்சிலம்பம் போட்டி**
**இல.591**
பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள் நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிட்டெட், இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன்கிழமைக்கு அடுத்து வரும் புதன்கிழமைக்கு முன்னர், (23.10.2019 ஆம் திகதிக்கு முன்னர்) கிடைக்கத் தக்கதாக, தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

சொற்சிலம்பம் போட்டி இல.591இல் வெற்றி பெறுவோர்களது விவரம் 27.10.2019 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

## போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்.
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே
ரூபா 300/=, ரூபா 250/=,
ரூபா 200=, ரூபா 150/=
ரூபா 100/=
பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.

போட்டிகளில் வெற்றியீட்டியவர்களாக அறிவிக்கப்பட்டு, இதுவரை தமக்கான பரிசுக் காசோலைகள் கிடைக்கப்பெறாதவர்கள் வார நாள்களில் உதயன் அலுவலக நிதிப் பிரிவில், போட்டிக் கூப்பன்களில் தாம் குறிப்பிட்ட தமது பெயர், வதிவிட விவரங்களை உறுதிப்படுத்தி, தமக்கான கொடுப்பனவைப் பெற்றுக்கொள்ள இயலும். போட்டியில் கலந்துகொள்வோர் தத்தமது சரியான, முழுமையான தபால் விலாசத்தையும் குறிப்பிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

## இடமிருந்து வலம்

1. பிறருக்கு வெளிப்படுத்தப்படும் ஒரு செய்தி.
4. பரிவு
7. பணத்துடன் தொடர்புடையது.
8. இயற்கையாக உள்ளதற்குப் பதிலாக மனிதனால் உண்டாக்கப்படுவது.
9. தலை மயிர்
10. வலிமையுற
11. அழிவுக்குள்ளாகும் / வடிவம்
12. விருப்பு
14. அமைதியான இயல்புடைய
16. பொருத்தமாக அமைதல்
18. அழுந்தி இருக்குமாறு செய்
19. உணவை மெல்ல உதவுவது
20. நெறிமுறை

## மேலிருந்து கீழ்

1. சாமியார்
2. ஆறு
3. பொறுப்பில் இரு
4. அச்சமடையச் செய்தல்
6. மலைத்தல்
8. இது வரவை விட மிகைத் திருக்கக் கூடாது
10. மதிப்புக்க முடியாமல் தவி
11. மதிப்பிழந்து வெட்கப்பட வேண்டிய நிலை
12. வருந்தித் தவி
13. தகித்தல்
14. (முயன்று முடியாததை)நிறைவேற்றல்
15. திரும்பவந்து சேர்தல் / திரும்பிவருதல்
17. சிறையில் இருப்பவன்
18. முரசு / தோல் கருவி / மேளம்

சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 589 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் முறை மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:

**1 ஆம் பரிசு**
**ஞா.திருமுதல்வி,**
தரம் 9 கே,
வ/கனகராயன் குளம், மகா வித்தி,
கனகராயன்குளம்

**2 ஆம் பரிசு**
**ச.அபிநயன்,**
யா/திக்கம் சித்தி விநாயகர் வித்தி.

**3 ஆம் பரிசு**
**பா.அபிநயன்,**
தரம் 9ஏ,
யாழ்.மத்திய கல்லூரி, யாழ்ப்பாணம்.

**4 ஆம் பரிசு**
**உ.உஷா,**
யா/பாஷையூர், சென் அன்ரனீஸ்
றோ.க.மகளிர் வித்தியாலயம்.

**5 ஆம் பரிசு**
**செல்வன் ஸ்ரீ லக்ஷன்,**
தரம் 12 பி,
யாழ்.மத்திய கல்லூரி, யாழ்ப்பாணம்.

## பாராட்டுப் பெறுவோர்

**சி.இராசரத்தினம்,**
இல.1001 திருநகர் தெற்கு,
கிளிநொச்சி.

**ச.வசந்தராணி,**
நெடுங்காடு,
காரைநகர்.

**செ.உதயம்,**
பிராந்திய மருந்து வழங்கல் பிரிவு,
முள்ளியவளை, முல்லைத்தீவு.

**சொற்சிலம்பம் போட்டி 589 இல் பரிசு பெற்றோருக்கான கொடுப்பனவுக் காசோலைகள் காலக்கிரமத்தில் அவரவர்களது விலாசத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நித்திய சுகம் 441

உடலே கோயில்

# உலக இதய மீளியக்க தினம்

## உற்றார் யாருளரோ உயிர்கொண்டு போகும் பொழுது

■ மருத்துவர். வசுமதி தேவநேசன்

இருதய மீள் இயக்கம் எனும் போது இதய மாற்று அறுவை சிகிச்சை உங்கள் எண்ணங்களின் தோன்றுவது கண் கூடு. ஆனால் இந்த இருதய மீள் இயக்கம் என்பது உங்கள் அண்மையில் உள்ளவர் ஒருவருக்கு எதிர்பாராத நேரத்தில் (அதாவது மருத்துவமனைக்கு எடுத்துச் செல்ல முதல்) இதயத்துடிப்பு நிறுத்தப்படுமானால் அவர் இறப்பு நிலைக்கு செல்வதற்கு முதல் அவருக்கு அளிக்கும் சிகிச்சை முறையாகும். இது பெரும்பாலான நோயாளர்களுக்கு வைத்தியசாலையில் சி.பி. ஆர் என்ற சொற்பதத்தால் வழங்கப்படும் ஒரு அவசர சிகிச்சையாகும். இந்த நிலைக்கு அதாவது இதயத் துடிப்பு நின்ற பின்னும் எழுந்து நடமாடி எங்கள் மத்தியில் உலாவிக் கொண்டிருக்கும் எம்மவர் இன்று பலர் உள்ளனர். இதற்கு மிக முக்கிய காரணம் அவர்களுக்குத் தேவையான நேரத்தில் தகுதியான மீளளிப்புச் சிகிச்சை வைத்தியசாலைகளில் நடைபெறுவதால் மட்டுமே ஆகும்.

**உங்களாலும் முடியும்**

ஆனால் வைத்தியசாலைக்குப் போக முன்னர் இதயம் துடிக்க மறந்தால், மறுத்தால் வைத்தியரோ, துணை வைத்திய உத்தியோகத்தரோ உங்கள் பக்கத்தில் இல்லாவிட்டாலும் உங்களால் அந்த நோயாளிக்கு நிச்சயமாக உதவ முடியும். உற்றார் யார் உள்ளாரோ அவரால் நிச்சயமாக மிகவும் அத்தியாவசியமான உயிர் காக்கும் இருதய மீளளிப்பு சிகிச்சையை உடனடியாக ஆரம்பிக்க முடியும்.

இதற்கு ஒரு நல்லெண்ணம் கொண்ட உதவும் மனப்பான்மை பண்மைக் கொண்ட ஒரு மனித உள்ளம் மட்டும் போதுமானது. அத்துடன் அது பற்றிய விழிப்புணர்வும் சில பயிற்சிகளையம் எடுத்திருந்தால் நோயாளியை வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லும் வரை அல்லது வைத்தியரோ துணை வைத்திய அதிகாரிகளோ உங்கள் உதவிக்கு வரும் வரை நோயாளியை சாவு நிலைக்குச் செல்லாமல் தடுத்தாட்கொள்ள முடியும்.



**செய்ய வேண்டியவை**

இதயத் துடிப்பு நின்றால் உடலுக்குத் தேவையான குருதி ஓட்டம் உடனடியாகத் தடைப்பட்டுவிடும். இதனால் உடலில் உள்ள உறுப்புகள் தேவையான ஒட்சிசனும் போசாக்கும் இல்லாமல் இறப்பு நிலைக்குத் தள்ளப்பட்டுவிடும். முக்கியமாக மூளைக்கு 3 - 4 நிமிடங்கள் குருதி ஓட்டம் இல்லாவிட்டால் மீளியங்க முடியாத நிலைக்கு தள்ளப்பட்டு விடும். குறித்த 3-4 நிமிடங்களுக்குள் வைத்தியசாலைக்கு நோயாளியைக் கொண்டு செல்வது இந்த இலத்திரனியல் யுகத்திலும் முடியாத ஒன்று தான். இதற்கு நீங்கள் செய்ய வேண்டியது இதயம் மீளியங்கத் தொடங்கும் வரை அவரது இதயத்தை வெளிப்புறமாக அமத்தி குருதி ஓட்டத்தை ஏற்படச் செய்வதும் சுவாசப் பாதையைச் சீர் செய்து காற்றில் இருந்து தேவையான ஒட்சிசனைக் கிடைக்கச் செய்வதும் தான். இதற்கான பயிற்சி நெறிகள் உலகெங்கிலும் உற்றார் இருதய மீளளிப்புப் பயிற்சி என்னும் பெயரில் வழங்கப்பட்டு வருகின்றது.

வட மாகாணத்திலும் இது பல்வேறு பிரிவினரின் உதவியுடன் ஒத்தாசையுடனும் உணர்வழியியல் மருத்துவர்களின் வழிகாட்டலின் கீழ் அர்ப்பணிப்பான சேவைகளாலும் பல இடங்களிலும் பயிற்றுவிக்கப்பட்டு வருகின்றது. ஏற்கனவே பல பாடசாலைகளிலும் இது நடத்தப்பட்டுக் கொண்டு இருக்கிறது. மேலும் பல பொதுமக்களின் ஒத்துழைப்பைப் பெறும் பொருட்டு ஒரு விழிப்புணர்வு தினமாக பல பயிற்சி முகாம்கள் அமைக்கப்பட்டு பயிற்சிகள் வழங்கப்படுகின்றது.

யாழ்ப்பாணத்தில் இந்தமுறை யாழ். போதனா வைத்தியசாலைக்கு முன்பாக உள்ள கார்கில்ஸ் கட்டடத் தொகுதியின் முதலாம் தளத்தில் 16ஆம் திகதியன்று காலை 8 மணி தொடக்கம் மாலை 3 மணி வரை பயிற்சி முகாம் நடைபெறும். ஆர்வமுள்ளவர்கள் மட்டுமல்லாமல் அனைவரையும் கலந்து கொண்டு உயிர் காக்கும் பணியில் உங்களின் பங்கினைப் பெருக்கிக் கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர்.

*கட்டுரையாளர்: உணர்வழியியல், சிறப்பு மருத்துவ நிபுணர்.*

> இதயத் துடிப்பு நின்றால் உடலுக்குத் தேவையான குருதி ஓட்டம் உடனடியாகத் தடைப்பட்டுவிடும். இதனால் உடலில் உள்ள உறுப்புகள் தேவையான ஒட்சிசனும் போசாக்கும் இல்லாமல் இறப்பு நிலைக்குத் தள்ளப்பட்டுவிடும். முக்கியமாக மூளைக்கு 3 அல்லது 4 நிமிடங்களுக்குள் வைத்தியசாலைக்கு நோயாளியைக் கொண்டு செல்வது இந்த இலத்திரனியல் யுகத்திலும் முடியாத ஒன்று தான்.



1. சோதித்தல்

- பாதிக்கப்பட்டவரை அணுகுவதற்கு உங்களுக்கு பாதுகாப்பு இருக்கின்றதா என உறுதிசெய்யவும்.
- பாதிக்கப்பட்டவர் நினைவுடன் இருக்கின்றாரா என சோதித்துப்பார்க்கவும்.
- தலையை நிமிர்த்துங்கள், நாடியைப் பிடித்து உயர்த்துங்கள், சுவாசம் இருக்கின்றதா எனச் சோதிக்கவும்.
- சுவாசம் இல்லாவிடின் அல்லது சுவாசம் அசாதாரணமாக இருப்பின் இருதய சுவாச மீள் இயக்கும் செயல் அவசியம்



2. அழைத்தல்

- அவசர மருத்துவ சேவையினை அழையுங்கள், அறிவுறுத்தலின்படி செயற்படுங்கள்.
- வேறுயாராவது அழைப்பை ஏற்படுத்த இருந்தால், அவரை அழைப்பை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுங்கள்.
- இதயத்துக்கு அழுத்தம் கொடுப்பது உயிர்வாழ்வதற்கு மிகவும் அவசியம்.
- இருதயத்துக்கு அழுத்தம் கொடுப்பதை தாமதிக்கவோ அல்லது இடைநிறுத்தவோ வேண்டாம்.



3. அழுத்தம் கொடுத்தல்

- இரு கைகளையும் நடு நெஞ்சின் மேல் வையுங்கள்.
- நெஞ்சை 5 - 6 cm அளவு கீழே செல்லக்கூடியதாகவும், ஒரு நிமிடத்துக்கு 100 - 120 தடவயும் அழுத்துங்கள்.
- நீங்கள் வாயினால் செயற்கை சுவாசம் கொடுக்க முடியுமானால் ஒவ்வொரு 30 இருதய அழுத்தத்திற்குப் பிறகு 2 தடவை செயற்கை சுவாசம் கொடுங்கள் அல்லது தொடர்ந்து இருதயத்திற்கு அழுத்தத்தைக் கொடுங்கள்.
- கடினமாகவும் விரைவாகவும் அழுத்தத்தைப் பிரயோகிக்கவும். ஏதாவது தீங்கு விளையும் எனக் கவலையடையத் தேவையில்லை.
- தானியங்கி இருதயத் துடிப்பு ஒழுங்காக்கி கிடைக்குமானால் உடனடியாக அதனை இயங்கச் செய்து அதன் அறிவுறுத்தலின்படி செய்யவும்.
- அவசர மருத்துவப் பிரிவு வந்தவுடன் அவர்கள் உங்களை நிறுத்தவும் என சொல்லும் வரை தொடர்ந்து இருதய அழுத்தத்தை கொடுக்கவும்.
- நன்றாகச் செயற்பட்டு உள் [illegible] காப்பாற்றுவதற்கு ஏதாவது [illegible] இருப்பதை விட எப்பொழுதும் மேன்மையானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை

# புனித பிரான்சிஸ் அசிசி

## இத்தாலி அற்புத மறைபணியாளர்

இத்தாலியின் மறைபணியாளர் பிரான்சிஸ் அசிசி பற்றி இந்த ஆக்கம் பேசுகிறது. இளைஞராக இருந்தபோது பிரான்சிஸுக்கு பிரெஞ்சு மொழியில் கவிஞராக வேண்டும் என்ற ஆசை இருந்ததாகச் சிலர் கூறுகின்றனர். அசிசியில் புனித ஜோர்ஜ் பங்குக்கோவிலில் கல்வி பயின்றார். ஆனால் அவர் படிப்பில் மிகுந்த ஆர்வம் காட்டவில்லை, தம் தந்தையின் தொழிலாகிய வாணிகத்தில் மனதார ஈடுபடவுமில்லை. இவரது வரலாற்றை எழுதியவர்கள் இவரது பகட்டான உடைகள், பணக்கார நண்பர்கள், தெருச் சண்டைகள், உலகப் போக்கை விரும்பும் இயல்பு ஆகியவை பற்றிக் குறிப்பிட்டிருக்கின்றனர். மேல்தட்டு இளைஞர்களோடு சுற்றித் திரிவதிலும், வீர சாகசம் புரிவதிலும் ஆர்வம் காட்டினார். நடுத்தர வர்க்கமாகிய வணிகர் பிரிவைச் சார்ந்த பிரான்சிஸ் உயர்குடி மக்களைப் போல ஆடம்பர வாழ்க்கை நடத்த விருப்பமுடையவராய் இருந்தார்.

**பிரான்சிஸின் மனமாற்றம்**

1201ஆம் ஆண்டில் பெரூஜியா நகருக்கு எதிராகப் போரிடுவதற்காக பிரான்சிஸ் படையில் சேர்ந்தார். காலெஸ்ட்ராடாவில் நடந்த போரில் எதிரிகளிடம் பிடிபட்ட இவர் ஓராண்டு கைதியாக இருக்க நேரிட்டது. இந்த அனுபவத்தில் இருந்தே படிப்படியாக அவருக்கு ஆன்மிக மாற்றம் ஏற்பட்டதாகத் தெரிகிறது. எனினும் 1203ஆம் ஆண்டில் அசிசிக்குத் திரும்பிய பிரான்சிஸ் மீண்டும் தனது பழைய வாழ்க்கை முறைக்கே திரும்பினார். 1205ஆம் ஆண்டிலும் அவருக்கு ஓர் ஆன்மிக அனுபவம் கிடைத்ததாகத் தெரிகிறது. அதன்பின், பிரான்சிஸ் தம் பழைய வாழ்க்கை முறையை மாற்றத் தொடங்கினார்.

**துறவற சபைகளை நிறுவுதல்**

பின்னர் பிரான்சிஸ் உரோமை நகருக்குத் திருப்பயணமாகச் சென்றார். அங்கு புனித பேதுரு பேராலயத்தின் அருகே பிச்சையெடுத்துக் கொண்டு இருந்தவர்களோடு தாமும் போய் அமர்ந்துகொண்டு, ஒரு பிச்சைக்காரராக மாறினார். இந்த அனுபவம் அவருக்கு ஏழ்மையின் பொருளை ஆழ்ந்த விதத்தில் உணர்த்திற்று. வாழ்நாள் முழுவதும் ஏழ்மையிலேயே கழிக்க வேண்டும் என்று பிரான்சிஸ் உறுதி பூண்டார்.

பிரான்சிஸ் வீடு திரும்பியதும், அசிசி நகரின் தெருக்களில் இறங்கி நடந்து சென்று, இயேசுவைப் பற்றிப் போதிக்கலானார். அவர் கூறியதைக் கேட்டு ஒரு சிலர் அவருக்குச் சீடர்களாக மாறினர். 1209ஆம் ஆண்டு 12 இளையோருடன், 'சிறு சகோதரர்கள்' என்ற சபையை ஆரம்பித்தார். பிரான்சிஸ் திருத்தந்தை மூன்றாம் இனோசன்டை அணுகித் தம் குழுவை ஒரு துறவற சபையாக அங்கீகரித்து ஏற்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். திருத்தந்தை 1210ஆம் ஆண்டில் பிரான்சிஸ்கன் சபைக்கு அதிகாரப்பூர்வமான இசைவு வழங்கினார்.

பின்னர், பிரான்சிஸ் 1212ஆம் ஆண்டில் கிளாரா என்ற பெண்மணியோடு சேர்ந்து பெண்களுக்கான ஒரு துறவற சபையையும், 1221ஆம் ஆண்டில் மேலும் தவ முயற்சிகளை மேற்கொள்ளும் பொதுநிலை சகோதர சகோதரிகளுக்கென்று மூன்றாம் சபை என்று அழைக்கப்பட்ட ஒரு அமைப்பையும் ஆரம்பித்தார்.

**சிலுவைப் போரில் பங்காற்றுதல்**

திருத்தந்தை மூன்றாம் இனோசெண்ட் விடுத்த அழைப்பை ஏற்று, பிரான்சிஸ் 1219ஆம் ஆண்டில் சிலுவைப் போர் வீரர்களோடு சேர்ந்து எகிப்து செல்லப் பயணமானார். அங்கு இயேசு பிறந்து வளர்ந்து இறந்த திருநாட்டை மீட்க போரிடும்போது இறக்க நேர்ந்தால் தம் கிறிஸ்தவ நம்பிக்கையின் பொருட்டு மறைச்சாட்சியாக உயிர்துறக்கலாம் என்னும் எதிர்பார்ப்பு அவரிடம் இருந்தது. மேலும், கிறித்தவர்களும் இசுலாமியர்களும் நட்புடன் வாழ்வதற்குப் போர் தவிர வேறு வழிகள் உண்டு என்பதிலும் அவருக்கு நம்பிக்கை இருந்தது.

இதற்கிடையில் பிரான்சிஸ் சபை மிகப் பெரியதாக வளர்ந்தது. எனவே சபையை ஒழுங்கமைப்பதற்காகப் பிரான்சிஸ் முயற்சிகள் மேற்கொண்டார். சபையின் ஒழுங்குகள் திருத்தந்தையால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பின்னர், பிரான்சிஸ் நிர்வாகப் பொறுப்பில் அதிகம் ஈடுபடவில்லை.



**தொழுநோயாளரை அரவணைத்த நிகழ்ச்சி**

உலகப் போக்கை விடுத்து ஆன்மிக வாழ்வை மேற்கொள்ளத் துணிந்த பிரான்சிஸின் வாழ்வில் நடந்த ஒரு நிகழ்ச்சியைப் பல வரலாற்று ஆசிரியர்களும் குறிப்பிடுகின்றனர். அது பிரான்சிஸ் ஏழைகளிடமும் சமுதாயத்தால் புறக்கணிக்கப்பட்டோர்களிடமும் காட்டிய அன்பை எடுத்துரைக்கிறது.

ஒருநாள் பிரான்சிஸ் அசிசி பள்ளத்தாக்கில் குதிரைமீது பயணமாகச் சென்றுகொண்டிருந்தார். அப்போது உடலெல்லாம் புண் நிறைந்த ஒரு தொழுநோயாளியைத் தொலைவில் கண்டார். செல்வத்தில் பிறந்து வீர சாகசங்கள் புரிவதில் ஆர்வம் கொண்டு வளர்ந்த பிரான்சீசுக்கு தொழுநோய் என்றாலே வெறுப்பு. அருவருக்கத் தக்க அந்த நோய் யாரைத் தொற்றியதோ அவர்களை அணுகவே அவருக்குப் பிடிக்காமல் இருந்தது. தமக்கு இயல்பாக இருந்த உணர்வுகளை அடக்கிக் கொண்டு பிரான்சிஸ் குதிரையிலிருந்து வேகமாக இறங்கினார். ஓடிச் சென்று அந்தத் தொழுநோயாளியைக் கட்டிப் பிடித்து அரவணைத்து முத்தமிட்டார்.

**பிரான்சிஸ் தாம் உடுத்திருந்த உடையையும் துறந்த நிகழ்ச்சி**

பிரான்சிஸின் தந்தை தம் மகன் மனம்போன போக்கில் போவதாக உணர்ந்ததால் தமியானோ கோவிலில் அவரைச் சந்தித்து உடனடியாக வீட்டுக்குத் திரும்பும்படி பணித்தார். தாம் சொன்னதுபோல் செய்யாவிட்டால் பிரான்சிஸ் தம் வாரிசுச் சொத்தை இழக்க வேண்டிவரும் என்று மிரட்டினார். அதோடு தம்மிடமிருந்து எடுத்துக் கொண்ட பணத்தையும் திருப்பித் தர வேண்டும் என்று கேட்டார். அதற்குப் பதில்மொழியாக பிரான்சிஸ் தமக்குத் தந்தையின் சொத்து தேவையில்லை என்று கூறவே, நகர அதிகாரிகளுக்கு முன்னிலையில் நீதிமன்றத்திடம் கொண்டுபோவதாகத் தந்தை கூறினார்.

ஆனால், பிரான்சிசு தமது சொத்தைத் துறந்துவிட்டு, தம்மைக் கடவுளின் பணிக்கு அர்ப்பணித்துவிட்டதால் நகர அதிகாரிகளுக்கு முன் போகமுடியாது என்று மறுத்துவிட்டார். எனவே வழக்கு அசிசி ஆயரின் நீதிமன்றத்தின் முன் கொண்டு வரப்பட்டது.

அசிசி நகரின் ஆயர் குயிதோ பிரான்சிசிடம் தந்தைக்குரிய பணத்தைத் திருப்பிக் கொடுக்கும்படி கூறினார். தவறான வழியில் பெறப்பட்ட பணம் கடவுளுக்கோ திருச்சபைக்கோ தேவையில்லை என்று ஆயர் கூறியதும் பிரான்சிஸ் பணத்தைத் தந்தையிடம் திருப்பிக் கொடுத்துவிட்டார்.

பின் பிரான்சிஸ் தாம் உடுத்திருந்த ஆடையைக் களைந்து தம் தந்தையின் முன்னிலையில் அதை வைத்துவிட்டு இதோ என் உடையையும் திருப்பிக் கொடுத்துவிடுகிறேன் என்று கூறினார். இதுவரை நான் பியெத்ரோ பெர்னார்டோனே என்பவரை அப்பா என்று அழைத்து வந்தேன். இன்றிலிருந்து எனக்கு அப்பா வானகத்திலிருக்கும் நம் தந்தையே என்றுரைத்து அனைவர் முன்னிலையிலும் நிர்வாணமாக நின்றார். அதைக் கண்ட ஆயர் குயிதோ தம் மேலாடையை எடுத்துப் பிரான்சீசிடம் கொடுத்துப் போர்த்திக்கொள்ளச் சொன்னார். பின்னர் சாதாரண ஒரு ஆடை பிரான்சிஸுக்குக் கொடுக்கப்பட்டது. அவர் அதை வாங்கி அதில் சிலுவை அடையாளத்தை வரைந்து போர்த்திக் கொண்டார்.

**இறப்பு**

தாம் இறப்பதற்கு முந்தின நாள் மாலை நேரம் பிரான்சிஸ் தம் சகோதரர்களிடம் அப்பம் கொண்டுவரச் சொன்னார். அவரோடு கூட இருந்த சகோதரர்கள் ஒவ்வொருவருக்கும் அப்பத்திலிருந்து ஒரு சிறு துண்டைப் பகிர்ந்து கொடுத்தார். இயேசு தாம் துன்பங்கள் அனுபவித்து, சிலுவையில் அறையுண்டு உயிர்துறந்தற்கு முந்தின நாள் தம் சீடர்களோடு பந்தியமர்ந்து, அவர்களோடு அப்பத்தைப் பகிர்ந்துகொண்டது போலவே பிரான்சிசும் செய்ய விரும்பினார். அப்பத்தைப் பகிர்ந்துகொண்டதும் பிரான்சிசு தம் சகோதரர்கள் ஒவ்வொருவருக்கும் இறுதி ஆசி வழங்கினார்.

பிரான்சிசு இறந்த இரண்டே ஆண்டுகளில் அவர்தம் நெருங்கிய நண்பராயிருந்த திருத்தந்தை ஒன்பதாம் கிரகோரி இவருக்குப் புனிதர் பட்டம் வழங்கினார்.

**புனிதர் பட்டம்**

பிரான்சிஸ் இறந்து இரண்டு ஆண்டுகள் முடிவதற்கு முன்னரே அவருக்குப் புனிதர் பட்டம் வழங்கப்பட்டது. அப்பட்டத்தை அளித்தவர் திருத்தந்தை ஒன்பதாம் கிரகோரி ஆவார். அவர் கர்தினாலாக இருக்கும்போதே பிரான்சிசின் நெருங்கிய நண்பராக இருந்ததோடு, பிரான்சிஸ்கு சபையின் மேற்பார்வையாளராகவும் செயல்பட்டார்.

1228, ஒக்டோபர் 16ஆம் நாள் பிரான்சிசுக்குப் புனிதர் பட்டம் அளிக்கப்பட்டது. அதற்கு ஓராண்டுக்கு முன்னரே, பிரான்சிசுக்கு வணக்கம் செலுத்துவதற்காக ஒரு பெரிய கோவில் கட்டப்போவதாகவும், அதற்குக் கிறித்தவர்கள் நன்கொடை அளிக்கவேண்டும்என்றும்கோரிக்கைவிடுத்து, திருத்தந்தை மடல் எழுதினார். பிரான்சிசுக்குப் புனிதர் பட்டம் அளித்த மறுநாள் அவருக்காகக் கட்டப்படவிருந்த கோவிலுக்குத் திருத்தந்தை அடிக்கல் நாட்டினார்.


**அசிசி நகருக்கு திருப்பயணம் செல்லல்**

வரலாற்றிலேயே முதன்முதலாக ஒரு திருத்தந்தை 'பிரான்சிசு' என்னும் பெயரைத் தேர்ந்தெடுத்துள்ளார். 2013, மார்ச்சு 13ஆம் நாள் கத்தோலிக்க திருச்சபையின் 266ஆம் திருத்தந்தையாகப் பொறுப்பேற்ற அர்செந்தீனிய நாட்டவரான பெர்கோலியோ, பிரான்சிசு என்னும் பெயரைத் தம் பெயராக ஏற்று, புனித பிரான்சிசைப் போன்று எளிய வாழ்வை மேற்கொண்டு, திருச்சபையும் ஏழ்மையைத் தழுவி ஏழைகளுக்கு ஆதரவாகச் செயல்பட வேண்டும் என்று வலியுறுத்தி வருகின்றார்.

திருத்தந்தை பிரான்சிஸ் தமது பெயர்கொண்ட புனிதரான அசிசியின் பிரான்சீஸ் பிறந்து, வளர்ந்து, பணி செய்து, இறந்த இடமாகிய அசிசி நகருக்கு, அப்புனிதரின் திருவிழாவான ஒக்டோபர் 4ஆம் நாள் திருப்பயணமாகச் சென்றார். அங்கு, திருத்தந்தை தம் புனிதரின் வாழ்வோடு தொடர்புடைய அனைத்து இடங்களுக்கும் சென்று, மக்களைச் சந்தித்து உரையாடி, திருப்பலி நிகழ்த்தி, இறைவேண்டல் செய்து, மறையுரைகள் ஆற்றினார்.

புனித பிரான்சிசு தொழுநோயாளர் ஒருவரை அரவணைத்தது போன்று திருத்தந்தை பிரான்சிசும் உடல் உள ஊனமுற்ற இளையோரை சந்தித்து, ஒருவர் ஒருவராகக் கட்டித் தழுவி, ஆசி வழங்கினார். கத்தோலிக்க அறநிலையம் நடத்துகின்ற ஏழையர் உணவகம் சென்று, அங்கு ஏழைகளோடு அமர்ந்து திருத்தந்தை உணவு உட்கொண்டார். பின்னர், புனித பிரான்சிஸ் தாம் உடுத்தியிருந்த ஆடையைக் கூட கழற்றிக் கொடுத்துவிட்டு இயேசுவைப் பின்செல்ல முடிவெடுத்த இடத்தில் திருத்தந்தை உரையாற்றியபோது, புனித பிரான்சிசைப் போன்று திருச்சபையும் ஏழ்மையைக் கடைப்பிடித்து, ஏழைகளுக்கு ஆதரவாகச் செயல்பட வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







ES Printers
357, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 492 7471, 021 492 7472 esprintersjaffna@gmail.com




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்



### திருமதி செல்லம்மா சிவலிங்கம்

கோப்பாயைப் பிறப்பிடமாகவும், நல்லூர் முத்தவிநாயகர் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்லம்மா சிவலிங்கம் நேற்று (12.10.2019) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதி - சின்னாச்சி தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சபாபதி - தெய்வானை தம்பதிகளின் அன்பு மருமகளும், சிவலிங்கத்தின் அன்பு மனைவியும், சந்திராதேவியின் அன்பு சகோதரியும் திலீப்குமார் (பிரான்ஸ்), பாலசரஸ்வதி (பிரான்ஸ்), கமலகுமாரி (பிரான்ஸ்), திகழ்மதி (நல்லூர்), லோகேஸ்வரன் (பிரான்ஸ்), ரஜனி (பிரான்ஸ்), சிவகுமார் (பிரான்ஸ் ) ஆகியோரின் பாசமிகு தாயாரும், விஜயபாஸ்கரன் (பிரான்ஸ்), ஸ்ரீதரன் (பிரான்ஸ்),விமலன் (நல்லூர்), வசந்தி (பிரான்ஸ்), சுதர்சினி (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், தனுசன் (பிரான்ஸ்), நிறோசன் (பிரான்ஸ்), குகதீபன் (பிரான்ஸ்), காயத்திரி (பிரான்ஸ்), சர்மிதா (நல்லூர்), தர்மிதன் (பிரான்ஸ்), பிரனித் (பிரான்ஸ்), நிசாந்தன் (பிரான்ஸ்), தீபிகா (பிரான்ஸ்), பிரனியா (பிரான்ஸ்), பிரனிதா (நல்லூர்), சானுகா (பிரான்ஸ்), அபிராமிநிதா (பிரான்ஸ்), பிருன்சன் (பிரான்ஸ்), தர்ஷபவன் (நல்லூர்), சிந்திசை (பிரான்ஸ்), சுவிதன் (பிரான்ஸ்), காலஞ்சென்ற நிதர்சினி (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், அஸ்லே (பிரான்ஸ்), அறோன் (பிரான்ஸ்) ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.10.2019) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரிய்யக்காக செம்மணி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.66/4,
மூத்தவிநாயகர் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

(CS/28631)
(11,17)

தகவல்:
குடும்பத்தினர்.

021 222 1577, 077 656 9059

## மரண அறிவித்தல்

### திருமதி விஜயலட்சுமி ஆனந்தசோதி

மலர்வு
12
-
08
-
1955



உதிர்வு
10
-
10
-
2019

பள்ளம்புலம் சரவணையைப் பிறப்பிடமாகவும் ஆடியபாதம் வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி விஜயலட்சுமி ஆனந்தசோதி 10.10.2019 வியாழக்கிழமை காலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை - பாலலோசனி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற தம்பிப்பிள்ளை, கமலபூரணத்தின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான நல்லையா - இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் நல்லையா ஆனந்தசோதியின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான வாசுகி, வாகீசன் மற்றும் பிரகீசன், வானுஜி, கஜனி ஆகியோரின் பாசமிகு தாயாரும் சிவகஜனின் அன்பு மாமியாரும் ஸ்ரீவர்மனின் பாசமிகு பேர்த்தியும் நாகேஸ்வரி, காலஞ்சென்ற பரஞ்சோதி மற்றும் இராஜேஸ்வரி, சிவசோதி, காலஞ்சென்ற அருட்சோதி மற்றும் ஞானபண்டிதசோதி, ஈஸ்வரகௌரி, சிவகாமஈஸ்வரி, திருவருட்செல்வம் ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.10.2019) ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சரவணை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்,
(கணவர்) 0773362640

ஆடியபாதம் வீதி,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில் (CS/28653)

## மரண அறிவித்தல்



### சிங்கராயர் தார்சீசியஸ்

**(ஓய்வுபெற்ற அதிபர் (யா/புனித மரியாள் வித்தியாலயம் OLR)**

யாழ்ப்பாணம் குருநகரை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சிங்கராயர் தார்சீசியஸ் 11.10.2019 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஜோண் சிங்கராயர் - மரிய சலோமை தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான வைரவப்பிள்ளை - மகேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும், லீலாவதியின் (லீலா) அன்புக் கணவரும், சொபியாவதனி (ஓய்வுபெற்ற ஆசிரியை), ஆனந் (நோர்வே), நிஷாந்தினி, விமல் (vvmart and construction உரிமையாளர்), தயானந் (பிரான்ஸ்), அருட்தந்தை நிரூபன் (ஜேர்மனி, ஆன்மீக பணியக இயக்குனர்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஜோர்ஜ் (சுவிஸ்), ஜேன் பாமினி (நோர்வே), ஜொணி எல்மோ (பிரான்ஸ்), ஜெயந்தினி, லக்ஷினி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும், டொனால்ட் றீகன் - பிரஷாந்தி (சுண்டிக்குளி மகளிர் கல்லூரி ஆசிரியை, கோப்பாய் ஆசிரியர் கலாசாலை), கனிஷியோ-றொஷேல் (மொறட்டுவ பல்கலைக்கழக நான்காம் வருட மாணவி), ஏஞ்சலா (பிரான்ஸ்), நிரஞ்சலா (பிரான்ஸ்), கிஷான் (புனித பத்திரிசியார் கல்லூரி மாணவன்), கவின் (நோர்வே), சஞ்ஜெய் (பிரான்ஸ்), பிரவின் (நோர்வே), அஜய் (பிரான்ஸ்), மெல்வின் (நோர்வே) ஆகியோரின் அன்புப் பேரனும், திரேசம்மா, லூத்தம்மா, காலஞ்சென்றவர்களான யூலியானா, கீதபொன்கலன், மேரி ஜோசப் ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்றவர்களான அல்வினஸ், கிறிஸ்ரி மற்றும் மரியநாயகம், மரிய டீனா காமலின், ஞானமலர், பத்மராணி, சண்முகராஜா, சிவானந்தராஜா, செல்வராணி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதி நிகழ்வுகள் நாளை (14.10.2019) திங்கட்கிழமை பி.ப 3.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, அதனைத் தொடர்ந்து பி.ப 3.30 மணிக்கு தூய யாகப்பர் ஆலயத்தில் (குருநகர்) இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ள்வும்.

171, வேம்படி வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்: குடும்பத்தினர்.
அருட்தந்தை நிரூபன் தார்சீசியஸ்

தொடர்புகளுக்கு: விவியன்(விமல்) 0775552142, நிரூபன்: 0776099091

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி



மண்ணுலகில் 03 . 01 . 1923

விண்ணுலகில் 13 . 10 . 2018

### அமரர் சின்னப்பெடி செல்லையா

ஓராண்டு என்ன பல ஆண்டுகள் சென்றாலும்
மறைந்திடுமா எங்கள் நெஞ்சம்

வானத்திலிருந்து மின்னலென உதித்திடு ஐயா
எங்கள் இல்லம் விரைந்துவிடு
உங்கள் புன்னகை முகம் காண ஏங்குகிறோம்

கண்ணீர் விளக்கேற்றி
மலர்தூவி வணங்குகின்றோம்.

ஓம் சாந்தி ! சாந்தி !!!

சண்டிலிப்பாய் மத்தி,
சண்டிலிப்பாய்.

குடும்பத்தினர்.

(CS-28595)(4.17)

## O/L யில் 5 S தகைமையுடன்,

மருத்துவ துறையில்

## நீங்களும் ஒரு தாதி (Nurse) ஆகலாம்

Hotline : 071 0770770
071 7140000

இதோ !!!

அரிய சந்தர்ப்பத்தை உங்களுக்காக

அய்வா தாதியர் பாடசாலை வழங்குகின்றது

உடனடியாக விண்ணப்பியுங்கள்



16 தொடக்கம் 35 வயதுக்கு உட்பட்ட
ஆண், பெண் இரு பாலாரும் விண்ணப்பிக்கலாம்

சர்வதேச அங்கீகாரம் பெற்ற
சான்றிதழ் வழங்கப்படுவதுடன் சிறந்த
சம்பளத்துடன் உறுதியான வேலை
வாய்ப்பும் எங்களினால் பெற்றுத்தரப்படும்

வெளிநாட்டு வேலை வாய்ப்பு
பணியகத்தால் உறுதிப்படுத்தக்கூடிய
சான்றிதழ்

TVEC

Foreign Ministry
of Sri Lanka

தொடர்புகளுக்கு........

அய்வா தாதியர் பாடசாலை

இல. 154, A/01, நாவலர் வீதி
யாழ்ப்பாணம்.

36/1, 38/1, 2ம் குறுக்கு வீதி,
வவுனியா
071 8722351

070 2705370 - 071 8722350 - 071 8722352


## சிறிநதியா

## வாடிக்கையாளர்களுக்கு விசேட செய்தி

NSR திருமண மண்டபம் மற்றும் நடராஜா பரமேஸ்வரி
ஆகிய திருமண மண்டபங்களில் நிகழ்வுகளை நடாத்த விசேட விலைக்கழிவுகள் வழங்க
நிர்வாகம் தீர்மானித்துள்ளது என்பதனை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

## NSR
WEDDING HALL & ROOMS

No. 01, Stanley Road Junction, Jaffna. Tel: 021 222 4452 / 021 221 7786





இல.01, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே - 021 222 4452 | 021 221 1332,
021 221 7786 | 021 222 2709

## நடராஜா பரமேஸ்வரி
திருமண மண்டபம்





465/26, பருத்தித்துறை வீதி,
நல்லூர், (மனோன்மணி அம்மன்
ஆலயம் அருகாமையில்)
தொ.பே - 021 222 1662 |
021 222 2709

எமது வாடிக்கையாளர்களே!
2020 ஆம் ஆண்டுக்கான முற்பதிவுகள் ஆரம்பமாகியுள்ளதால்.
உடன் உங்கள் முற்பதிவுகளை மேற்கொண்டு விசேட விலைக்
கழிவுகளையும், சலுகைகளையும் பெற்றுக்கொள்ளுங்கள்.

முற்பதிவுகளுக்கு முந்துங்கள்

விவரங்களுக்கு:
077 6417 679

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துப்பாக்கி...

யில் அவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர் பொன்னகர், துணுக்காயைச் சேர்ந்தவர் என்றும், 31 வயதுடையவர் என்றும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

கைது செய்யப்பட்டவரின் விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும், அவர் நீதிமன்றில் முற்படுத்தப்படுவார் என்றும் பொலிஸார் குறிப்பிட்டனர். (எ-21)

## யாழ்ப்பாணம்...

மன்ற உறுப்பினர் மாவை சோ. சேனாதிராஜா, நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், சுகாதார போசணை அமைச்சின் செயலாளர் ஆகியோர் இணைந்து திறந்து வைத்தனர்.

நன்கொடையாளர்களும் மதிப்பளிக்கப்பட்டனர். அவர்களுக்குப் பொன்னாடை போர்த்தி, நினைவுச் சின்னங்களும், சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

நிகழ்வில்தமிழ்தேசியகூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா, ஈ.சரவணபவன் ஆகியோரும் முன்னாள் வடமாகாண சபை எதிர்க்கட்சி தலைவர் சின்னத்துரை தவராசா, யாழ். போதனா மருத்துவமனையின் மருத்துவ நிபுணர்கள், தாதியர்கள், வைத்தியர்கள், ஊழியர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (எ-106)


**Hotel வாடகைக்கு உண்டு**

வெள்ளவத்தையில் 10 Rooms (A/C) உடன் இணைந்த குளியலறை தளபாட வசதியுடன் காலி வீதிக்கு முகப்பாக உடனடி வாடகைக்கு விடப்படும்.

**0777 96 7878**

(CS 28542 )(4.17)

**வேலையாள் தேவை**

போட்டோக்கொப்பி / புத்தகக்கடை வேலை தெரிந்த. பழகவிரும்பும் பெண் பிள்ளை தேவை.

தொடர்பு- 077 209 6310, 076 869 6181

**வேலையாள் தேவை**

யாழ்ப்பாணம் குருநகரில் இயங்கிவரும் அழகு சாதனப் பொருட்கள் விற்பனை நிலையத்திற்கு (கடை) விற்பனையாளர் மற்றும் கணினி பதிவாளர் **(Computer Operator)** தேவை.

குறிப்பு :- பெண்கள் மட்டும்

தொடர்புக்கு - 077 1174954

**வேலையாள்கள் தேவை**

யாழ்ப்பாணத்தில் நடைபெறும் கட்டட ஒப்பந்த நிறுவனத்திற்கு பின்வரும் வேலையாள்கள் தேவைப்படுகின்றனர்.

- தொழில்நுட்ப உத்தியோகத்தர்
- மேசன் (1400/= - 1600/=)
- கூலியாள் (1200/= - 1300/=)

தொடர்புக்கு - 077 020 4990

**தாதி உத்தியோகத்தர் தேவை**

எமது வைத்தியசாலைக்கு அரச சேவையில் இளைப்பாறிய பெண்தாதி உத்தியோகத்தர்கள் இருவர் உடனடியாக தேவை. கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.

**கூட்டுறவு வைத்தியசாலை சங்கம்(வ.து)**

**தெல்லிப்பழை- 077 238 0196**

**காணி விற்பனைக்கு உண்டு**

கோவில் வீதி ஓரமாக 5 1/2 பரப்பு காணி உடனடியாக விற்பனைக்கு நல்லூரில் இருந்து 150 m தூரத்தில் அமைந்துள்ளது.

தொடர்புக்கு - 077 227 6173

**Win Creations நிறுவனத்தால் தயாரிக்கப்பட இருக்கும் மச்சி அஜினோவின் "கிட்டி"திரைப்படத்தின் கலைஞர்களுக்கான நேர்முகத்தேர்வு**

இடம் :- 238, திருமறைக்கலாமன்றம், யாழ்ப்பாணம்.

காலம்:- 13.10.2019 (இன்று ஞாயிற்றுக்கிழமை)

நேரம்:- 9.30-2.30

**077 964 8942, 077 506 9418**

**சுப்பர் சிங்கர் இசை நிகழ்ச்சி - யாழ்ப்பாணம், வவுனியா**



ரோஷினி செந்தில் - ராஜலக்ஸ்மி அனிருத்

| | |
|---|---|
| காலம் - ஒக்டோபர் 13th திகதி ஞாயிறு மாலை 3.30<br>இடம் - யாழ்.கே.கே.எஸ்.வீதி (பூநாறி மடம்), செல்வா பெலஸ் (A/C) | காலம் - ஒக்டோபர் 14th திகதி திங்கள் மாலை 6.30<br>இடம் - வவுனியா நகர சபை கலாசார மண்டபம் |

டிக்கட் 500/=,1000/= நிகழ்ச்சி அன்று மண்டபவாசலிலும் பெற்றுக்கொள்ளலாம்

வவுனியா - தொடர்புகளுக்கு - 077 311 1245 / 070 356 8333

யாழ் - தொடர்புகளுக்கு - 077 4718 969 / 071 381 5114

நிகழ்ச்சி ஒருங்கிணைப்பு K.T. பிரசாத்

(C-7794)

# 7 ஆம் ஆண்டு நினைவலைகள்

நல்ல போராட்டத்தைப் போராடினேன் ஓட்டத்தை முடித்தேன் விசுவாசத்தை காத்துக்கொண்டேன் - II தீமோத்தேயு 4.7



நிஜமானதோ 07.11.1994 | நிழலானதோ 13.10.2012

**விஜயச்சந்திரன் டினேஸ்**

(சென்.ஜோன்ஸ் கல்லூரி - 2013 வர்த்தகப்பிரிவு மாணவன்)

**செல்லமகன் டினே!**

எம்மை விட்டுப் பிரிந்து7 ஆண்டுகள் விரைவில்
சென்று விட்டதையா எத்தனை ஆண்டுகள் கடந்தாலும்
எம் செல்ல மகனை மறப்போமா? நீ நடந்த பாதை
யெல்லாம் நெருஞ்சிமுள்ளாய் குத்துதையா
ஈன்ற பொழுதில் பெரிதுவக்கும் தன்மகனை சான்றோன் எனக்
கேட்டதாய் பொய்யா மொழிப் புலவரின் வாக்கிற்கிணங்க உன் தாய்
தந்தையை மகிழ்வில் ஆழ்த்தினாய்
அன்னை கருவறையில் மொட்ட விழ்ந்து உதித்த சூரியனே
ஒரே ஒரு செல்வ மகனாய் அணையாத சுடர்விட்டாய்
அரும்பு மீசை வளரும் போது துள்ளித்திரிந்த பருவங்களும்
உற்றாரும் மற்றாரும் கண்டு போற்றும் உன் கட்டிளமைப் பருவமடா

உன்னைக்காண துடிக்கிறதடா மகனே - எம் கண்கள்
உன் போன்ற பிள்ளைச் செல்வங்களைக் கண்ட போதெல்லாம்
ஓடி வருகிறதடா மகனே உன் நினைவுகள்
உன் தாய் தந்தையரின் ஓலக்குரல் விண்ணிற்கு கேட்கிறதா மகனே

என் செல்ல மகனே பேர் விளங்கவென்று வந்த
பெருமை கொண்டு வந்த மகன் குலம் செழிக்க
வந்த கோமகனே எங்கு சென்றாய் உன்னைப்
பிரிந்து அடி வயிறு நெருப்பெரிய அழுது புலம்புகின்றோம்
நீா வாழ்ந்த வீடோ காடாய் ஆனதையா
யார் கண் பட்டதென்று தெரியவில்லை - கண்ணே
உன் வாலிபப் பருவமதில் கண்மூடினாய் மகனே
விண்ணுலகில் நீ தனிமையென நினைத்தாயோ
உன் தம்பி தங்கையை ... ... அறைத்தாயோ
இ... ... மண்ணில் உம்மைப் பிரிந்தாலும்
விண்ணில் உம்மைக் காண்போம் என்ற நம்பிக்கையில்
மிகுதி நாட்களைக் கழிப்போம் என்ற நம்பிக்கையில்
நீங்காத நினைவாய் என்றும் எம் உ...

48/36. சிவன் பண்ணை வீதி, ...

என்றும் உன் நினைவுடன் பெற்றோர்

# கொக்குவில் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கம் ஒன்றுகூடல் - 2019

கொக்குவில் இந்துக்கல்லூரியில் கல்வி கற்று வெளியேறிய பழையமாணவர்கள் தங்கள் குடும்ப அங்கத்தவர்கள் சகிதம் கல்லூரி நினைவுகளை நினைவுகூரும் முகமாகவும், பழையமாணவர்களிடையே புரிந்துணர்வினை வளர்க்கும் முகமாகவும் கொக்குவில் இந்துக்கல்லூரி பழைய மாணவர் தாய்ச்சங்கத்தினால் ஒன்றுகூடல் நிகழ்வு டிசம்பர் 2019 இல் நடாத்துதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. இந்நிகழ்விற்கு கல்லூரியில் கல்வி கற்று வெளியேறிய சகல பழைய மாணவர்கள் மற்றும் பழைய மாணவர் சங்க அங்கத்தவர்கள் அனைவரும் கலந்துகொள்ள முடியும்

எனவே இந் நிகழ்வில் கலந்துகொள்ள விரும்புகின்ற பழையமாணவர்கள் எதிர்வரும் 10.11.2019 ஆம் திகதிக்கு முன்னராக தங்களது பதிவுகளை பின்வருவோருடன் தொடர்பு கொண்டு மேற்கொள்ளமுடியும் என்பதனை அறியத்தருகின்றோம்.

**தொடர்புகளுக்கு :-**

| | | | |
|---|---|---|---|
| தலைவர் | :- | திரு.ஆ.சத்தியமூர்த்தி | 077 169 8073 |
| செயலாளர் | :- | திரு.வி.தயாபரன் | 077 608 0926 |
| பொருளாளர் | :- | திரு.வ.பிரபாகரன் | 077 605 1245 |
| கல்லூரியில் | :- | பாடசாலை நேரத்தில் அலுவலகத்தில் | |

**முகப்புத்தக முகவரி :- khc-osa Jaffna**

**இணையத்தள முகவரி :- www.khcosa.net**

**வி.தயாபரன்(செயலாளர்)**

# 13 ஆம் ஆண்டு நினைவலைகள்



அமரர் லயன்

**கதிர்காமத்தம்பி நாகராசா (J.P)**

(இளைப்பாறிய அதிபர் - யா/தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி)

தோற்றம் 29.11.1938

மறைவு 07.10.2006

**திதி: பூரணை (13.10.2019)**

காலங்கள் கடந்து
கோலங்கள் மாறினாலும்
என்றும் உங்கள் நினைவுகளுடன்

**குடும்பத்தினர்.**

**K.K.S. வீதி,**
**8 ஆம் கட்டை, மல்லாகம்.**

(cs 28619) (13)

# மரண அறிவித்தல்

தோற்றம் 22 . 08 . 1958



மறைவு 10 . 10 . 2019

**கதிர்காமு ஜெயராஜசிங்கம் (அருள்)**

(முன்னாள் உத்தியோகத்தர், காங்கேசன்துறை சீமெந்து கூட்டுத்தாபனம், முன்னாள் பாதுகாப்பு ஊழியர் LRDC நிறுவனம்)

வவுனியா பம்பைமடுவைப் பிறப்பிடமாகவும் ஒட்டகப்புலத்தை வசிப்பிடமாகவும் மிருசுவிலை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட **கதிர்காமு ஜெயராஜசிங்கம் (அருள்)** கடந்த (10.10.2019) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிர்காமு குஞ்சுப்பிள்ளை தம்பதிகளின் புத்திரனும் காலஞ்சென்றவர்களான ஞானப்பிரகாசம் எலிசம்மா தம்பதிகளின் மருமகனும் மேரி யோகமலரின் பாசமிகு கணவரும் காலஞ்சென்ற றோய் மில்ரனின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்றவர்களான செல்வராசா, திருநாவுக்கரசு மற்றும் துரைராஜா, வைரவநாதன், இலங்கைநாயகி, எதிர்வீரசிங்கம், வசந்தகுமாரி, சிங்கராசா காலஞ்சென்ற கணேசலிங்கம் மற்றும் செல்வராணி, பரமேஸ்வரன் (மோசஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் பாலசிங்கம் காலஞ்சென்ற தனசிங்கம் மற்றும் குணசிங்கம் காலஞ்சென்ற ஜெயசிங்கம் மற்றும் இராஜசிங்கம் காலஞ்சென்றவர்களான நவரட்ணசிங்கம், ரட்ணசிங்கம் ஆகியோரின் மைத்துனரும் காலஞ்சென்ற சாந்தி மற்றும் பரமேஸ்வரி, கோமதி, சறோஜினிதேவி காலஞ்சென்ற சிவபாதசுந்தரம் மற்றும் ... காலஞ்சென்ற உமா மகேஸ்வரன் ... மற்றும் அஞ்சலிதேவி, தேவகுமார், நிர்மலா, மஞ்சுளா, ஞானமணி, பிலோமினா, சித்திரா, பொன்மணி, பத்மா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (14.10.2019) திங்கட்கிழமை காலை 8.30 மணியளவில் அவரது இல்லத்தில் இருந்து எடுத்துச்செல்லப்பட்டு மிருசுவில் புனித நீக்கிலார் தேவாலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு புனித நீக்கிலார் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இத் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

புகையிரத நிலையவீதி, மிருசுவில் — தகவல்: குடும்பத்தினர்.

**077 616 6774, 077 497 3591**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதவி வெற்றிடம்

யாழ் நகரின் முன்னணி சைவ உணவகத்திற்கு பின்வரும் பணிகளுக்கான வெற்றிடங்கள் உண்டு. முன் அனுபவமும் சுறுசுறுப்பும் நற்பண்பும் உள்ளவர்கள் கீழ்வரும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள். 50 வயதிற் குட்பட்ட ஆண்/பெண் இருபாலாரும் தொடர்புகொள்ளமுடியும். பாதுகாப்பான தங்குமிட வசதி வழங்கப்படும்.

**01. வரவேற்பாளர்/காசாளர்**
**02. சமையலாளர்**
**03. உணவு பரிமாறுபவர்**
**04. சுத்திகரிப்பாளர்**

**077 328 7485**

# கண்ணீர் அஞ்சலி


மலர்வு 22.08.1933 உதிர்வு 10.10.2019

எமது பாடசாலையின் உப அதிபரும் சிரேஷ்ட ஆரம்பக் கல்வி ஆசிரியையுமான **திருமதி கணேசன் விமலாதேவி** அவர்களின் பாசமிகு தாயார்

**திருமதி குமாரசாமி சின்னம்மா**

அவர்கள் 10.10.2019 அன்று இறைபதமடைந்தார். அன்னாரின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். (CS 28669)

**பாடசாலைச் சமூகம்,**
**யா/சித்தன்கேணி ஸ்ரீகணேசவித்தியாலயம்,சித்தன்கேணி**

# மரண அறிவித்தல்கள்

## செல்வி சிவஞானம் வேலுப்பிள்ளை

கல்வயலைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி சிவஞானம் வேலுப்பிள்ளை நேற்று **(12.10.2019)** சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பண்டிதர் க.வேலுப்பிள்ளை - வே.சரஸ்வதி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான Dr. சிவசுப்பிரமணியம், சிவகாமசுந்தரி மற்றும் சிவயோகம், Dr. சிவபாதசுந்தரம், Dr. சிவக்கொழுந்து காலஞ்சென்ற சிவலோகநாயகி மற்றும் Dr. சிவகுமாரி ஆகியோரின் அன்புச் சகோதரியும் சிவகாமசுந்தரி காலஞ்சென்ற இராசலிங்கம் மற்றும் Dr.அருளானந்தம், Dr.சுசீலா, Dr.மோகன், சித்திராபதி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று **(13.10.2019)** ஞாயிற்றுக்கிழமை **8.00** மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். CS28431(16/17)

**கல்வயல், சாவகச்சேரி.** **தகவல்: குடும்பத்தினர்**
**076 165 3672, 077 757 0281**

## பொன்னையா மதியாபரணம்



வதிரியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா மதியாபரணம் 11.10.2019 வெள்ளிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னையா - நாகமுத்து தம்பதிகளின் இளைய மகனும், தங்கரத்தினம் அவர்களின் அன்புக் கணவரும், அப்பாக்குட்டி - சின்னம்மா தம்பதியரின் மருமகனும், தெய்வசிகாமணி, தெய்வமலர் ஆகியோரின் சகோதரனும் இரத்தினமதி (சுவிஸ்), மதியழகன் (செட்டி), மயூரன் (மயூ ரவல்ஸ்), மயூரதி, கோபிநாத் (ஆதார வைத்தியசாலை-பருத்தித்துறை) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சிவனேஸ்வரன் (சுவிஸ்), பிரதாயினி, சொரூபி, யோகராசா (கண்ணன் - C.T.B), மாருதி ஆகியோரின் பாசமிகு மாமனாரும் சிவனுஜா, சஜிந், துவயா, [illegible] இலக்கியா, மகிஷா, கௌரிசனன், தர்வின் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.10.2019) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைக்காக ஆலங்கட்டை பொது மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலைஉற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் ஏற்றுக் கொள்ளவும்

**தங்கமகால், வதிரி.** **தகவல்: குடும்பத்தினர்.**
**077 513 8177, 077 912 4056**

## வாடகைக்கு உண்டு

சுண்டுக்குழி பாடசாலை அருகில் சகல தளபாட வசதிகளுடன் கூடிய பலசரக்குக்கடை வாடகைக்கு உண்டு.
தொடர்பு- 077 724 2427, 077 741 2713

---

நீர்வேலி பூதர்மடம் ஒழுங்கையில் 3-1/2 பரப்பு காணியும் வீட்டுடன் விற்பனைக்கு உண்டு.
**தெலைபேசி: 0775 951 945**

---

**வீடு நாள் வாடகைக்கு** பத்துபேர் தங்கக் கூடிய சகல வசதிகளையும் கொண்ட வீடு நாள் வாடகைக்கு கொடுக்கப்படும்.
**077 633 3000, 075 633 3000**

## தேவை

காய்ந்த நாவல்கொட்டை, வேப்பங்கொட்டைகள் விலைக்கு வாங்கப்படும்.1Kg - 100/=
**077 170 3741**

## தேவை

யாழ்நகருக்கு அருகில் **வீடு வாடகைக்கு** தேவை.
**077 262 7877**

## விற்பனைக்கு

பருத்தித்துறை வீதி, இருபாலைச் சந்திக்கு மிக அருகில் நிலபரப்பு 2 வீட்டுடன் 6 கடையும் விற்பனைக்குண்டு.
**077 903 9066, 076 291 1261**

## காணி குத்தகைக்கு

பளை, பருத்தித்துறை, குடத்தனை. ஆகிய இடங்களில் நீண்ட கால குத்தகைக்கு காணிகள் உண்டு
**தொடர்பு: 0778435397**

## சொர்க்கம் திருமணசேவை

கனடாவில் வாழும் 30 வயதுடைய மணமகனுக்கு தகுந்த மணமகளைத் தேடுகிறோம். கனடாவில் வாழும் 42 வயதுடைய மணமகனுக்கு தகுந்த மணமகளைத் தேடுகிறோம். லண்டனில் வாழும் 37வயதுடைய மணமகனுக்கு தகுந்த மணமகளை தேடுகிறோம். அமெரிக்காவில் வாழும் 40 வயதுடைய பட்டதாரி மணமகனுக்கு பட்டதாரி மணமகளை எதிர்பார்க்கிறோம்.
**0014 1666 61855, 0014 3777 28129, 076 236 4188**
**Website: www.sorkhammatrimony.com**

## கடை வாடகைக்கு

உப்புமடச்சந்தி K.K.S வீதி, கோண்டாவிலில் அமைந்துள்ள 4கடை இடைவெளி 1700 சதுர அடி கொண்ட கடை வாடகைக்கு விடப்படும். நிறுவனாங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். (CS 28635)(14.17)
**தொடர்புகளுக்கு : 077 360 0703 + 0447472350530**

## வீடு விற்பனைக்கு

சாவகச்சேரி இந்துக் கல்லூரிக்கு மிக அண்மையில் (200m இற்கு உட்பட்ட தூரத்தில் சாரதா வீதியில்) 1 ½ பரப்புக் காணியில் அமைந்த நவீன பாணியிலான வீடு உடன் விற்பனைக்குண்டு. தரகர் தேவையில்லை. (AC 403)(14.17)
**077 958 1741**

## பணிப்பெண் தேவை

யாழ்ப்பாணத்தில் உள்ள அரச உத்தியோகத்தர் குடும்பம் ஒன்றுக்கு வீட்டில் தங்கியிருந்து பணி செய்யக் கூடிய வீட்டுப் பணிப்பெண் தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.
**077 960 4079, 077 086 8634**

## வீடு விற்பனைக்கு

யாழ்.நகருக்கு அண்மையில் காதி அபுபக்கர் வீதியில் ஒரு புது வீடும் மேலதிகமாக 2 அறைகளும் அவசர விற்பனைக்குண்டு.
**076 072 6496, 077 017 4094**

## தேவை

யாழ் நகரில் இயங்கும் சுப்பர் மார்கட் ஒன்றுக்கு பின்வரும் பணியாளர் உடன் தேவை. (CS 28668)(14.17)

1. விற்பனை உதவியாளர் - ஆண்
2. பெண் காசாளர் - பெண்
   சம்பளம் 18000.00 - 22000.00 வரை.
3. உற்பத்தி முகாமையாளர்

தொடர்புகளுக்கு:- 077 [illegible]
அலுவலக நேரம்: [illegible] - 5.30
**T.P :- 021 492 7080**

# 2014ஆம்ஆண்டும்மகிந்த எல்பிட்டியவில் வென்றார்

## சஜீவசேனசிங்கதெரிவிப்பு

கொழும்பு, ஒக்.13

எல்பிட்டியபிரதேசசபைதேர்தலின் தோல்வியை தொடர்ந்து எதிர்வரும் அரச தலைவர்தேர்தலுக்காகமுனைப்புடன் செயற்படவுள்ளோம் என்றுஅமைச்சர்சுஜீவசேனசிங்கதெரிவித்துள்ளார்.

கொழும்பில்நேற்று நடத்தப்பட்டசெய்தியாளர்சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

2014 ஆம் ஆண்டு உள்ளூராட்சி தேர்தலில் இதே போன்ற வெற்றியை மகிந்த ராஜபக்ச பெற்றிருந்த போதும் 2015 ஆம் ஆண்டு அரச தலைவர் தேர்தலில் படுதோல்வியை சந்திக்க அவருக்கு நேர்ந்தது.

எல்பிட்டியபிரதேசசபை என்பது ஐக்கிய தேசிய கட்சிக்கு சாதகமில்லாத ஒரு தேர்தல் தொகுதியாகும்-என்றார். (எ)

# எல்பிட்டிய வெற்றி போன்றே அரச தலைவர் தேர்தல் முடிவு

## மகிந்த ராஜபக்ச தெரிவிப்பு

கொழும்பு, ஒக்.13

எல்பிட்டிய பிரதேச சபைத் தேர்தலில்நாம்கூறியதன்படி பொதுமக்கள் முடிவுகளைத் தந்துள்ளார்கள். இதுதான் அரச தலைவர் தேர்தலிலும் கிடைக்கும் பெறுபேறு என எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

குருணாகல, தம்பதெனிய பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

எதிர்பார்த்த வகையில் எல்பிட்டிய பிரதேச சபைத் தேர்தலில் ஒவ்வொரு பகுதியையும் வெற்றி கொள்ள முடிந்தது. எமக்காக வாக்களித்த மக்களுக்கு நன்றிகள் - என்றார். (எ)

ராசி அதிர்ஷ்டம்
திகதி 12.10.2019 | வெற்றி வாரம் 2645 | வர்ணம் இள நீலம்
கும்பம் | வெற்றி இலக்கங்கள் 21 27 35 46 | ஞாயிற்றுக் கிழமை வெற்றிப் பொதி ரூ. 2, 000, 000/=
13.10.2019 ம் திகதி ஞாயிற்றுக் கிழமை ஊதா நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு 1919

அத கோடிபதி ADA KOTIPATHI
சீட்டிழுப்பு இல: 759 | வர்ணம் : மஞ்சள் | சீட்டிழுப்பு திகதி: 2019.10.12
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 53,760,395/-
வெற்றி இலக்கங்கள் 12 27 42 54 D
விசேட வெற்றி இல. 7753

சனிக்கிழமை அதிர்ஷ்டம்
சீட்டிழுப்பு இல.: 3247 | திகதி: 2019.10.12 | சனிக்கிழமை | பச்சை
SATURDAY FORTUNE
வெற்றி இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்து 02 10 39 62 S | போனஸ் இலக்கம் 63 | அடுத்த திங்கட்கிழமை ஜக்பொட் 64,633,535/-
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk

# முதியோர் இயல்பு வாழ்வு இல்லம்

எமது வைத்தியசாலையில் முதியோர் பராமரிப்பு சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்பதை மகிழ்வுடன் அறியத்தருகின்றோம்.

**எம்மிடம் பெற்றுக்கொள்ளக்கூடிய வசதிகள்**

- மலசலகூடத்துடன் இணைந்த குளிரூட்டப்பட்ட அறைகள்
- மலசலகூடத்துடன் இணைந்த சாதாரண அறைகள்
- ஆரோக்கியமான சூழல் (துர்க்கை அம்மன் ஆலயம் தெல்லிப்பழை முன்பாக)
- பயிற்றப்பட்ட உதவியாளர்
- வைத்திய ஆலாசனைக்கு ஏற்றவாறான உணவு பரிமாற்றம்
- தினம் தோறும் வைத்தியர் கண்காணிப்பு
- ஆலயதரிசனம் மற்றும் பொழுது போக்கு வசதிகள்
- மிகக் குறைந்த கட்டணங்களுடன் அர்ப்பணிப்பான சேவை **30000/=** இல் இருந்து.

**ஆரோக்கியமானதும், நம்பிக்கை மிக்கதுமான முதுமைக்காலத்தை மகிழ்ச்சியுடன் எதிர்கொள்ள கூட்டுறவு வைத்தியசாலைச் சங்கம், தெல்லிப்பழை (துர்க்கை அம்மன் ஆலயம் முன்பாக) தொடர்புகளிற்கு:- 077 238 0196**

விண்ணப்ப படிவங்களை வைத்தியசாலையில் பெற்றுக்கொள்ளமுடியும். CS28683(16/17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாராட்டி வாழ்த்துகின்றோம்




### அம்பிகைகுமார் அபிலக்ஷன்

யாழ்/ புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலய மாணவன் அம்பிகைகுமார் அபிலக்ஷன் தரம் 05 புலமைப்பரிசில்பரீட்சையில் **188 புள்ளிகளைப்** பெற்று சித்தியடைந்துள்ளார். எங்கள் செல்ல மருமகன் அபிலக்ஷனை அனைவரும் பாராட்டி வாழ்த்துவதோடு அவர் மேன்மேலும் பல சித்திகளை பெற இறைவனை வேண்டி நிற்கின்றோம்.

**வாழ்த்துவோர் – மாமா (கபில்ராஜ் குடும்பம்)**


# அரசியல் போர்க் களத்தில் மத, இனவாதம் ஆயுதங்கள்

## அநுரகுமார தெரிவிப்பு



கொழும்பு, ஒக்.13

அரசியல்போர்க்களத்தில்தந்திரக்காரனின் இறுதி ஆயுதங்களாக மதவாதமும்இனவாதமுமேமுன்னிலைப்படுத்தப்படுகின்றன என்று தேசிய மக்கள் சக்தியின் அரச தலைவர் வேட்பாளர் அநுரகுமார திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

கண்டிபுஸ்பதானமண்டபத்தில்நேற்று முன்தினம்நடைபெற்றபௌத்தசம்மேளன கூட்டம் ஒன்றில் கலந்துக் கொண்டுஉரையாற்றியபோதேஅவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது

இனவெறியும், மதவெறியும் தோல்வியுற்ற அரசியலின் ஒரு உடமையாக மாறியுள்ளதாது. ஒரு சிலர் தற்போது நாட்டின் மீது பெரும் பற்றுடனும், மதத்தின் மீது மிகுந்த கரிசனையுடனும் செயற்படுவதாக அரசியல் மேடைகளில் நாடகம் நடத்துவதற்கு ஆரம்பித்து விட்டனர்.

சிங்களபௌத்தஇனத்தவருக்குப்பெரும் அழிவுஏற்படப்போகின்றது. சிங்களமக்களின் எண்ணிக்கை குறைந்து மற்றைய இன மக்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் நிலைமை தற்போது ஏற்பட்டுள்ளது. அது சிங்கள இன மக்களுக்கு பெரும் அபாயகரமான நிலைமையாக மாறியிருக்கின்றது. இது எமது மனசாட்சியை தூண்டுகின்றது.

சிங்கள மக்களின் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதில்எந்தபயனும்இல்லை. சுதந்திரத்தையும் ஜனநாயகத்தையும் ஸ்தாபித்தோம் என்றும் பெருமைப்பட முடியாது. செழிப்பான அரசாட்சிபோன்று நிர்வாகத்தை ஏற்படுத்திவிட்டால் போதும் என்றும் இருக்க முடியாது.

ல்வியுற்ற ஒரு அரச நிர்வாகி இனவாதத்தைஎமதுமனதில்விதைக்கிறார். இதற்குத்தான் சிங்களத்தில் ஒரு வசனம் இருக்கின்றது. தந்திரக்காரனின் இறுதி ஆயுதங்கள் மதவாதம், மற்றும் இனவாதம் என்பதாகும். அரசியல்போர்க்களத்தில் இவ்வாறான விடயங்கள்தான் இடம்பெறுகின்றன.

முஸ்லிம் தலைவர்கள் சென்று அவர்களின்மக்களிடம்மனக்குரோதத்தைதூண்டுகிறார்கள். தமிழ்அரசியல்தலைவர்கள் தமிழ் மக்களிடம் சென்று அவர்களின் மனங்களில் குரோதத்தை தோற்றுவிக்கின்றனர். சிலசிங்களதலைவர்கள்எமது மக்களிடம் சென்று இனவாதத்தையும், மதவாதத்தையும்விதைக்கின்றனர். அது அரசியல் போராட்டமாக வெடிக்கின்றது.

இன்றுகற்சிலைகள்மறைக்கப்பட்டுவேறு வகையான சிலைகள் வெளியில் தென்படுகின்றன. பல அரசியல்வாதிகள் நமது வரலாற்று பாரம்பரியங்களை தங்கள் அரசியல் மேடைகளில் பேசு பொருளாக மாற்றியுள்ளனர். அதனைமையப்படுத்தி சகல செயற்பாடுகளும் அமைவதால் நாட்டை முன்னோக்கி நகர்த்த முடியவில்லை.

இதனால் மதத்தையும், இனத்தையும் சார்ந்து எமது அரசியல் நிகழ்ச்சி நிரலை முன்னெடுக்க மாட்டோம் என்பதை தேர்கள் முன்பாக உறுதியாக கூறிக்கொள்கின்றேன் – என்றார்.

(எ)


## மரண அறிவித்தல்

தோற்றம்
09 . 10 . 1924



மறைவு
12 . 10 . 2019

### சின்னத்தம்பி விநாயகமூர்த்தி

**(இளைப்பாறிய ஆசிரியர்)**

அளவெட்டி வடக்கைப் பிறப்பிடமாகவும் எழுதுமட்டுவாழ் வடக்கு. கோப்பாய் தெற்கு ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி விநாயகமூர்த்தி நேற்று (12.10.2019) சனிக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி கதிராசிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சந்திரசேகரம் சின்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும் சிவலோகம் அவர்களின் பாசமிகு கணவரும் சிறிதரனின் அன்புத் தந்தையும் சிறிரமணியின் அன்பு மாமனாரும் ஆதித்தன். அபிராம் ஆகியோரின் அன்பு பேரனும் காலஞ்சென்றவர்களான விசாலாட்சி. சின்னம்மா ஆகியோரின் அன்புச்சகோதரனும் காலஞ்சென்றவர்களான இராசரத்தினம். குமாரசாமி மற்றும் சரவணமுத்து. தெய்வானைப்பிள்ளை. சுந்தரலிங்கம். சிவபாக்கியம் ஆகியோரின மைத்துனரும் காலஞ்சென்றவர்களான லோகராணி. சிவநேசமலர் மற்றும் தேவராணி. சண்முகலிங்கம். காலஞ்சென்ற சத்தியபாமா மற்றும் சிறிகாந்தா. கலாவதி. தயாபரன். கலைச்செல்வி. திருச்செல்வி. தவச்செல்வி. கிருபாகரன். ஷாயினி ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.10.2019) ஞாயிற்றுக்கிழமை பி.ப 1.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோப்பாய் கந்தன்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**
**கிருபாகரன்**
**077 808 4422**

**கிராமசபை ஒழுங்கை,**
**கோப்பாய் தெற்கு, கோப்பாய்.**
(CS/28640)(11,17)


### கட்டுப்பாட்டை...

விபத்தில் சிக்கியவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்றும் தெரியவருகின்றது.

விபத்தில் உயிரிழந்தவர் அச்சுவேலி, நவக்கிரியைச் சேர்ந்த பா.நிரோ ஜன் (வயது -33) என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான விசாரணைகளைப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

(எ-26)

### வாக்குச் சீட்டு...

அச்சிடப்படுவதால் அரச அச்சகக் கூட்டுத் தாபனத்துக்குத் தற்போது சிறப்புப் பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் அவர் குறிப்பிட்டார்.

இந்த முறை அரச தலைவர் தேர்தலுக்கான வாக்குச்சீட்டின் நீளம் 26 அங்குலமாக அமைகின்றது. இது இலங்கை வரலாற்றில் மிக நீண்ட வாக்குச் சீட்டாகவும் அமைந்துள்ளது.

(எ)

# தப்பிச் செல்ல முயன்ற சந்தேக நபரின் மீது சூடு

கொழும்பு, ஒக்.14

கெக்கிராவ நீதவான் நீதிமன்ற கட்டடத் தொகுதியில் இருந்து தப்பிச்செல்ல முயன்ற சந்தேகநபர் மீது சிறைச்சாலைஅதிகாரிகள் துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளனர். துப்பாக்கிச்சூட்டால்சந்தேக நபரின் இடது காலில் காயம் ஏற்பட்டுள்ளது என்றும்,, அவர்அநுராதபுரம்வைத்தியசாலையில் அதிகாரிகளின் பாதுகாப்பின் கீழ் சிகிச்சை பெற்று வருகின்றார்என்றும்பொலிஸார்தெரிவித்தனர்.

41வயதானகலேவெல பகுதியைச் சேர்ந்த குறித்த சந்தேகநபர் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட குற்றவாளியெனவும் பொலிஸார் குறிப்பிட்டனர். சந்தேகநபர் 2017ஆம் ஆண்டுசிறைச்சாலையில் இருந்து தப்பிச் சென்றஒருவர்எனவும் பொலிஸார்கூறியுள்ளனர்.

கல்கிரியாகம பொலிஸாரால் நேற்றுமுன்தினம்கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்கெக்கிராவ நீதவான் நீதிமன்றத்தில் முற்படுத்தினர். அப்போதுசந்தேகநபர் நீதிமன்ற கட்டடத்தின் சுவரொன்றில் ஏறி தப்பிச்செல்லமுயன்றதையடுத்துபொலிஸார்துப்பாக்கி சூடு நடத்தினர் என்று தெரிவிக்கப்பட்டது.

(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பௌத்த கேந்திர நிலையமாக இலங்கை விரைவில் மலரும்

கொழும்பு, ஒக். 13

பன்னாட்டுப் பௌத்த பல்கலைக்கழகமொன்றை இந்த நாட்டில் உருவாக்கி, பிராந்தியத்தின் பௌத்த கேந்திர மத்திய நிலையமாக நாட்டை மாற்றப் போவதாக அரச தலைவர் வேட்பாளர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

கொழும்பில் பௌத்த மகா சங்கத்தினருடன் நேற்றுமுன்தினம் மேற்கொண்ட சந்திப்பின்போது அவர் இந்தக் கருத்தை வெளியிட்டார். எமது நாட்டிலுள்ள புராதன சின்னங்களைப் பாதுகாப்பதற்கு நிலையான வேலைத்திட்டமொன்றை முன்னெடுக்கவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ம)

# கோத்தாவின் கருத்து பெரும் ஆபத்தானது!

## முஜிபுர் எச்சரிக்கைத்தொனி

கொழும்பு, ஒக். 13



சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் அரச தலைவர் வேட்பாளர் கோத்தபாய ராஜபக்ச ஆட்சிக்கு வந்தால், நீதித்துறையைக் கையில் எடுக்கப்போவதாக அனுராதபுரத்தில் தெரிவித்த கருத்து பெரும் ஆபத்தானது - என்று தெரிவித்தார் முஜிபுர் ரகுமான்.

ஐ.தே.கவின் தலைமையகமான சிறிகொத்தாவில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு கூறினார்.

கோத்தபாய ராஜபக்ச தான் ஆட்சிக்கு வந்தால் சிறையில் அடைக்கப்பட்டிருக்கும் இராணுவத்தினர் அனைவரையும் விடுதலை செய்வேன் என்று குறிப்பிட்டார். நீதிமன்றத்தின் முன்னிலையில் நிறுத்தப்பட்டு, குற்றவாளிகள் என்று தீர்மானிக்கப்பட்டவர்களை விடுதலை செய்வதாகவே அவர் கூறுகின்றார். இதனால், நீதிமன்றம் முழுமையாக அவருடைய ஆதிக்கத்தின் கீழ் கொண்டுவரப்படும் என்பதையே அவர் இக்கருத்தின் ஊடாக வெளிப்படுத்தியுள்ளார். இது ஆபத்தானது - என்றார். (ம)

CaFEE

# கபேயில் 125 முறைப்பாடுகள் இதுவரையில் பதிவு

கொழும்பு, ஒக். 13

அரச தலைவர் தேர்தல் அறிவிக்கப்பட்ட தினத்தில் இருந்து இதுவரை 125 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக கபே அமைப்பு தெரிவித்துள்ளது.

125 முறைப்பாடுகளில் வேட்பு மனு தாக்கல் செய்யப்பட்ட தினத்தில் மாத்திரம் மொத்தமாக 96 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக கபே அமைப்பின் தேசிய அமைப்பாளர் மனாஸ் மக்கின தெரிவித்துள்ளார்.

அத்துடன், கிடைக்கப்பெறுகின்ற முறைப்பாடுகள் உடனடியாகவே தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கும் உரிய அதிகாரிகளுக்கும் அறிவிக்கப்படுகின்றன - என்றும் அவர் குறிப்பிட்டார். (ம)

# தொழிலாளர் காங்கிரஸ் சஜித்தை ஆதரித்தால் அதை வரவேற்கலாம்

## இராதாகிருஷ்ணன் தெரிவிப்பு

கொழும்பு,



ஐக்கிய தேசிய கட்சியின் அரச தலைவர் வேட்பாளர் சஜித் பிரேமதாசவுக்கு இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் ஆதரவு தெரிவிக்குமேயானால் அதனை நாங்கள் வரவேற்கின்றோம். எங்களுக்கு எந்தவிதமான ஆட்சேபினையும் இல்லை என மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், தமிழ் முற்போக்கு கூட்டணியின் பிரதி தலைவரும், விசேட பிரதேசங்களுக்கான அபிவிருத்தி அமைச்சருமான கலாநிதி வேலுசாமி இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

பொகவந்தலாவ பகுதியில் நேற்றுமுன்தினம் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் அரச தலைவர் வேட்பாளர் சஜித் பிரேமதாசவுக்கு இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் ஆதரவு தெரிவிக்குமேயானால் அதனை நாங்கள் வரவேற்கின்றோம். ஐக்கிய தேசிய கட்சியை வெற்றிபெறச்செய்ய யார் வந்து இணைந்தாலும் தவறு இல்லை. ஆகையால் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் ஆதரவு வழங்கினால் எங்களுக்கு எந்த விதமான ஆட்சேபிணையும்இல்லை.

அத்தோடு 2015ம் ஆண்டு கூட்டு அரசு கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாமல் போனமைக்கு காரணம் இரண்டு கட்சிகளின் இழுபறி நிலையே. எனவே எந்தவொரு காரணம் கொண்டும் இரண்டு தேசிய கட்சிகள் இணைந்து அரசை அமைப்பது இலங்கைக்கு பொருத்தமானதல்ல. இதன் காரணமாக ஒரே கட்சியில் அரச தலைவரையும், தலைமை அமைச்சரையும் தெரிவு செய்தால் அந்த ஆட்சி மக்களுக்கு நன்மை பயக்கும். அதனை உணர்ந்து மக்கள் அனைவரும் அரச தலைவர் தேர்தலிலும் எதிர்வரும் பொது தேர்தலிலும் வாக்களிக்க வேண்டும் -என்றார். (ம)

# தேர்தலுடன் தொடர்புடைய 269 முறைப்பாடுகள் பதிவு!

கொழும்பு, ஒக். 13

அரச தலைவர் தேர்தலுடன் தொடர்புடைய வன்செயல்கள் மற்றும் சட்ட மீறல்கள் குறித்து கடந்த 8ஆம் திகதி முதல் 10 ஆம் திகதி மாலை 4.30 மணி வரை நாடளாவிய ரீதியில் 269 முறைப்பாடுகள்கிடைக்கப்பெற்றுள்ளன என்று சுயாதீன தேர்தல்கள் ஆணைக் குழு தெரிவித்துள்ளது.

மேலும் 10ஆம் திகதி மாத்திரம் தேசிய தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்தில் வன்செயல்கள் தொடர்பில் இரு முறைப்பாடுகளும், சட்ட மீறல்கள் தொடர்பில் 66 முறைப்பாடுகளும், வேறு இரு முறைப்பாடுகளும் என மொத்தமாக 70 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன. இதேபோன்று மாவட்ட தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்தில் சட்டமீறல்கள்தொடர்பில்43முறைப்பாடுகளும் கிடைக்கப் பெற்றுள்ளன.

அதற்கமைய இதுவரையில் தேர்தல் வன்செயல்கள்தொடர்பில்5முறைப்பாடுகளும், சட்ட மீறல்கள் தொடர்பில் 262 முறைப்பாடுகளும், வேறு இரு முறைப்பாடு களும் என மொத்தமாக 269 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-22.31)

# எல்பிட்டியத் தேர்தலை வைத்து மக்கள் கருத்தை அறியமுடியாது

## ஜே.வி.பியின் நிலைப்பாடு இது

கொழும்பு, ஒக். 13

எல்பிட்டிய பிரதேச சபைத் தேர்தல் முடிவுகளின் மூலம் அரச தலைவர் தேர்தலில் தேசிய ரீதியிலான மக்கள் கருத்தை அளவிட முடியாது என மக்கள் விடுதலை முன்னணியின் பரப்புரைச் செயலரும் நாடாளுமன்ற உறுப்பினருமான விஜித ஹேரத் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

எல்பிட்டிய தேர்தலுடன் அரச தலைவர் தேர்தலை சிலர் ஒப்பிட்டுக் கூறினாலும், பிரதேச சபைத் தேர்தல் ஒன்றின் முடிவு அரச தலைவர் தேர்தலுக்கு ஒப்பிடுவதற்கு எந்தவகையிலும் பொருத்தமற்றது. எதிர்வரும் நாள்களில் நடைபெறவுள்ள அரச தலைவர் தேர்தலும், எல்பிட்டிய பிரதேச சபைத் தேர்தலும் ஒன்றல்ல, இரண்டும் வேறுபட்டவை - என்றார். (ம)

# அரபு மத்ரஸா பாடசாலைக்காக நிதி சேகரித்தரென ஐவர் கைது

கொழும்பு, ஒக். 13

கிழக்கு மாகாண திருகோணமலை பிரதேசத்தில் அமைக்கப்பட்டு வரும் அரபு மத்ரஸா பாடசாலையொன்றுக்கு நிதி சேகரிப்பில் ஈடுபட்ட ஐவர் வேனுடன் வெலிமட குருதலாவ பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளதாக போகஹகும்புர பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

திருகோணலை கிண்ணியா பிரதேசத்தில் வசிக்கும் மூவரும், ஹொரவ்பொத்தானையைச் சேர்ந்த ஒருவரும், மரதன்கடவலையைச் சேர்ந்த ஒருவருமே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். நிதி சேகரிப்பில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் போது இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாகவே தெரிவிக்கப்படுகின்றது. இவர்கள்31,28, 27, 33 மற்றும் 29 வயதை உடையவர்கள் எனவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். (ம)

# எல்பிட்டியத் தேர்தல் முடிவுகளை கணக்கெடுக்க வேண்டியதில்லை!

## ஐ.தே.க பொதுச்செயலர் அகிரவிராஜ் தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 13

எல்பிட்டிய பிரதேச சபையின் தேர்தல் முடிவுகளின் ஊடாக முழு நாட்டினதும் கருத்தை அளவிட முடியாது. அந்த தேர்தல் முடிவு என்பது ஒரு சிறு தொகுதி மக்களின் கருத்து என ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலர் அகில விராஜ்காரியவசம் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஐக்கிய தேசியக் கட்சி பெரிய வெற்றிகளைப் பெற்ற தேர்தல்களிலும் கூட பெந்தர, எல்பிட்டிய தொகுதிகளில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு குறைந்த வாக்குகளே கிடைத்தன. ஐக்கிய தேசியக் கட்சிக்கு கொழும்பு மத்தி, கொழும்பு வடக்கு போன்று பொதுமக்கள் முன்னணிக்கு பெந்தர, எல்பிட்டிய தொகுதிகளில் கூடிய வாக்குப் பலம் உள்ளது - என்றார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புத்தளத்தில்...

வுகள் வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் ஒதுக்கீட்டில் இருந்தே வழங்கப்பட்டன. இதற்காக வருடாந்தம் சுமார் 200 மில்லியன் ரூபா நிதி வடக்கு மாகாண நிதியில் இருந்து செலவு செய்யப்பட்டது.

வடக்கு மாகாண சபை இயங்க ஆரம்பித்த பின்னர் இந்தப் பாடசாலைகளை மீண்டும் பழைய இடங்களில் இயங்க வைக்க வேண்டும். அல்லது அவற்றை அவை தற்போது இயங்கும் மாகாணத்துடன் இணைக்க வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது.

அந்தப் பாடசாலைகள் மீளப் பழைய இடங்களில் இயங்க வேண்டும் என்று பல தடவைகள் வடக்கு மாகாண கல்வி அமைச்சு அறிவித்திருந்தது. எனினும் அது நடைமுறைப்படுத்தப்படாததால் அந்தப் பாடசாலைகளை புத்தளம் மாவட்டதுடன் இணைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. எனினும் அரசியல் காரணங்களால் அது நிறைவேற்றப்படவில்லை.

அதன்பின்னர் அந்தப் பாடசாலைகளை வயம்ப மாகாணக் கல்வி அமைச்சின் கீழ் இணைப்பதற்கு இணக்கம் காணப்பட்டது. அந்தப் பாடசாலைகளில் கற்கும் 2 ஆயிரத்து 386 மாணவர்களையும், அவற்றில் கற்பிக்கும் 167 ஆசிரியர்களையும் நிரந்தரமாக வட மேல் மாகாணத்துடன் இணைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. இந்த நடவடிக்கை 2017 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் முடிவடையும் என்று கல்வி அமைச்சின் செயலாளர் தெரிவித்தார்.

எனினும் அது 2017ஆம் ஆண்டு முழுமை பெறாததால் 2018ஆம் ஆண்டுக்கான கொடுப்பனவுகளும் வடக்கு மாகாணத்தின் நிதியில் இருந்தே வழங்கப்பட்டன. 2019ஆம் ஆண்டுக்குள் இந்தப் பிரச்சினை தீர்க்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டபோதும், 2019ஆம் ஆண்டும் வடக்கு மாகாண நிதியில் இருந்தே கொடுப்பனவுகள் வழங்கப்பட்டன.

அந்தப் பாடசாலைகள் வடக்கு மாகாண சபையின் கீழ் புத்தளத்தில் இயங்குவதால் மன்னார் மாவட்ட மாணவர்கள் பாதிப்புக்களை எதிர்கொண்டுள்ளனர். புத்தளத்தில் கற்கும் மாணவர்கள் மன்னார் மாவட்டத்தின் வெட்டுப்புள்ளியில் பல்கலைக் கழகத்துக்குத் தெரிவாகின்றனர். அதனால் மன்னார் மாவட்ட மாணவர்கள் பல்கலைக் கழகம் செல்ல முடியாத நிலமை உள்ளது.

வடக்கு மாகாண சபை கடந்த 5 ஆண்டுகளாக இவற்றைக் கணக்கில் எடுக்காது இருந்த நிலையில் இந்த விடயங்களை நாடாளுமன்ற உறுப்பினர் இ.சாள்ஸ் நிர்மலநாதன் வடக்கு மாகாண ஆளுநரின் கவனத்துக்குக் கொண்டு வந்திருந்தார். அதையடுத்து நடவடிக்கை எடுத்த வடக்கு மாகாண ஆளுநர் அந்தப் பாடசாலைகளை மேல்மாகாணத்துடன் இணைப்பதற்கு நடவடிக்கை எடுத்திருந்தார். நேற்று அந்தப் பாடசாலைகள் மேல் மாகாண ஆளுநரிடம் கையளிக்கப்பட்டன. (எ-105)

## அனைத்து...

இந்த நாட்டை இராணுவ ஆட்சியில் கொண்டு செல்ல வேண்டுமா அல்லது மக்களால் ஆளக் கூடிய அபிவிருத்தியடைந்த நாடாக மாற்ற வேண்டுமா என்பதை மக்களே தீர்மானிக்க வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

கொழும்பில் நேற்று நடந்த நிகழ்வொன்றில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தேர்தலில் வெற்றி பெறவேண்டும் என்ற நோக்கத்துக்காக இனவாதத்தையும், மதவாதத்தையும் தூண்டி நாட்டில் குழப்பங்களை ஏற்படுத்த சிலர் முயற்சிக்கின்றனர். இனவாதம், மதவாதம் பரப்புவதன் மூலமாக அதிகாரத்தை கைப்பற்ற நினைப்பது இந்த நாட்டுக்கு செய்யும் பெரும் துரோகமாகும்.

இந்த நாட்டில் சிங்கள மக்களை போலவே தமிழ் முஸ்லிம் மக்களின் ஆதரவையும் அரவணைப்பையும் பெற்றுக்கொண்டு முன்நகர வேண்டும். இல்லையேல் நாடு தீப்பற்றி எரியும். சிறுபான்மை மக்கள் மீதான அடக்குமுறையைத் தூண்டிக் குழப்பங்களை ஏற்படுத்தி அதன் மூலமாக அதிரத்தை கைப்பற்ற நினைப்பது தேசத்துரோக செயலாகும்.

இனவாதம், மதவாதத்தை தூண்டி அதன் மூலம் இந்த நாட்டில் மீண்டுமொரு கருப்பு ஜுலை கலவரம் உருவாகினால், அதன் மூலமாக நாம் சர்வதேச தரப்பிடம் இருந்து ஒதுக்கி வைக்கபட்டால் எமது நாட்டுக்கு நடப்பது என்ன?, தேசிய பாதுகாப்புக்கு ஏற்படும் நிலை என்ன?, ஒரு சிறு குழு தவறு செய்த காரணத்தால் ஒரு இனத்த நாசமாக்க எமக்கு எந்த உரிமையும் இல்லை. இவ்வாறான செயற்பாடுகள் காரணமாக இந்த நாட்டுக்கு எதிரான சக்திகள் உருவாகினால், தேசிய பாதுகாப்பு விடயத்தில் அச்சுறுத்தல் ஏற்பட்டால் அதற்கு எதிராக நடவடிக்கை எடுக்க நாம் முன்வருவோம். ஆனால் பொய்யான காரணிகளை கூறி ஒரு இனத்தை அடக்க நாம் ஒருபோதும் இடமளிக்க மாட்டோம்.

நான் எப்போதுமே இந்த மண்ணை நேசிக்கும் நபர். இந்த நாட்டை போலவே இந்த நட்டு மக்களையும் நான் நேசிக்கின்றேன். இன்று இந்த நாட்டில் வாழும் மக்கள் வாழ்வாதார ரீதியில் பெரும் அழுத்தங்களை சந்திக்கின்றீர்கள். அதை நன்றாக நான் உணர்கின்றேன். எனினும் இந்த அரச தலைவர் தேர்தலில் எமது அரசு உருவானதும் உடனடியாக வாழ்வாதார பிரச்சினைக்கு நான் உடனடியாக தீர்வை பெற்றுக்கொடுப்பேன். மக்கள் வாழும் உரிமையை நான் பெற்றுக்கொடுப்பேன். நான் எப்போதும் மக்களை அழுத்தத்துக்கு தள்ளும் முடிவுகளை எடுக்க மாட்டேன்.

மக்களை கொலை செய்து ஆட்சி செய்ய நான் ஒருபோதும் முயற்சிக்க மாட்டேன். ஆனால் கடந்த காலங்களில் தண்ணீர் கேட்ட மக்களை கொன்றவர்களும், வீடுகள் கேட்டவர்களை வீட்டை விட்டு விரட்டியடித்த ஆட்சியாளர்கள் தான் இன்று மீண்டும் தேர்தலில் போட்டியிட வந்துள்ளனர். அவர்களுக்கு இனியும் இடமளிக்க முடியாது.

நான் எப்போதும் மக்களை பாதுகாத்தல், கட்டியெழுப்பும் கொள்கையே உள்ளது. புதிய பாதையில் நவீன தொழிநுட்ப இலங்கையை நான் உருவாக்கிக்காட்டுவேன். ஒரு நாட்டின் தலைவராக வாவேண்டியவன் நாட்டில் சகல மக்களையும் சந்தித்து அனைவர் முன்னி லையிலும் பேச தெரிந்திருக்க வேண்டும். அதனை நான் செய்து வருகின்றேன். நாட்டை ஆட்சி செய்வது என்பது இயந்திர ஆட்சியோ இராணுவ ஆட்சியோ அல்ல. மக்கள் முன்னிலையில் சென்று அவர்களின் நிலைமையை அறிந்து அவர்களுக்கு சேவை செய்யும் ஆட்சியை செய்ய வேண்டும். அந்த தகுதி என்னிடம் உள்ளது- என்றார். (எ)

## தேர்தல்...

பதிவு செய்யப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்றுமுனதினம் மாலை 4.30 மணியுடன் நிறைவடைந்த கடந்த 24 மணித்தியாலங்களில் 106 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன என்றும் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அந்தக் காலப் பகுதிக்குள் தேர்தல் விதி மீறல்கள் தொடர்பாக 98 முறைப்பாடுகளும், வன்முறை சம்பவங்கள் தொடர்பாக 4 முறைப்பாடுகளும் மற்றும் வேறு 4 முறைப்பாடுகளும் பதிவு செய்யப்பட்டுள்ளன என்று தேர்தல்கள் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது. (எ)

## தபால் மூல...

வடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்றும் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகளுக்கு எதிர்வரும் 30ஆம், 31ஆம் திகதிகளில் தபால் மூலம் வாக்களிக்க சந்தர்ப்பம் வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

## குறிசுட்டான்...

இவர் கனகராயன்குளம், குறிசுட்டான் சந்திப் பகுதியில் ஈருருளியில் பயணித்தபோது, அதே வீதியால் வவுனியாவில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி ஏ9 வீதியால் பயணித்த பட்டா ரக வாகனம் மோதியது என்று கூறப்படுகின்றது. அதில் கடுகாயமடைந்த சத்தியநாதன் மாங்குளம் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். எனினும் சிசிச்சை பயனின்றி அவர் உயிரிழந்தார். விபத்தை ஏற்படுத்திய வாகனம் தப்பிச் சென்றுள்ளது. விபத்துத் தொடர்பான விசாரணைகளை மாங்குளம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (எ-ரி4,110)

## மன்னார்...

யலில் பல வருடங்களாகப் பெயர்கள் குறிப்பிடப்பட்டு தொடர்ச்சியாக சுமார் 20 வருடங்களுக்கு மேலாக வாக்களித்து வந்த சிலருடைய பெயர்கள் இந்தமுறை வாக்காளர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டுள்ளன என்றும் இது சட்டத்துக்கு முரணானது என்றும் ஹீனைஸ் பாறூக் நேற்றுமுன்தினம் தெரிவித்திருந்தார். மன்னாரில் அவர் நடத்திய ஊடக சந்திப்பில் இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்திருந் தார்.

இது தொடர்பில் மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் ஜெனிற்றனிடம் கேட்டபோது,

மன்னார் மாவட்டத்தில் ஒரு இனம் அல்லது மதம் சார்பில் 6 ஆயிரத்து 500 பேரின் பதிவுகளை நீக்கியதான குற்றச்சாட்டு தவறானது. அந்தச் சர்ச்சைக்குள் அகப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை 2 ஆயிரத்து 800 பேரைத் தாண்டவில்லை. அவர்களின் பதிவு தொடர்பான விசாரணைகள்தான் இடம்பெறுகின்றன. சட்டப்படியான மீளாய்வுக் காலத்தில் தனது கட்டுப்பாட்டுப் பகுதியில் வசிப்பதே கிடையாது என்று கிராம அலுவலர்கள் உறுதிப்படுத்தியுள்ளனர். அவ்வாறு உறுதிப்படுத்தும் உரிமை கிராம அலுவலர்களுக்கு உண்டு.

2017ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க சட்டத்தின் 6ஆவது சரத்தை தவறாகப் பயன்படுத்த முடியாது. அந்தச் சட்டத்தின் பிரகாரம் அனைவரையும் அவ்வாறே பதிய வேண்டுமெனில், ஆண்டுதோறும் புதிய தரவுகள் கோரவேண்டிய அவசியமே இருக்காது.

இதேநேரம், மன்னாரில் சில கிராம அலுவலர்கள் துணிச்சலாக நேர்மையாகச் செயற்பட முனைந்தனர். எனினும் நேரடியாகவே அச்சுறுத்தப்பட்டனர். அந்த அச்சுறுத்தல் இந்த வாக்காளர் பட்டியலின் காரணமாகவே எழுந்தது.

அச்சுறுத்துவது தொடர்பில் கிராம அலுவலர்கள் எனது கவனத்துக்குக் கொண்டு வந்திருந்தனர். நான் உடனடியாக ஆணைக்குழுவின் கவனத்துக்குக் கொண்டு சென்றிருந்தேன். ஆனால் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இவற்றின் காரணமாகவே மன்னாரில் குழப்பங்கள் உள்ளன.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மட்டுமன்றி, தமக்கு நீதி மறுக்கப்படுகின்றது என்று கருதும் எவருமே நீதிமன்றை நாடுவது அவர்களின் உரிமை என்று தெரிவித்தார். (த-105)

## கந்தளாயில்...

ட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கிளிநொச்சி, அம்பாள் குளத்தில் உள்ள சந்தேகநபரின் வீட்டில் இருந்தே ஆயுதங்கள் மீட்கப்பட்டுள்ளன. அந்த வீட்டில் இருந்த சந்தேகநபரின் மனைவி மற்றும் சகோதரி ஆகியோர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

நேற்றுமுன்தினம் இரவு சந்தேகநபர் கந்தளாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்தார். அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் நேற்று பயங்கரவாத விசாரணைப் பிரிவுப் பொலிஸார், கிளிநொச்சிப் பொலிஸார், சிறப்பு அதிரடிப் படையினர் இணைந்து கிளி நொச்சியில் உள்ள அவரது வீட்டில் சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

அங்கிருந்து ரி56 ரக துப்பாக்கி 1, சிறிய ரக துப்பாக்கிகள் 3, கைக்குண்டுகள் 5, ரி57 துப்பாக்கி ரவைகள் 154, சிறிய ரக துப்பாக்கி ரவைகள்45, மடிக் கணினி 1, தொலைபேசிகள் 4, எம் கே.எம் ஜி ரவைகள் 6, வெடிப்பு கருவிக்கான வயர்கள், வெடிப்பு கருவிகள் 4, ஜிபிஎஸ் 1, தானியக்கிகள், கமரா உள்ளிட்டவை மீட்கப்பட்டுள்ளன என்று பொலிஸ் தகவல்கள் தெரிவித்தன. கைது செய்யப்பட்டவர் முன்னாள் போராளி என்றும், சந்தேகநபர் விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றார் என்றும் பொலிஸ். ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (எ-21,6)

## அளவெட்டி...

கின்றன என்று பொலிஸார் குறிப்பிட்டனர். அவர்கள் தமது வாக்குமூலத்தில் ஜெயாகரன் போதையில் தவறுதலாக கிணற்றுக்குள் விழுந்தார் என்றே நினைக்கின்றோம் என்று தெரிவித்தனர் என்று தெல்லிப்பழைப் பொலிஸார் தெரிவித்தனர். உடற்கூற்றுச் சோதனை இன்று நடைபெறும் என்றும் அதன்பின்னரே உறுதியான தகவலைக் கூற முடியும் என்றும் என்றும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

சந்தேகநபர்கள் வழங்கிய வாக்குமூலத்தில், நால்வரும் நேற்று மதுபோதையில் காணப்பட்டனர் என்றும், அதன்போது ஜெயாகரன் கிணற்றுக் கட்டில் இருந்தார். அப்போது அவர் தடுமாறி கிணற்றுக்குள் விழுந்தார் என்று தெரிந்தது. அவர்களில் ஒருவர் அயலில் உள்ளவர்களிடம் உதவி கேட்டுக் கயிறு வாங்கி கிணற்றுக்குள் இறங்கித் தேடியுள்ளார். அவரால் ஜெயாகரனைக் கண்டுபிடிக்க முடியவில்லை. அவர் நேற்று உயிரிழந்த நிலையில் மீட்கப்பட்டார் என்று கூறினர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜெயாகரனின் உயிரிழப்பில் குடும்பத்தினர் சந்தேகம் கொண்டுள்ளனர். பொலிஸார் இந்தச் சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். உடற்கூற்றுச் சோதனை இன்று மேற்கொள்ளப்படும் என்றும் அதன்பின்னரே உயிரிழப்புக்கான காரணத்தைக் கூற முடியும் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (எ -26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசியமட்ட பளுதூக்கலில் ஆசிகா மூன்று சாதனைகள்



யாழ்ப்பாணம், ஒக்.13
தேசிய மட்ட பளுதூக்கல் போட்டியில் விஜயபாஸ்கர் ஆசிகா மூன்று சாதனைகளுடன் தங்கப்பதக்கம் வென்றார்.
இலங்கை தேசியமட்ட திறந்த வயதுப் பிரிவினருக்கான பெண்களுக்கான பளுதூக்கல் போட்டிகள் கொழும்பு டொறிங்டன் உள்ளக விளையாட்டரங்கில் நேற்று நடைபெற்றன.
இதில் வடமாகாணத்தைப் பிரதிநிதித்துவம் செய்த விஜய பாஸ்கர் ஆசிகா 64 கிலோ எடைப் பிரிவில் சினெச் முறையில் 77 கிலோ பளுவைத் தூக்கினார். கிளின் அன் ஜக் முறையில் 98 கிலோ பளுவைத் தூக்கினார். அவர் ஒட்டு மொத்தமாக 175 கிலோ பளுவைத் தூக்கினார். இந்த மூன்றும் சாதனைகள். இதனால் அவர் மூன்று சாதனைகளுடன் தங்கம் வென்றார். (ம-23,422)

# போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம்,ஒக்.13
மன்னார் கால்பந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் மரியாம்பிள்ளை எடிசனின் அனுசரணையுடன் முத்துக்கள் மூன்று புகழ் பெரியபண்டிவிரிச்சான் வள்ளுவர் விளையாட்டுக்கழகம் நடத்தும் எடிசன் வெற்றிக் கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் முத்துக்கள் மூன்று புகழ் பெரிய பண்டிவிரிச்சான் வள்ளுவர் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றது.
இதில் நேற்று சனிக்கிழமை காலை 8மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் பெரியபண்டிவிரிச்சான் வள்ளுவர் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து வட்டக்கண்டல் சுடர்ஒளி விளையாட்டுக்கழக அணி மோதியது. இதில் பெரியபண்டிவிரிச்சான் வள்ளுவர் விளையாட்டுக்கழக அணி 2 : 1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.
காலை 9 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் நானாட்டான் டைமன்ஸ்ரார் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து டிலாசால் பாளைக்குழி விளையாட்டுக்கழக அணி மோதியது. இதில் டிலாசால் பாளைக்குழி விளையாட்டுக்கழக அணி 1: 0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.
முற்பகல் 10 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் பட்டித்தோட்டம் சென்.நீக்கிலஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து கிராஞ்சி செந்தாரகை விளையாட்டுக்கழக அணி மோதியது. இதில் 1 : 0 என்ற கோல் கணக்கில் பட்டித்தோட்டம் சென்.நீக்கிலஸ் விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்றது. முற்பகல் 11 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் பெரியபண்டிவிரிச்சான் வள்ளுவர் விளையாட்டுக்கழக 'பி' அணியை எதிர்த்து அந்தோனியார்புரம் குழந்தை இயேசு விளையாட்டுக் கழக அணி மோதியது. இதில் அந்தோனியார்புரம் குழந்தைஇயேசு விளையாட்டுக் கழக அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (23)

# இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், ஒக்.13
திருநெல்வேலி காளி கோவிலடி சனசமூக நிலையத்தின் 75ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்பட்ட 10 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட கடினப்பந்து துடுப்பாட்டத் தொடரின் காலிறுதியாட்டம், அரையிறுதியாட்டம் மற்றும் இறுதியாட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் இடம் பெறவுள்ளது. இதில் காலை 9 மணிக்கு இடம்பெறும் காலிறுதியாட்டத்தில் அரியாலை மத்திய விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து திருநெல்வேலி துடுப்பாட்டக்கழக அணி மோதவுள்ளது. மேற்படி போட்டியில் வெற்றிபெறும் அணி கே.ஸி.ஸி.ஸி விளையாட்டுக்கழக அணியுடன் அரையிறுதியாட்டத்தில் மோதவுள்ளது.
இரண்டாவது அரையிறுதியாட்டத்தில் ஹட்லியைஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. அரையிறுதியாட்டத்தில் வெற்றி பெறும் அணி பிற்பகல் 2 மணிக்கு இடம்பெறும் இறுதியாட்டத்தில் மோதவுள்ளது.
இறுதியாட்ட நிகழ்வுக்கு முதன்மை விருந்தினர்களாக இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சோ. சேனாதிராசாவும், மதிப்புறு விருந்தினராக யாழ்ப்பாண மாவட்ட துடுப்பாட்டச் சங்கத் தலைவர் ஏ.எஸ்.நிசாந்தன், சிறப்பு விருந்தினராக முன்னாள் வடக்கு மாகண சபை உறுப்பினார் சுந்தரலிங்கம் சுகிர்தன், யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி முதல்வர் எஸ்.கே. ஏழில் வேந்தன், லங்கா எல்.ஓ.சி பி.எல்.சியின் உதவி முகாமையாளர் வி.சுதர்சனன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (23)

# வேம்படி மகளிர் பாடசாலை அணி அரையிறுதிக்கு முன்னேற்றம்

யாழ்ப்பாணம்,ஒக்.13
தேசிய மட்ட பாடசாலைகளுக்கு இடையிலான 20 வயதுப் பிரிவு பெண்களுக்கான கூடைப்பந்தாட்டத் தொடரில் யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் உயர் தர பாடசாலை அணி அரையிறுதியாட்டத்துக்கு முன்னேறியது.
நேற்று சனிக்கிழமை குருநாகலை றோயல் கல்லூரி கூடைப்பந்தாட்டத் திடலில் இடம்பெற்ற காலிறுதியாட்டத்தில் யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் உயர் தர பாசாலை அணியை எதிர்த்து மல்லிகாதேவா வித்தியாலய அணி மோதியது. இதில் யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் உயர் தர பாடசாலை அணி 59 : 48 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்று அரையிறுதியாட்டத்துக்கு முன்னேறியது. (23)

### யாழ். மத்திய கல்லூரி கூடைப்பந்தாட்ட அணி

# முதன்முறையாக அரையிறுதிக்குள்

யாழ்ப்பாணம், ஒக்.13
தேசிய மட்ட பாடசாலைகளுக்கு இடையிலான 20 வயதுப் பிரிவு ஆண்களுக்கான கூடைப் பந்தாட்டத் தொடரில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி முதன் முறையாக அரையிறுதியாட்டத்துக்கு முன்னேறியது.
நேற்று சனிக்கிழமை குருநாகலை றோயல் கல்லூரி கூடைப்பந்தாட்டத் திடலில் இடம் பெற்ற காலிறுதியாட்டத்தில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணியை எதிர்த்து கண்டி கிங்வுட் கல்லூரி அணி மோதியது. இதில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி 71: 58 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்று அரையிறுதியாட்டத்துக்கு முன்னேறியது. (23)





# மகுடம் சூடியது புதிய பாரதி வி.க.

யாழ்ப்பாணம், ஒக்.13
டயலொக் நிறுவனத்தின் அனுசரணையுடன் நடைபெறும் அரச தலைவர் தங்கக் கிண்ணத்துக்கான கிளிநொச்சி மாவட்ட கரப்பந்தாட்டச் சங்கத்தில் அங்கம் வகிக்கும் கரப்பந்தாட்டக் கழகங்களுக்கு இடையிலான 23வயதுப் பிரிவு ஆண்களுக்கான கரப்பந்தாட்டத் தொடரில் புதிய பாரதி விளையாட்டுக் கழக அணி கிண்ணத்தை வென்றது.
நேற்று சனிக்கிழமை கிருஸ்ண பாரதி விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெற்ற இறுதியாட்டத்தில் புதிய பாரதி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து இளந்தென்றல் விளையாட்டுக் கழக அணி மோதியது. 5 செற்களைக் கொண்டதாக இறுதியாட்டம் இடம்பெற்றது. இதில் புதிய பாரதி விளையாட்டுக் கழக அணி 3:0 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்று மகுடம் சூடியது. (23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




### இந்தியாவுக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட்

# தெ.ஆபிரிக்க அணி பொலோஒன் நிலை

இந்தியாவுக்கு எதிரான 2ஆவது டெஸ்ட் போட்டியின் முதல் இன்னிங்ஸில் தென்னாபிரிக்கா அணி 275 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்தது. இதனால் இந்திய அணி 326 ஓட்டங்கள் முன்னிலையில் காணப்படுகின்றது. இதனால் இன்றைய தினம் பெரும்பாலும் பொலோ ஒன் கொடுக்கப்படும் வாய்ப்பும் காணப்படுகின்றது. நேற்று முன்தினம் இந்திய அணி தனது முதல் இன்னிங்ஸில் 5 இலக்குகள் இழப்புக்கு 601 ஓட்டங்களைப் பெற்றது.

தென்னாபிரிக்கா அணி இந்தியாவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு 3 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி வருகின்றது. முதல் டெஸ்ட் போட்டியை இந்திய அணி கைப்பற்றியது.

நேற்றுமுன்தினம் தனது முதல் இன்னிஸ்ச்காகக் களமிறங்கிய தென்னாபிரிக்கா அணி 3 இலக்குகள் இழப்புக்கு 36 ஓட்டங்களைப் பெற்றது. களத்தில் பேர்ன் 20 ஓட்டங்களுடனும், நோர்ரேஜ் 2 ஓட்டங்களுடனும் நேற்றைய நாளுக்காகக் களமிறங்கினர். நோர்ரேஜ் ஆட்டம் ஆரம்பித்த சிறிது நேரத்திலேயே 3 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து பவிலியன் திரும்பினார். அணி 53 ஓட்டங்களைப் பெற்றபோது 5 இலக்குகளை இழந்த திணறியது. பின்னர் இணைந்த டூ பிளாசிஸ், டீ குக் சிறிது அணிக்கு நம்பிக்கையளித்தனர். எனினும் அவர்கள் இருவரும் நீண்ட நேரம் தாக்குப் பிடிக்கவில்லை. டூ பிளாசிஸ் 64 ஓட்டங்களுடனும், டீ குக் 31 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்க அணி 168 ஓட்டங்களுக்கு 8 இலக்குகளை இழந்து பரிதவித்தது. பின்னர் இணைந்த மகாராஜ்ரா, பிலண்டர் இணை இந்திய பந்து வீச்சாளர்களை பெரிதும் சோதித்தனர். இருவரும் நிலைத்து நின்று தடுத்தாடுவதில் முனைப்புக் காட்டினர். நேற்றைய நாள் முழுவதும் அவர்கள் இருவரும் நிலைத்து நின்று விடுவார்கள் என்று கணக்கிட்டாலும் அஸ்வினிடம் பந்து கொடுக்கப்பட மகாராஜ்ரா 72 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். பின்னர் இணைந்த ராபாடாவும் 2 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்க அணி 275 ஓட்டங்களைப் பெற்று சகல இலக்குகளையும் இழந்தது. பிலண்டர் ஆட்டமிழக்காமல் 44 ஓட்டங்களைப் பெற்றார்.

பந்து வீச்சில் அஸ்வின் நான்கு இலக்குகளையும், உமேஷ் யாதவ் மூன்று இலக்குகளையும், முகமது ஷமி 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

# ஹட்லியைஸ் வி.க. கிண்ணம் வென்றது

யாழ்ப்பாணம், ஒக்.13

இலங்கை கிரிக்கெட் சபையால் நடத்தப்படும் பிரிவு மூன்றுக்கான 50 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட கடினப்பந்து துடுப்பாட்டத் தொடரில் ஹட்லியைஸ் விளையாட்டுக்கழக அணி 6 ஓட்டங்களால் வெற்றி பெற்று கிண்ணத்தைக் கைப்பற்றியது.

யாழ்ப்பாணம். சென். ஜோன்ஸ்கல்லூரி மைதானத்தில் நேற்று சனிக்கிழமை இடம்பெற்ற இறுதியாட்டத்தில் ஹட்லியைஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழக அணி மோதியது. முதலில் துடுப்பெடுத்தாடிய ஹட்லியைஸ் விளையாட்டுக்கழக அணி 24 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 62 ஓட்டங்களைப் பெற்றது. இதில் பிரசாந் 11 ஓட்டங்களையும், றஜீவன் 10 ஓட்டங்களையும், நிரோசன் 8 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர். பந்து வீச்சில் வாமானன்; உமேஸ் ஆகியோர் தலா 4 இலக்குகளையும் ஜனார்த்தனன், சோபன் ஆகியோர் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழக அணி 23 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 56 ஓட்டங்களை மட்டுமே பெற்று 6 ஓட்டங்களால் வெற்றியைத் தவற விட்டது. அணி சார்பில் டிலக்சன் 9 ஓட்டங்களையும், ஜனார்த்தனன், அருண்குமார் ஆகியோர் 8 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் தனோசன் 5 இலக்குகளையும், பிரதீப் 3 இலக்குகளையும், றஜீவன், சாகித்தியன் ஆகியோர் தலா ஒவ்வோர் இலக்கையும் வீழ்த்தினர். (23)



# நடிகை அஷ்ரிதாவை கரம் பிடிக்கும் மனிஷ் பாண்டே

இந்திய கிரிக்கெட் வீரர் மனிஷ் பாண்டே தென்னிந்திய நடிகை அஷ்ரிதா ஷெட்டியைத் திருமணம் செய்ய இருப்பதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

விராட் கோலி, யுவராஜ் சிங், ஹர்பஜன் சிங் வரிசையில் இந்திய கிரிக்கெட் வீரர் மனிஷ் பாண்டே நடிகை ஒரு வரைத் திருமணம் செய்ய இருக்கிறார். தென்னிந்திய நடிகை அஷ்ரிதா ஷெட்டியை அவர் திருமணம் செய்ய உள்ளதாவும், இவர்களது திருமணம் டிசெம்பர் மாதம் இடம்பெறும் எனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

தென்னிந்திய நடிகையான அஷ்ரிதா ஷெட்டி 'உதயம் NH4', 'ஒரு கன்னியும் மூணு களவாணிகளும்', 'இந்திரஜித்' உள்ளிட்ட தமிழ்ப் படங்களில் நடித்துள்ளார்.

# பழைய மாணவர்களால் பணப்பரிசில் வழங்கல்

சாவகச்சேரி, ஒக்.13

சாவகச்சேரி மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய மகா வித்தியாலய 20 வயதுப் பெண்கள் உதைபந்தாட்ட அணி பன்னாட்டுப் போட்டிக்கு தெரிவு செய்யப்பட்டமைக்கு வித்தியாலய பழைய மாணவர்கள், அவர்களைப் பாராட்டி போட்டியில் பங்குபற்றிய வீராங்கனைகளுக்கு 50 ஆயிரம் ரூபாவை வழங்கினர். வித்தியாலய அதிபர் மற்றும் அணித் தலைவி ஆகியோரிடம் நேற்று இந்தப் பணப் பரிசில் கையளிக்கப்பட்டது. (9)






### உடற் பயிற்சிப் போட்டியில்

# கரம்பொன் சிறிய புஸ்பம் மகளிர் கல்லூரி வி.க. அணி முதலாமிடம்

யாழ்ப்பாணம், ஒக்.13

தேசிய மட்ட பாடசாலைகளுக்கு இடையிலான 20 வயதுப் பிரிவு [illegible] போட்டியில் கரம்பொன் சிறிய புஸ்பம் மகளிர் கல்லூரி அணி முதலாம் இடத்தையும், வேம்படி மகளிர் உயர் தர பாடசாலை அணி மூன்றாம் இடத்தையும் பெற்றுள்ளனர். 20 வயதுப் பிரிவு ஆண்களுக்கான உடற் பயிற்சிப் போட்டியில் ஊர்காவற்துறை சென். அன்ரனிஸ் கல்லூரி அணி இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளன. (23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 13.10.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org